
# தமிழரசு

செய்தி மக்கள்தொடர்புத் துறையின் வெளியீடு


ஏப்ரல் 2007
விலை ரூ.10/-












எம்.ஜி.ஆர். அருங்காட்சியகம்

# தமிழரசு

செய்தி-மக்கள்தொடர்புத் துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2038
பங்குனி - சித்திரை / ஏப்ரல் 2007
மலர் : 38 இதழ் : 10

**ஆசிரியர் குழு**

ஆசிரியர் மற்றும் வெளியிடுபவர் :
**சி.கோசலராமன்,** இ.ஆ.ப.,
இயக்குநர், செய்தி-மக்கள்தொடர்புத் துறை

நிருவாக ஆசிரியர்
கே.ட்டி. புகழேந்தி
துணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மை பொறுப்பாசிரியர்
மு. ஸ்ரீநாகேஷ்
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்கள்
ந. இளங்கோ
எஸ்.கே. மூர்த்தி
எஸ்.பி.எழிலழகன்

உதவி ஆசிரியர்கள்
ஆ. ராஜா
க. இராஜராஜேஸ்வரி
ஐ. இந்திராணி
இரா. சுரேஷ்
வீ.இரா. நவநீதகிருஷ்ணகுமார்

நிருபர்கள்
கோ. சண்முகம்
மாய குமரேசன்

இதழ் உதவியாளர்கள்
தி.பெரியார் சாக்ரடீசு
ஜெ. ஜெயசிம்ஹன்

புகைப்படக்காரர்
வி.ராதாகிருஷ்ணன்

கணினி வடிவமைப்பு
பி.ஏ. லூயிஸ் பெரியநாயகம்
அ. மதன்

சென்னை - தமிழரசு அச்சகத்தில்
அச்சிடப்பட்டது.

தமிழரசு அலுவலகம்,
ஓமந்தூரார் அரசினர் தோட்டம்,
அண்ணாசாலை, சென்னை-600 002.
தொலைபேசி : 25368926/25364906
தொலைநகல் : 25364906
மின் அஞ்சல் : tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tn.gov.in


## இந்த இதழில்...


- மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துச் செய்தி ........ 2
- நிதிநிலை அறிக்கை 2007 – 2008 ........ 4
- சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு மொழியாக தமிழ் – மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எழுதிய கடிதம் ........ 58
- தமிழ்நாட்டில் உற்பத்தித்துறை வளர்ந்து வருகிறது – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ........ 71
- புதுநெறி காட்டிய புரட்சிக் கவிஞர் ........ 74
- பெருமக்கள் போற்றிய பெருமகன் அம்பேத்கர் ........ 76




நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும் (குறள் : 28)


சான்றோர்களின் பெருமையை, இந்த உலகில் அழியாமல் நிலைத்து நிற்கும் அவர்களது அறவழி நூல்களே எடுத்துக்காட்டும்.

**கலைஞர்** திருக்குறள் உரையிலிருந்து...

முதலாம் பக்க அட்டை : தமிழ்நாடு சட்டப்பேரவையில் 2007-2008 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்ய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடன் வருகை தருகிறார். (23.3.2007)

இரண்டாம் பக்க அட்டை : சென்னை எம்.ஜி.ஆர். நினைவிடத்தில் புதிதாக அமைக்கப் பட்டுள்ள எம்.ஜி.ஆர். அருங்காட்சியகத்தை மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.பரிதிஇளம்வழுதி அவர்கள் தலைமையில் மாண்புமிகு பொதுப்பணி மற்றும் சட்டத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்கள் திறந்து வைத்தார். (30-03-2007)

**அனைவருக்கும் தமிழரசின்**
**இனிய தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துக்கள்**



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் **மு. கருணாநிதி** அவர்களின்

# தமிழ்ப் புத்தாண்டுத் திருநாள்

## வாழ்த்துச் செய்தி

தமிழ்ப் புத்தாண்டுத் திருநாளை இன்று **(14.4.2007)** மகிழ்ச்சியுடனும் எழுச்சியுடனும் கொண்டாடும் அருமைத் தமிழ் மக்களை அன்புடன் வாழ்த்துகிறேன்.

**2006** சட்டமன்றத் தேர்தலுக்குமுன் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தேர்தல் அறிக்கையை வெளியிட்டு, தேர்தலுக்குப் பின் தி.மு.க. ஆட்சி அமைந்தால் இந்தத் தேர்தல் அறிக்கையே நிதிநிலை அறிக்கையாக இடம்பெறும் எனத் தமிழக மக்களிடம் தெரிவிக்கப்பட்டது.

அதன்படி, தமிழக மக்களின் பேராதரவுடன் இந்த அரசு அமைந்ததைத் தொடர்ந்து தேர்தல் அறிக்கையில் இடம் பெற்ற வாக்குறுதிகள் **2006–2007** ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் இடம் பெற்றன. அந்த நிதிநிலை அறிக்கையில் இடம்பெற்ற அறிவிப்புகளில், இரண்டு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி, இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குதல், விவசாயிகளின் கூட்டுறவு வங்கிக் கடன்கள் தள்ளுபடி, சத்துணவில் வாரம் இரு முட்டை, நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு இலவச நிலம், எரிவாயு இணைப்புடன் கூடிய இலவச எரிவாயு அடுப்புகள் வழங்குதல், மூவலூர் மூதாட்டியார் திட்டத்தை மீண்டும் செயல்படுத்தி உதவி நிதியை **15** ஆயிரம் ரூபாய் என உயர்த்தி வழங்குதல், கர்ப்பிணிப் பெண்களுக்கு **6** ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்குதல், வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு ஊக்கமளித்திட உதவித் தொகை, நெசவாளர்களுக்கும் இலவச மின்சாரம், தொழில் வளம் பெருக, வேலைவாய்ப்புகள் குவிய, புதிய தொழில் ஒப்பந்தங்கள் உட்பட **111** அறிவிப்புகளுக்கு ஆணைகள் வெளியிடப் பட்டு அனைவரும் பாராட்டத்தக்கவகையில் திட்டங்கள் செயல்படத் தொடங்கி விட்டன. எஞ்சிய **74** அறிவிப்புகள் செயல்படுத்தக் கூடிய வகையில் நடவடிக்கையில் உள்ளன.

அடுத்துத் தொடர்ந்து **2007–2008**ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் பல்வேறு



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் முன்னிலையில் 21.3.2007 அன்று தலைமைச் செயலகத்தில் ரூ.10 ஆயிரம் கோடி மதிப்பீட்டில் வணிக நோக்கிலான மின்நிலையம் மற்றும் துறைமுகம் அமைத்திட அயர்லாந்து நாட்டைச் சேர்ந்த மெக்னமாரா இண்டர்நேஷனல் பிரைவேட் நிறுவனத்திற்கும், தமிழக அரசின் கடல்சார் வாரியத்திற்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்நிகழ்ச்சியின்போது மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் திரு.ஆற்காடு நா.வீராசாமி, மாண்புமிகு நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு.வெள்ளக்கோவில் சாமிநாதன், தலைமைச் செயலாளர் திரு.எல்.கே.திரிபாதி, இ.ஆ.ப. தமிழ்நாடு கடல்சார் வாரிய தலைமைச் செயல் அலுவலர் திரு.ஆர்.சம்பத்,இ.ஆ.ப. ஆகியோர் உடனிருந்தனர்.

துறைகள் சார்ந்து 182 அறிவிப்புகள் வெளியிடப்பட்டு, அவைகள் மீதும் உரிய ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு வருகின்றன.

தமிழகத்தில் உள்ள மாநகராட்சிகளும், நகராட்சிகளும் கடன் சுமையிலிருந்து விடுபட்டு, அவை தத்தம் பகுதிகளில் தரமான சாலைகள், குடிநீர் வடிகால் வசதிகள் போன்ற அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தத் தக்கவகையில் அவற்றின் நிதிநிலை சீர் பெறுவதற்காக, மாநகராட்சிகளும், நகராட்சிகளும் 1.4.2007 அன்று அரசுக்குச் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையான அசல் தொகை 430 கோடி ரூபாய், வட்டித் தொகை 363 கோடி ரூபாய் ஆக மொத்தம் 793 கோடி ரூபாய் தள்ளுபடி செய்யப்படுகிறது.


முக்கிய உணவுப் பொருள்களின் விலைகளைக் கட்டுப்படுத்தி ஏழை எளியவர்களைப் பாதுகாத்திட துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, பாமாயில், ரவை, மைதா ஆகியவைகளை நியாய விலைக் கடைகள் மூலம் குறைந்த விலையில் வழங்கும் திட்டம் இப்புத்தாண்டு நாள் முதல் சென்னை மாநகரிலும், மே திங்கள் முதல் வாரத்தில் இருந்து தமிழகத்தின் பிற பகுதிகளிலும் அறிமுகப்படுத்தப்படுகிறது.

"ஆள்வினையும் ஆன்ற அறிவும் எனவிரண்டின்
நீள்வினையான் நீளும் குடி" (குறள் 1022)

"ஆழ்ந்த அறிவும், விடாமுயற்சியும் கொண்டு ஒருவன் அயராது பாடுபட்டால் அவனைச் சேர்ந்துள்ள குடிமக்களின் பெருமை உயரும்"

– எனும் அய்யன் திருவள்ளுவரின் அருங்குறளும், அதன் பொருளும் உணர்த்தும் அறிவுரையை ஏற்று, தமிழ் மாநிலத்திலுள்ள ஒரு சாதாரண, சாமானிய, நடுத்தரக் குடும்பத்து மனிதரை – அவர் விவசாயியாகவோ, நெசவாளியாகவோ, தொழிலாளியாகவோ, வணிகராகவோ, அரசு அலுவலராகவோ எந்த வகையிலேனும் சமுதாயத்தில் ஓர் அங்கமாக இருப்பவர் என்ற முறையில் அவரும் அவரைச் சார்ந்தோர் அனைவரும் வாழ்வில் வளம் பெற்றுத் திகழ்ந்திட ஏற்ற வழிமுறைகளைக் காண்பதற்காகவே விடாமுயற்சியுடன் தொடர்ந்து பாடுபட்டு வருவதை அனைவரும் நன்கு உணர்ந்து இந்த அரசினைப் பாராட்டி வருகின்றனர்.

இவ்வேளையில், கொண்டாடப்படும் தமிழ்ப் புத்தாண்டுத் திருநாளில் என் அருமை தமிழ்ச் சமுதாயப் பெருமக்கள் அனைவருக்கும் கல்வி செழித்திட, வேலைவாய்ப்புகள் பெருகிட, செல்வ வளம் சிறந்து, சீர் நிறைந்திட என் இதயங்கனிந்து நல்வாழ்த்துகளை மீண்டும் தெரிவித்து மகிழ்கிறேன். ★



# நிதிநிலை அறிக்கை 2007 - 2008

மாண்புமிகு நிதியமைச்சர்

**பேராசிரியர் க. அன்பழகன்** அவர்கள்,

2007–2008–ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தை,

2007ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 23ஆம் நாளன்று

சட்டமன்றப் பேரவை முன் வைத்து ஆற்றிய உரை.

***மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,***

முன்னோக்கி நடைபோடும் சிங்கம், சற்று நின்று, சுற்றுமுற்றும் திரும்பிப் பார்த்துவிட்டு மீண்டும் தொடர்ந்து முன்னோக்கி நடைபோடும் என்பர். அதுவே "அரிமா நோக்கு" எனப்படும். கடந்து வந்த பாதையைச் சிங்கம் திரும்பிப் பார்த்துவிட்டு நடப்பதைப்போல; கடந்த ஓராண்டு காலச்

சாதனைகளையும், திட்டங்களையும், நடைமுறைச் செயல்பாடுகளையும், நிலைமைகளையும் நினைவு படுத்திக் கொண்டு பயணத்தைத் தொடர்வதற்குப் பாதையைச் சீர்படுத்திக்கொள்ள;

*"ஊழையும் உப்பக்கங் காண்பர் உலைவின்றித்*
*தாழா துஞற்று பவர்"*

எனும் அய்யன் திருவள்ளுவரின் குறள் வழங்கிய உறுதியை நெஞ்சில் பதிய வைத்துக் கொண்டு 2007–2008–ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்ட மதிப்பீடுகளை இந்த அரசு இம்மாமன்றத்தின் முன் வைக்கின்றது.

2. தி.மு.க. மற்றும் தோழமைக் கட்சிகளின் இலட்சிய ஒற்றுமைக்குச் சான்றாக விளங்கும் இந்த அரசு, மத நல்லிணக்கம் கொண்ட சமுதாயத்தை உருவாக்கி, மதச் சார்பற்ற முறையில் நிருவாகத்தை இன்று போல் என்றும் நடத்தும் என்ற உறுதியை அனைத்துப் பிரிவு மக்களுக்கும் அறிவிப்பதில் பெருமை அடைகிறது.

3. திராவிட இயக்க முன்னோடிகளால் தொடங்கப் பெற்று, எண்பதாண்டு காலத்திற்கு மேலாக நடைபெறுகின்ற இடஒதுக்கீடு– சமூக நீதிப் போராட்டத்தின் தொடர்ச்சியாக, களங்கள் சிலவற்றில் வெற்றி கண்டிருப்பினும், சமூக நீதிப் போரின் முழு வெற்றியை அடையாத நிலைமை இன்னமும் இருப்பதை வருத்தம் தோய்ந்திட சுட்டிக் காட்டுவதுடன், வருங்காலத் தலைமுறையினர் சமூக நீதி வாயிலாகப் பெறக்கூடிய அனைத்து உரிமைகளையும் பெறுவதற்கு, தீவிர முயற்சிகளில் திராவிட முன்னேற்றக் கழக அரசு ஈடுபடும்.


4. கடந்த ஐம்பதாண்டுகளில், இந்தியத் திருநாட்டின் அரசியல், சமூக, பொருளாதாரப் பரிமாணங்களும், உழைக்கும் வர்க்கத்தின் தேவைகளும் முற்றிலுமாக மாறிவிட்டன. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் போராடிப் பெற்றிடும் சமூக நீதியைப் பேணிக் காப்பதற் கேற்பவும், சிறுபான்மையினர் உரிமை மற்றும் பெண்ணுரிமை உள்ளிட்ட சமூக நீதியை உறுதி செய்வதற்கேற்பவும், உண்மையான கூட்டாட்சித் தத்துவம் நிலைபெறுவதற்கேற்பவும், மாநிலங் களுக்கு அதிகாரப் பரவல் – மத்திய அரசு மற்றும் மாநில அரசுகளுக்கான அதிகாரப் பட்டியலின் மறு பரிசீலனை – ஆகியவற்றுக்கான அவசியம் அதிகரித்து வருவதைக் கருத்தில் கொண்டும், இன்னும் பல காரணங்களின் அடிப்படையிலும் இந்திய ஒற்றுமை, ஒருமைப்பாடு, இறையாண்மை ஆகியவற்றைப் பாதுகாக்கும் வகையில் இந்திய அரசியல் சட்டம், காலத்தின் தேவைக்கேற்ப திருத்தங்களைப் பெற்று அமைக்கப்பட வேண்டும் என்று இந்த அரசு கொண்டுள்ள கருத்தை, வாய்ப்பு நேரும் போதெல்லாம் மத்திய அரசிடம் வலியுறுத்தும்.

5. கடந்த ஓராண்டில், உழுவோர் கடன் துயர் நீக்கியும், ஏழைகளின் பசிப்பிணி போக்கியும், உழைப்போர் நலன் காத்தும், உதவிகள் பல மகளிர்க்கு நல்கியும், ஊழியர்க்கு சலுகைகளை மீட்டெடுத்துத் தந்தும், அனைத்துத்தரப்பு மக்களின் நலம்பேணும் நடவடிக்கைகளையே தனது வெற்றிப் பாதையின் அடிச்சுவடுகளாகப் பதித்து நடை போட்டு வந்துள்ள இந்த அரசு, தான் சொன்னதை மட்டுமன்றிச் சொல்லாத பல புதிய நலத் திட்டங்களையும் நிறைவேற்றியுள்ளது.

## வேளாண்மை மற்றும் கூட்டுறவு


6. விவசாயிகளின் துயர்துடைக்கும் வகையில், 31.3.2006 அன்றைய தேதியில் நிலுவையிலிருந்த சுமார் ரூபாய் 7,000 கோடி அளவிலான விவசாயக் கூட்டுறவுக் கடன்கள் அனைத்தையும், இந்த அரசு பொறுப்பேற்ற அன்றே முழுமையாக ரத்து செய்து வரலாற்றுச் சிறப்புமிக்க ஆணையை வெளியிட்டது. தமிழகத்தின் வேளாண்துறைக்கு புத்துயிர் ஊட்டிய இந்த நடவடிக்கையால், இதுவரை 22,39,487 விவசாயிகளுக்கு, கூட்டுறவுக் கடன் தள்ளுபடிச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

7. கூட்டுறவுக் கடன்கள் ரத்து செய்யப்பட்டதைத் தொடர்ந்து, இந்தக் கடன் தொகை 5 தவணைகளில் 8 சதவீத வட்டியுடன் கூட்டுறவு அமைப்புகளுக்கு அரசால் வழங்கப் படுமென இந்த அரசு அறிவித்தது. அதற்காக, 2006–2007–ஆம் நிதியாண்டில்




ரூபாய் 1,435 கோடி ஒதுக்கப்பட்டு, இந்த நிறுவனங்கள் தொடர்ந்து செயல்பட வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதே போன்று, 2007–**2008ஆம் ஆண்டிலும் கூட்டுறவு நிறுவனங்களுக்காக ரூபாய் 1,628 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**


8. இந்த அரசு எடுத்த பல்வேறு நடவடிக்கைகளின் பலனாக, தமிழ்நாட்டில் கூட்டுறவு இயக்கத்திற்குப் புத்துயிர் ஊட்டப்பட்டு, 2006–2007–ஆம் ஆண்டில் ரூபாய் 1,153 கோடி அளவிலான புதிய பயிர்க்கடன்கள் இதுவரை வழங்கப்பட்டுள்ளன. **வரும் 2007–2008–ஆம் ஆண்டில் ரூபாய் 1,360 கோடி அளவிலான பயிர்க்கடன்கள் வழங்கப்பட ஆவன செய்யப்படும்.** விவசாயிகளுக்குக் கூட்டுறவு வங்கிகளால் வழங்கப்படும் பயிர்க்கடன்களுக்கான வட்டியை 9 சதவிகிதத்திலிருந்து 7 சதவிகிதமாகக் குறைத்து ஏற்கெனவே இந்த அரசு ஆணையிட்டுள்ளது. **வேளாண்துறையை மேலும் வலுப்படுத்த, குறைந்த வட்டி விகிதத்தில் அனைத்து விவசாயிகளுக்கும் கடன்கள் கிடைக்கச் செய்வது இன்றியமையாதது என்பதை முழுமையாக உணர்ந்து, வரும் நிதியாண்டிலிருந்து பயிர்க்கடன்களை உரிய காலத்தில் திருப்பிச் செலுத்தும் விவசாயிகளை உற்சாகப்படுத்த, இந்த வட்டி வீதம் 7 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாகக் குறைக்கப்படும். இதுமட்டுமன்றி, விவசாயிகள் நீர்ப்பாசன வசதிகளை அமைப்பதற்காக வரும் நிதியாண்டில் தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் மூலமாக ரூபாய் 100 கோடி கடனுதவி வழங்கப்படும்.**




**9. 2001–இல் அறிவிக்கப்பட்டிருந்தும் கடந்த ஐந்தாண்டுகளாக நடத்தப்படாத கூட்டுறவு அமைப்புகளுக்கான தேர்தல் வரும் மே – ஜூன் மாதங்களில் நடத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.**

**10. இந்த ஆண்டு முதல், விவசாயிகளுக்கான சிறப்புத் திட்டமாக, வறட்சி, வெள்ளம் போன்றவற்றால் ஏற்படும் பயிர் இழப்பிலிருந்து விவசாயிகளைப் பாதுகாக்கும் வகையில் வரும் நிதியாண்டில் 10 இலட்சம் விவசாயிகளுக்கு, பயிர் காப்பீடு செய்து கொள்ள நிதியுதவி அளிக்கப்படும்.** இதற்காக, ரூபாய் 15 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**11.** வேளாண்துறையில் ஏற்பட்ட தேக்கம் அறவே களையப்பட்டு, **2006–2007**ஆம் ஆண்டில் சாதனை அளவாக 54 இலட்சம் ஏக்கர் பரப்பில் நெல் பயிரிடப்பட்டு, சாதனையளவாக 78 இலட்சம் டன்



நெல் உற்பத்தி செய்யப்பட்டு, 14 இலட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. **நெல் கொள்முதல் நிலையங்களை நவீனப்படுத்தி, நெல் எடைபோடும் போது எழும் குறைபாடுகளை அறிந்து நீக்கும் வண்ணம் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் 1,100 நேரடி கொள்முதல் நிலையங்களுக்கும் நவீன எடை இயந்திரங்கள் (Electronic Weighing Machines) அளிக்கப்படும்.** கழக ஆட்சியில் அறிமுகப்படுத்தப்பட்ட விவசாயிகளுக்கான இலவச மின்சாரத் திட்டம் தொடரும்.

12. தமிழக விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களின் நலன் காக்க 2000 ஆண்டில் திமுக அரசால் அமைக்கப்பட்டு பின்னர் கலைக்கப்பட்ட தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர் நல வாரியம், தற்போது மீண்டும் ஏற்படுத்தப்பட்டு, தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத்திட்டம், மேலும் பல சலுகைகளுடன் இந்த அரசால் செயல்படுத்தப்பட்டுள்ளது. முதலமைச்சர் கலைஞர் அவர்களால் இத்திட்டம் 22.2.2007 அன்று தஞ்சையில் தொடக்கி வைக்கப்பட்டு, ஏழை விவசாயத் தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு, கல்வி உதவி, திருமண உதவி, மகப்பேறு உதவி, ஒய்வூதியம், ஈமச்சடங்கு உதவி மற்றும் இழப்பீடு போன்ற பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. **இத்திட்டத்தின் கீழ் 1.15 கோடி பயனாளிகள் குடும்பங்கள் கண்டறியப்பட்டு, 57.30 இலட்சம் குடும்பங்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. வரும் 2007–2008–ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் இந்தத் திட்டத்திற்கென ரூபாய் 152 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

13. தரிசு நிலங்களைப் பண்படுத்தி நிலமற்ற ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு இலவசமாக அளிக்கும் திட்டத்தின் முதல் மூன்று கட்டங்கள் இதுவரை செயல்படுத்தப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ், இதுவரை 71,755 ஏழை விவசாயிகளுக்கு, 77,117 ஏக்கர் நிலம் பண்படுத்தி அளிக்கப்பட்டுள்ளது. நிலமற்ற ஏழைகளின் சமூகப் பொருளாதார வாழ்வில் ஒரு புதிய அத்தியாயத்தை தொடங்கி வைத்துள்ள இந்தப் புரட்சிகரமான திட்டம், வரும் ஆண்டுகளிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

14. விவசாயிகளுக்கு அதிக வருவாய் அளிக்கக்கூடிய தோட்டக்கலைப் பயிர்களின் உற்பத்திக்கு இவ்வரசு முன்னுரிமை அளித்து வருகிறது. தேசிய தோட்டக்கலைத் திட்டத்தின் கீழ் மா, முந்திரி, மஞ்சள், மருத்துவ நறுமணப் பயிர்கள் மற்றும் மலர்கள் 14 மாவட்டங்களில் பயிரிடப்படுகின்றன. 2007-2008ஆம் ஆண்டில் இத்திட்டம் 77,300 ஏக்கர் பரப்பளவில் ரூபாய் 98 கோடி செலவில் செயல்படுத்தப்படும். **நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தும் நோக்குடன், 2007–2008ஆம் ஆண்டில் நுண்ணீர்ப் பாசனத் திட்டத்தின் கீழ், 50 விழுக்காடு மானியத்துடன் 1,30,100 ஏக்கர் பரப்பில் ரூபாய் 104 கோடி செலவில் நுண்ணீர்ப் பாசன வசதிகள் செய்து கொடுக்கப்படும்.** கரும்பு விவசாயிகள் பயன்பெறும் வகையில், நீரின் தேவையை 40 விழுக்காடு குறைத்து கரும்புப் பயிரை வறட்சியிலிருந்து காக்கவல்ல உரச்சத்து கலந்த நுண்ணீர்ப் பாசன முறை 74,100 ஏக்கர் பரப்பளவில் 50 சதவீத மானியத்துடன் செயல்படுத்தப்படும்.

**15. முந்திரி ஏற்றுமதியை அதிகரித்து முந்திரி விவசாயிகளின் வருவாயைப் பெருக்கும் வகையில், தமிழ்நாடு தொழில் முன்னேற்றக் கழகம் (TIDCO) தனியார் தொழில் முனைவோருடன் இணைந்து, பண்ருட்டியில் நவீன முந்திரி பதப்படுத்தும் தொழிற்சாலையை ரூபாய் 17 கோடி மதிப்பீட்டில் அமைக்கும்.** இத்திட்டத்திற்கான தொழில் முனைவோர் தேர்வு செய்யப்பட்டுள்ள நிலையில் இந்நவீன பதப்படுத்தும் தொழிற்சாலை ஒராண்டில் செயல்படத் தொடங்கும்.

**16. நமது விவசாயிகள், வேளாண்மையில் விஞ்ஞான முறையில் நவீன உத்திகளைப் பயன்படுத்தினால் மட்டுமே அதிக வருவாய் ஈட்ட முடியும். அதற்கேற்ப, அனைத்து மாவட்டங்களிலும் 2007–2008ஆம் ஆண்டில் ரூபாய் 3 கோடி செலவில் துல்லியப் பண்ணைத் திட்டம் (Precision farming) செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் கீழ், விளக்கப் பண்ணைகள் (Demonstration Farms) மூலம் தமிழ்நாடு வேளாண்மைப்**

**பல்கலைக்கழகம் நவீன உத்திகளை விவசாயிகளுக்குக் கொண்டு செல்லும்**. இந்தத் துல்லியப் பண்ணைமுறையை நமது விவசாயிகள் கடைப்பிடித்தால் கரும்பு, பருத்தி, காய்கனிகள் ஆகியவற்றின் உற்பத்தி இருமடங்கு வரை அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. விவசாயிகளுக்கு நவீன தொழில்நுட்பங்கள் குறித்த விரிவாக்கப் பணிகளைச் செம்மையான முறையில் மேற்கொள்ளும் வகையில் வேளாண்மைத் துறையின் விரிவாக்க அலுவலர்களுக்கு ரூபாய் 123 இலட்சம் செலவில் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்படும். **ஆஸ்திரேலியா மற்றும் இஸ்ரேல் போன்ற நாடுகளுக்கு நமது முன்னோடி விவசாயிகளை அழைத்துச் சென்று, அங்கு நடைமுறையிலுள்ள நவீன விவசாயத் தொழில்நுட்ப முறைகளை நமது விவசாயிகள் கண்டுவந்து அவற்றை நமது மாநிலத்தில் பின்பற்றுவதற்கான வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.**

## கால்நடை வளர்ப்பு

17. விவசாயிகள் கூடுதல் வருவாயை ஈட்டுவதற்குக் கால்நடை வளர்ப்பு துணைபுரிகிறது. எனவே கால்நடை வளர்ப்புக்கு, குறிப்பாகப் பால் உற்பத்தியைப் பெருக்குவதற்கு, இந்த அரசு ஊக்கமளித்து வருகிறது. இந்த வகையில், பால் கொள்முதல் செய்தல் மற்றும் பதப்படுத்துதல் போன்றவற்றிற்கான வசதிகளை மேம்படுத்தும் நோக்கத்துடன், கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர் சங்கங்களுக்குப் பெரிய அளவிலான குளிர் சாதனங்கள் (Bulk Coolers) வாங்குவதற்கு ரூபாய் 1 கோடி மானியமும், துருப்பிடிக்காத எஃகுக் கலன்கள் வாங்குவதற்காக ரூபாய் 1 கோடி மானியமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.




## பாசனம்

18. இந்தியாவில் உள்ள பல்வேறு மாநிலங்களின் ஒற்றுமைக்கும், ஒருமைப் பாட்டிற்கும், இறையாண்மைக்கும் ஊறு விளைவிக்கும் வகையில் நதிநீர்ப் பங்கீடு பிரச்சினைகள் உருவாவதைத் தடுத்திட முதலில் தீபகற்ப நதிகளையாவது இணைத்திட வேண்டும் என்ற கோரிக்கையை அவசர அவசியம் கருதி உடனடியாக நிறைவேற்றும் பணி, மத்திய அரசால் தொடங்கப் பெற இந்த அரசு தொடர்ந்து தீவிர முயற்சி மேற்கொள்ளும்.

19. கடந்த 16 ஆண்டுகளாகப் பெரிதும் எதிர்பார்க்கப்பட்டு வந்த காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பு, தமிழக விவசாயிகளுக்கு ஓரளவு ஆறுதல் அளிப்பதாக இருப்பினும், தமிழ்நாட்டின் தேவைகள் முழுமையாக நிறைவேற்றப் படாததையொட்டி, அனைத்துக் கட்சிகளின் கூட்டம் கூட்டப்பட்டு, இந்தத் தீர்ப்பினால் ஏற்படக்கூடிய சாதக பாதகங்களை ஆய்ந்து அந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில், நடுவர் மன்றத்தில் சட்டப்படி உரிய காலத்தில் விளக்கம் கோரும் மனு தாக்கல் செய்ய இந்த அரசு முடிவு செய்துள்ளது.

20. அண்டை மாநிலங்களிடையே சுமுகமான உறவு நிலவுவதற்கான அணுகுமுறையை இந்த அரசு தொடர்ந்து கடைப்பிடிக்கும் அதே வேளையில், முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை உயர்த்துதல் மற்றும் பாலாற்றின் குறுக்கே தடுப்பணை அமைப்பதற்கான முயற்சி போன்ற, தமிழக விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கக்கூடிய பிரச்சினைகளில் அவர்களின் உரிமைகளை முழுமையாகக் காத்திடத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் இந்த அரசு மேற்கொள்ளும்.

21. தமிழகம் நீர்ப் பற்றாக்குறை மாநிலமாக இருப்பதைக் கருத்தில் கொண்டும் மாநிலத்திலுள்ள

ஆற்று வடிநிலங்களைப் புனரமைக்கும் நோக்கத்துடனும், நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டத்தை தி.மு.க அரசு மிகச் சிறப்பாகச் செயல்படுத்தியதை அனைவரும் அறிவீர்கள். இதன் தொடர் திட்டமாக, இந்தியாவிலேயே முதல் முறையாக, நீர்ப்பாசனத் துறை மட்டுமன்றி நீரைப் பயன்படுத்தும் மற்ற துறைகளான வேளாண்மை, தோட்டக்கலை, மீன்வளம் மற்றும் கால்நடைப் பராமரிப்பு ஆகிய அனைத்துத் துறைகளையும் ஒருங்கிணைத்து, **இந்த அரசால் செயல்படுத்தப்படவிருக்கும் நீர்வள நிலவளத் திட்டத்திற்கு (Irrigated Agriculture Modernisation and Water Bodies Restoration and Management Project) உலக வங்கி ஒப்புதல் அளித்துள்ளது. ரூபாய் 2,547 கோடி மதிப்பீட்டிலான இத்திட்டம், மாநிலத்திலுள்ள 63 துணை வடிநிலங்களில், வரும் 6 ஆண்டுகளில் செயல்படுத்தப்படும்.**

22. இந்தத் திட்டத்தின் கீழ், மாநிலத்திலுள்ள நீர்ப்பாசனக்கட்டமைப்பை மேம்படுத்துதல், அணைக்கட்டுகள் மற்றும் ஏரிகளைச் சீரமைத்தல் போன்ற பணிகளோடு, தொழில்நுட்ப உதவிகளின் வாயிலாகவும் வேளாண்மை உற்பத்தி மேம்படுத்தப்படும். மேலும் உயர் மதிப்புள்ள வணிகப் பயிர்களைப் பயிரிடவும் அறுவடைக்குப் பிந்தைய தொழில் நுட்பம் குறித்தும் தேவையான பயிற்சிகள் அளிக்கப்படும். நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தும் நோக்கத்துடன் சொட்டு நீர்ப்பாசனம் மற்றும் பண்ணைக் குட்டைகள் ஆகியவற்றை அமைப்பதற்கும் உதவிகள் வழங்கப்படும். இதுமட்டுமன்றி, கால்நடைப் பராமரிப்பு, மீன் வளர்ப்பு மூலமாக விவசாயிகளின் வருவாயைப் பெருக்கும் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

**23. நீர்வள நிலவளத் திட்டத்தின் கீழ் முதல் ஆண்டில், வராக நதி, மேல்வெள்ளாறு, தெற்கு வெள்ளாறு, ஆழியாறு, பாலாறு (கோவை), பாம்பாறு, கோட்டக்கரையாறு, மணிமுத்தாறு (சிவகங்கை), அர்ஜுனா நதி. பொய்னியாறு, கௌன்டின்ய நதி, கூவம் ஆறு ஆகிய 12 துணை வடிநிலங்களில் பணிகள் 2007–2008 நிதியாண்டில் தொடங்கப்படும். இதற்காக ரூபாய் 260 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**"இந்த அரசால் செயல்படுத்தப்படவிருக்கும் நீர்வள நிலவளத் திட்டத்திற்கு உலக வங்கி ஒப்புதல் அளித்துள்ளது. ரூபாய் 2,547 கோடி மதிப்பீட்டிலான இத்திட்டம், மாநிலத்திலுள்ள 63 துணை வடிநிலங்களில், வரும் 6 ஆண்டுகளில் செயல்படுத்தப்படும்".**

24. காவிரி தீரத்து மாவட்டங்களில் சிற்றாறுகளையும் வாய்க்கால்களையும் தூர்வாருதல் மற்றும் பாசனக் கட்டமைப்புகளைப் பழுதுபார்த்தல் போன்ற பணிகளுக்கு இந்த அரசு பொறுப்பிலுள்ள போதெல்லாம் முன்னுரிமை அளித்து வந்துள்ளது. இப்பணிக்கு ரூபாய் 40 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**25. கடலூர் மாவட்டத்தில் திட்டக்குடி வட்டத்தில் உள்ள வெலிங்டன் ஏரியில், ரூபாய் 20 கோடி மதிப்பீட்டில் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, கரைகள் பலப்படுத்தப்படும். இப்பணிகளால், இந்த நீர்த்தேக்கத்தின் நிர்ணயிக்கப்பட்ட கொள்ளளவான 2.58 டி.எம்.சி. வரை நீரைத் தேக்க இயலும்.**

26. தாமிரபரணி ஆற்றில் மழைக்காலங்களில் வீணாகக் கடலில் கலக்கும் உபரி நீரைத் தேக்கி, வறண்ட பகுதிகளான இராதாபுரம், நாங்குநேரி, திசையன்விளை, சாத்தான்குளம் மற்றும் திருச்செந்தூர் ஆகிய பகுதிகளுக்கு கால்வாய்கள் மூலம் கொண்டு செல்வதற்கான, தாமிரபரணி ஆற்றின் மழைக்கால உபரி வெள்ளநீர் கால்வாய் திட்டத்தினை, ரூபாய் 198 கோடி மதிப்பீட்டில் நிறைவேற்ற வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது. **தென் மாவட்ட மக்களின் நலன் கருதி, இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகள் பற்றி ஆய்வு செய்து, உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.**

## பொது விநியோகத் திட்டம்

27. பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் அரிசியின் விலையைக் குறைத்து, இந்தியாவிலேயே மிகக் குறைவான விலையில், இரண்டு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி வழங்கி வருகிறோம். இதன் காரணமாக கடந்த பத்து மாதங்களாக வெளிச்சந்தையில் அரிசியின் விலை உயராமல் கட்டுப்பாட்டிற்குள் உள்ளது. இதுபோன்றே, **பொதுமக்கள் அன்றாடம் பயன்படுத்தும் அத்தியாவசிய உணவுப் பொருட்களான பருப்பு வகைகள், சமையல் எண்ணெய் ஆகியவற்றின் விலைகளைக் கட்டுப்படுத்தி, ஏழை, நடுத்தரக் குடும்பங்களைப் பாதுகாக்கும் உடனடி தற்காலிக நடவடிக்கையாக, இப்பொருள்களை அரசே கொள்முதல் செய்து நியாயவிலைக் கடைகள் மூலமாகப் பொது மக்களுக்கு வழங்கிட முடிவு செய்யப்பட்டுள்ளது.**

28. அத்தியாவசியப் பொருட்களை ஆன்லைன் வர்த்தக முறையில் (On-line Trading) வாங்கி விற்பது அவற்றின் விலை வெகுவாக உயர வழிவகுத்துள்ளது என்பதால், பருப்பு வகைகளை இம்முறையில் வாங்கி விற்க மத்திய அரசு தற்காலிகத் தடை விதித்துள்ளது. இதனை வரவேற்கும் அதே வேளையில்; மற்ற பொருள்களின் விலை உயர்வையும் கருத்தில் கொண்டு அனைத்து அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கும் இத்தகைய தடை விதிக்கப்பட வேண்டும் என்று இந்த அரசு மைய அரசை வலியுறுத்தியுள்ளது.

29. பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு வரும் அரிசியைக் கள்ளச் சந்தையில் விற்பனை செய்வதைத் தடுப்பதற்காகப் பல்வேறு நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்துள்ளது. பொது விநியோகத் திட்டத்திலுள்ள போலிக் குடும்ப அட்டைகளை நீக்கவும், தகுதியுள்ள குடும்பங்களுக்குப் புதிய அட்டைகள் வழங்கவும் பொது விநியோகத் திட்டம் சீராக நடைபெறுவதை கண்காணிக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இரண்டு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி வழங்கப்படுவதற்கான திட்டம் உட்பட, உணவு மானியத்திற்காக 2007–2008 ஆம் ஆண்டுக்கு ரூபாய் 1,950 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**30. தமிழ்நாட்டிலுள்ள அனைத்து நியாய விலைக் கடைகளிலும் நவீன எடைபோடும் இயந்திரங்கள் மூலமாக, சரியான எடையில் அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்படும்**




**வகையில், அந்த இயந்திரங்கள் இல்லாத 23,601 கூட்டுறவு நியாய விலைக் கடைகளுக்கும் அவற்றை வழங்க, ரூபாய் 11.5 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## சட்டம் ஒழுங்கு

31. சட்டம் ஒழுங்கைச் செம்மையாகப் பராமரிப்பதிலும், பயங்கரவாதம் தலைகாட்டாமல் தடுப்பதிலும் விழிப்புணர்வுடன் செயலாற்றி வருகின்ற இந்த அரசு, குறிப்பாகக் கடலோரப் பகுதிகளில் தீவிரவாத அமைப்புகளின் ஊடுருவலைத் தடுக்கும் வகையில் மிகுந்த எச்சரிக்கையுடன் விளங்குகிறது. புதிய

> **"பொது விநியோகத் திட்டத்திலுள்ள போலிக் குடும்ப அட்டைகளை நீக்கவும், தகுதியுள்ள குடும்பங்களுக்குப் புதிய அட்டைகள் வழங்கவும் பொது விநியோகத் திட்டம் சீராக நடைபெறுவதை கண்காணிக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன".**

சவால்களைச் சந்திப்பதற்கு ஏதுவாக காவல் துறையைச் சீரமைக்கவும், காவலர் நலன் காக்கவும் மூன்றாவது போலீஸ் கமிஷன் இந்த அரசால் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், 2006-2007ஆம் ஆண்டில் காவல்துறையை நவீனமயமாக்கும் திட்டத்தின் கீழ் ரூபாய் 68 கோடி மதிப்பீட்டில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ரூபாய் 20 கோடி மதிப்பீட்டில் காவல்துறைத் தலைவர் அலுவலகத்திற்குக் கூடுதல் கட்டடம் மற்றும் ரூபாய் 21 கோடி மதிப்பீட்டில் சென்னை மாநகரக் காவல் துறை ஆணையர் அலுவலகக் கட்டடம் ஆகியவற்றைக் கட்டுவதற்கு இந்த அரசு அனுமதி அளித்துள்ளது. மேலும், ரூபாய் 3 கோடி செலவில் திருவாரூர் மாவட்டக் காவல்துறை கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்டப்படும். மொத்தமாக, 2007-2008ஆம் நிதியாண்டில், காவல்துறைக்கு ரூபாய் 2,136 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

32. சிறைகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும், குறிப்பாகப் பெண் கைதிகளுக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுக்கவும், வரும் நிதி ஆண்டில் பல திட்டங்கள் செயல்படுத்தப்படும். சிறைத்துறைக்கு ரூபாய் 96 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

33. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித் துறையின் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக ரூபாய் 204 கோடி மதிப்பீட்டில் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு மைய அரசின் நிதி உதவி கோரப்பட்டுள்ளது. இத்துறைக்கு, ரூபாய் 124 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## நீதிமன்றங்கள்

34. சென்னை உயர்நீதிமன்றத்தின் அனைத்து அலுவல்களிலும் தமிழ் மொழியை வழக்கு மொழியாகப் பயன்படுத்த வேண்டும் என்ற இந்த அரசின் கொள்கை முடிவிற்கேற்ப, சட்டமன்றப் பேரவையில் ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மேதகு ஆளுநர் அவர்களின் பரிந்துரையும் பெறப்பட்டு, குடியரசுத் தலைவர் அவர்களின் ஒப்புதல் பெற்று அளித்திட மைய அரசு கேட்டுக்கொள்ளப்பட்டது. சென்னை உயர்நீதிமன்றமும் கொள்கை அளவில் இதனை ஏற்றுக்கொண்டுள்ளது. இத்தீர்மானத்திற்கு ஒப்புதல் அளிப்பதில் சிக்கல் இருப்பதாக மத்திய அரசு சுட்டிக்காட்டி எழுதியுள்ளதை ஏற்க இயலாத நிலையில்; பொருத்தமானதும் ஆதாரபூர்வமானதுமான காரணங்களை நமது முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தொகுத்து அளித்த பின்னர், அந்தக் காரணங்களையும் தமிழ் மக்களின் ஆர்வத்தையும் மதித்து, உயர்நீதிமன்ற வழக்கு மொழியாகத் தமிழ் இடம்பெறுவதற்கான வாய்ப்பு உருவாகும் என்ற உறுதியை மத்திய அரசு அளித்தமைக்காக என்றென்றும் நன்றி உடையவர்களாக இருப்போம்.


35. நீதிமன்றக் கட்டடங்கள் மற்றும் நீதிமன்ற அலுவலர்களுக்குத் தேவையான குடியிருப்புகளை அமைப்பதற்கு அண்மையில் முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததையொட்டி ரூபாய் 300 கோடி செலவிடக் கருதப்பட்டுள்ளது. இந்தப் பணிகள், படிப்படியாக வரும் நான்காண்டுகளில் நிறைவேற்றப்படும். முதற்கட்டமாக, **நீதிமன்றக் கட்டடங்கள் மற்றும் குடியிருப்புகள் கட்டும் பணிகள் ரூபாய் 125 கோடி மதிப்பீட்டில் வரும் நிதியாண்டில் மேற்கொள்ளப் படும். மேலும், 50 விரைவு நீதிமன்றங்களும் தேவைக்கேற்ப புதிய நீதிமன்றங்களும் அமைக்கப்படும்.** மொத்தமாக, நீதித் துறைக்கு

**“சிறைகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும், குறிப்பாகப் பெண் கைதிகளுக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுக்கவும், வரும் நிதி ஆண்டில் பல திட்டங்கள் செயல்படுத்தப்படும். சிறைத்துறைக்கு ரூபாய் 96 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ”**

2007-2008ஆம் நிதி ஆண்டில் ரூபாய் 270 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## போக்குவரத்துப் பாதுகாப்பு

36. அதிகரித்துவரும் வாகனப் போக்குவரத்தின் விளைவாக, நாளும் நிகழும் விபத்துகள் மற்றும் அவற்றால் ஏற்படும் உயிரிழப்புகள் ஏற்படாமல் தடுக்கும் நோக்குடன், ஒரு விரிவான சாலைப் போக்குவரத்து பாதுகாப்புக் கொள்கை வகுக்கப்பட்டு செயல்படுத்தப்படும். இந்தக் கொள்கையின் அடிப்படையில், சாலைகளை மேம்படுத்துதல், பாதுகாப்பாக வாகனங்களை ஓட்டுதல், வேகக்கட்டுப்பாடுகள், சாலை விதிகளை உறுதியாக நடைமுறைப்படுத்துதல் மற்றும் விபத்துகளில் காயமடைந்தோருக்கான அவசர




உதவி போன்ற பல்வேறு இனங்கள் குறித்த பணிகளை இந்த அரசு மேற்கொள்ளும். சாலை விபத்துகளைக் குறைக்கும் நோக்கில் செயல்படுத்தப்படவுள்ள முக்கியப் பணிகள் பின்வருமாறு:–

- தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 49 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சாலைப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும். இதன்கீழ், அடிக்கடி விபத்துகள் ஏற்படக்கூடிய சாலைப் பகுதிகள் (Black Spots) கண்டறியப்பட்டு விபத்துத் தடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

- தமிழ்நாடு நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டம்–III ன் கீழ், சென்னை மாநகரப் பகுதிகளில் ரூபாய் 14 கோடி செலவில் போக்குவரத்து மற்றும் சாலைப் பாதுகாப்புப் பணிகள் செயல்படுத்தப்படும்.

- சாலைப் பாதுகாப்பு நிதியின் கீழ் ரூபாய் 6 கோடி செலவில் வழிகாட்டிப் பலகைகள் அமைத்தல், சாலைப் பாதுகாப்புப் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்துதல் ஆகியன மேற்கொள்ளப்படும்.

- வாகன ஓட்டிகள் குடிபோதையில் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டால் கடுமையான தண்டனை வழங்கவும் ஓட்டுநர் உரிமத்தை தற்காலிகமாகவோ நிரந்தரமாகவோ ரத்து செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

- சாலை விபத்துகளில் உயிரிழப்புகள் ஏற்படுவதற்குத் தலைக் காயங்களே முக்கியக் காரணம் என்பதைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாட்டில் வரும் ஜூன் 1 முதல் மாநகராட்சிப் பகுதிகளிலும், ஜூலை 1 முதல் மாநிலத்தின் பிற பகுதிகளிலும் ஹெல்மெட் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.


## பள்ளிக் கல்வி

37. மாணவர்களுக்கு இலவசப் பாடநூல் வழங்கும் திட்டத்திற்காக, வரும் நிதி ஆண்டில் ரூபாய் 54 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், மாணவர்களுக்கு இலவசச் சீருடை வழங்கும் திட்டத்திற்காக ரூபாய் 58 கோடியும், +1 மாணவர்களுக்கு இலவச மிதிவண்டி வழங்கும் திட்டத்திற்காக ரூபாய் 102 கோடியும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாணவர்களுக்கான இலவச மற்றும் சலுகை விலையில் பேருந்து பயணச்சீட்டு வழங்க, அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு மானியமாக ரூபாய் 300 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. **பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்குச் செல்ல மாணவர்கள் பயன்படுத்தும் தனியார் ஒப்பந்த ஊர்திகளுக்கு விதிக்கப்படும் காலாண்டு வரி, இருக்கைக்கு ரூபாய் 150 என கடந்த ஆட்சியில் பன்மடங்கு**

**உயர்த்தப்பட்டது. இவ்வரிப் பளுவைக் குறைக்க வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்று, இந்தக் கட்டணக் குறைப்பு மாணவர்களுக்குப் பயன்படுவதாக இருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன், பள்ளி மாணவர்களை ஏற்றிச் செல்லும் ஊர்திகளுக்கு ரூபாய் 50 என்றும், கல்லூரி மாணவர்களை ஏற்றிச் செல்லும் ஊர்திகளுக்கு ரூபாய் 100 என்றும் குறைத்து இந்த வரி வசூலிக்கப்படும்.**


**38.** 'அனைவருக்கும் கல்வி' திட்டத்தின் கீழ் மாநில அரசின் பங்காக, ரூபாய் 375 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அரசுப் பள்ளிகளில் உள்ள அனைத்துப் பணி இடங்களும், காலமுறை ஊதியத்தில் நிரப்பப்பட்டு வருகின்றன. தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்குத் தேவையான **12,464** வகுப்பறைகள், ரூபாய் **332** கோடி செலவில் கட்டப்பட்டு வருகின்றன. நபார்டு வங்கியின் நிதி உதவியுடன் அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலை பள்ளிகளுக்குத் தேவையான வகுப்பறை மற்றும் ஆய்வகக் கட்டடங்கள் கட்டுவதற்காக, வரும் நிதி ஆண்டில் ரூபாய் 150 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. **வரும் கல்வியாண்டில் 100 நடுநிலைப்பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 80 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் நிலை உயர்த்தப்படும்.**

**39.** தொடக்கப் பள்ளிகளில் கல்வியின் தரம் உயர்த்தப்பட்டால்தான் மாணவர்களின் மேல்




வகுப்புக் கல்வி சிறப்பாக அமையும். அந்த நோக்கில், **செயல்வழி முறையில் கற்பதினால் மாணவர்கள் பாடங்களை எளிதில் புரிந்துகொண்டு கற்க இயலும் என்பதால், இம்முறை தமிழகத்திலுள்ள அனைத்துத் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளிலும் உள்ள 1 முதல் 4 வகுப்புகளில் செயல்படுத்தப்படும்.**


**40.** இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, **24,642** ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்பட்டு, மேலும், **8,837** ஆசிரியர் பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தரமான கல்வியை உறுதி செய்யும் வகையில் **7,979** புதிய




ஆசிரியர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு அனைத்து ஆசிரியர் பணியிடங்களும் வேலைவாய்ப்பகங்கள் மூலம் காலமுறை ஊதியத்தில் நிரப்பப்பட்டு வருகின்றன. **'அனைவருக்கும் கல்வி' திட்டத்தின் கீழ் 1 முதல் 8 வகுப்புகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு** ஆண்டுதோறும் 20 நாள் மறுபயிற்சி அளிக்கப்படுகிறது.

**41. கல்வியில் பின்தங்கியுள்ள மாவட்டங்களான தருமபுரி, விழுப்புரம், ஈரோடு, பெரம்பலூர், சேலம், வேலூர், திருவண்ணாமலை மற்றும் கடலூர் ஆகிய மாவட்டங்களில் மாணவர்கள் குறைவான சதவீதத்தில் தேர்ச்சி பெற்ற பள்ளிகளைக் கண்டறிந்து அப்பள்ளி மாணவர்களுக்கு, சிறப்புப் பயிற்சி அளிக்கும் திட்டம் ரூபாய் 123 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படும்.**

42. 1999–2000ஆம் ஆண்டில் தி.மு.கழக ஆட்சியில்தான் அரசு மேல்நிலைப் பள்ளிகளில் கணினிப் பாடம் அறிமுகப்படுத்தப்பட்டது. **வரும் கல்வி ஆண்டில், தமிழகத்திலுள்ள 1,880 அரசு மேல்நிலைப் பள்ளிகளிலும் ரூபாய் 118 கோடி செலவில் கணினிப் பயிற்சிக் கூடங்கள் அமைக்கப்படும். மேலும், மாணவர்களின் ஆங்கிலம் பேசும் திறனை மேம்படுத்தும் வகையில்**




**ரூபாய் 130 இலட்சம் செலவில் ஆங்கில மொழி பயிற்சிக் கூடங்கள் அமைக்கப்படும்.**

**43. தமிழ் வழிக் கல்விக்கு ஊக்கம் அளிக்கும் வகையில், தமிழ் வழியில் பயிலும் மாணவர்கள்**




**அனைவருக்கும் 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்படும்.** பள்ளிக் கல்வித் துறைக்கு ரூபாய் 7,057 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## நூலகங்கள்

**44. தற்கால அறிவியல் நூல்கள், நவீன வெளியீடுகள், வரலாற்றுப் பின்னணி கொண்ட பனுவல்கள் மற்றும் மேற்கோள் தொகுப்புகள் போன்றன சாதாரண மக்களுக்கும் ஏழை எளிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கும் எட்டாக் கனியாக இருக்கும் நிலையை மாற்றிட,**




**இவை அனைத்தும் அவர்களுக்கு எளிதில் கிடைக்கச் செய்யும் வகையில், சென்னையில் சர்வதேச தரத்திலான நவீன மாநில நூலகம் ஒன்றை இந்த அரசு அமைக்கும்.** அனைத்து நூல்கள் மற்றும் இணைய வெளியீடுகளோடு, நவீனக் கட்டமைப்பு வசதிகள் கொண்ட மாபெரும் மாதிரி நூலகமாக இது அமையப்பெறும். ரூபாய் 100 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும் இந்நூலகத்திற்கு நூலக ஆணையத்தின் பங்களிப்பாக ரூபாய் 80 கோடியும், அரசின் பங்களிப்பாக ரூபாய் 20 கோடியும் இருக்கும்.

**45. புத்தக ஆசிரியர்கள் மற்றும் அனைத்து நூல் வெளியீட்டாளர்களின் வேண்டுகோளை ஏற்று, முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவித்தவாறு, அனைத்து நூல்களும் ஒரே இடத்தில் கிடைக்கும் நோக்கத்துடன், சென்னையில் மாபெரும்**

'புத்தகப் பூங்கா' ஒன்றை நூல் வெளியீட்டுக் குழுவினர் அமைத்திட, அரசு நிலம் வழங்கி ஆதரவு தரும்.

## உயர்கல்வி

46.தேர்தல் அறிக்கையில் அறிவித்தவாறு, மாணவர்களுக்குத் தேவையற்ற கூடுதல் சுமையாக உள்ள தொழிற்கல்விப் படிப்புகளுக்கான பொது நுழைவுத் தேர்வை அகற்றி, கிராமப்புற மற்றும் ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கும் நகர்ப்புற மாணவர்களுக்கும் சம வாய்ப்பு அளிக்கும் நோக்குடன், இது குறித்து இவ்வரசால் அமைக்கப்பட்ட கல்வியாளர் குழுவின் பரிந்துரைகளின்படி இத்தேர்வை நீக்குவதற்கான சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டத்திற்குக் குடியரசுத் தலைவர் அவர்கள் ஒப்புதல் அளித்துள்ள நிலையில், அனைத்துத் தடைகளையும் உடைத்தெறிந்து, கிராமப்புற மாணவர்களின் கனவை நனவாக்கும் வண்ணம் தி.மு.கழகத்தின் மற்றுமொரு வாக்குறுதி நிறைவேற்றப்பட்டுள்ளது குறித்து இந்த அரசு பெருமிதம் கொள்கிறது.

47. 2002-2003ஆம் ஆண்டில் அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் துவக்கப்பட்ட சுய நிதி பாடப்பிரிவுகள் அனைத்தும் இவ்வரசால் பொதுப் பாடப்பிரிவுகளாக மாற்றியமைக்கப் பட்டுள்ளன. **சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் உயர்கல்வியினைத் தொடர வழிவகுக்கும் முறையில், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் இளங்கலைப் பட்டப்படிப்பு பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் கல்விக் கட்டணம் ரத்து செய்யப்பட்டு, அரசு கல்லூரிகளில் உயர்கல்வி இலவசமாக வழங்கப்படும்.**

48. 2006-2007ஆம் ஆண்டில், 10 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மாற்றுமுறை (Shift system) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. தனியார் சுய நிதிக் கல்லூரிகளில் அதிகக் கல்விக் கட்டணம் செலுத்தி உயர்கல்வியினைத் தொடர இயலாத மாணவர்கள் அரசுக் கல்லூரிகளில் இந்த மாற்றுமுறையின் வாயிலாகப் பயனடைந்துள்ளனர். **மாற்றுமுறை அறிமுகப்படுத்தப்பட்ட இந்தக் கல்லூரிகளில் அனைத்து இடங்களும் நிரப்பப்பட்டுள்ளதைக் கருத்தில் கொண்டு, வரும் கல்வி ஆண்டில் அனைத்து அரசுக் கல்லூரிகளிலும் மாற்றுமுறை துவக்கப்படும். இதனால் அரசுக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை 30,000 லிருந்து 60,000 ஆக உயரும். மேலும், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு 500 கூடுதல் வகுப்பறைகள் ரூபாய் 25 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.**

**49. பெரம்பலூர் மாவட்டத்தில் அமைக்கப் படவுள்ள சிறப்புப் பொருளாதார மண்டலம் மூலமாக**




**உருவாகும் வேலைவாய்ப்புகளை அப்பகுதி இளைஞர்கள் பெற்றுப் பயனடையும் வகையில் அம்மாவட்டத்தில் இரண்டு புதிய தொழிற்பயிற்சி நிலையங்களும், சிவகங்கை மாவட்டத்தில் ஒரு புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையமும் வரும் ஆண்டில் அமைக்கப்படும்.**

**50. பதினொன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், மாநிலத்தில் உள்ள பல்கலைக்கழகங்கள் ஒவ்வொன்றும் ஒரு துறையைத் தேர்வு செய்து அவற்றைச் சிறப்புத் தகுதி மையங்களாக (Centres of Excellence) மேம்படுத்துவதற்கு வகை செய்யப்படும். இதன் முதற்கட்டமாக, கோவை பாரதியார் பல்கலைக்கழகத்திற்கு நிதியுதவியாக ரூபாய் ஒரு கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

51. தேர்தல் அறிக்கையில் அறிவித்தவாறு, அரசுப் பொறியியல் கல்லூரிகளில் கடந்த ஆட்சியில் உயர்த்தப்பட்ட ஆண்டுக் கல்விக் கட்டணத்தை ரூபாய் 10,350 லிருந்து ரூபாய் 6,350 ஆக இவ்வரசு குறைத்துள்ளது. மேலும் திருச்சி மற்றும் கோவை மாநகரங்களில் அண்ணா பல்கலைக் கழகம் எனும் பெயரில் இரு புதிய தொழில்நுட்பப் பல்கலைக்கழகங்கள் துவக்கப் பட்டுள்ளன. மேலும், **தென் மாவட்டங்களில் பொறியியல் கல்வியை விரிவாக அளித்திட, திருநெல்வேலி அண்ணா பல்கலைக்கழகம் என்ற பெயரில் ஒரு தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் வரும் ஆண்டில் தொடங்கப்படும்.** 2007–2008 ஆம் ஆண்டில், உயர்கல்விக்கு மொத்தமாக ரூபாய் 1,054 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## மக்கள் நலவாழ்வு

52. கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் செயல்படுத்தப்பட்ட 'வருமுன் காப்போம்'




திட்டம் மீண்டும் செயல்படுத்தப்பட்டு, நோய்களைத் தொடக்க நிலையிலேயே கண்டறிந்து குணப் படுத்தும் வகையில், மருத்துவ வல்லுநர் குழுக்களைக் கொண்டு மாநிலமெங்கும் இரண்டு ஆண்டுகளில் 9,000 மருத்துவ முகாம்கள் நடத்தத் திட்டமிடப்பட்டு, இதுவரை 884 முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ள இந்தத் திட்டத்தின் கீழ் இதுவரை 11,33,471 பேர் பயனடைந்துள்ளனர்.

53. அனைத்து மாவட்டங்களிலும் மருத்துவக் கல்லூரி அமைக்கப்பட வேண்டுமென்ற இந்த




அரசின் குறிக்கோளை நிறைவேற்றும் வண்ணம் கடந்த ஆண்டு விழுப்புரத்தில் ஒரு புதிய மருத்துவக் கல்லூரி தொடங்க ஆணையிடப்பட்டு, அதற்கான தொடக்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன. **இதே போன்று, திருவாரூர் மற்றும் தருமபுரி ஆகிய நகரங்களில், தலா ரூபாய் 100 கோடி மதிப்பீட்டில் புதிய மருத்துவக் கல்லூரிகள் அமைக்கப்படும்.**

**54. தமிழகத்தில் உள்ள மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கான கட்டமைப்பு வசதிகள் ரூபாய் 50 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும். சென்னை மருத்துவக் கல்லூரியைச் சேர்ந்த குழந்தைகள் நல மருத்துவமனைக்கு ரூபாய் 14 கோடி மதிப்பீட்டிலும், கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியுடன் இணைக்கப்பட்ட இராயப்பேட்டை மருத்துவமனைக்கு ரூபாய் 10 கோடி மதிப்பீட்டிலும் கூடுதல் கட்டடங்கள் கட்டப்படும். மேலும், ரூபாய் 21 கோடி செலவில், செங்கல்பட்டு, திருநெல்வேலி, தஞ்சாவூர், திருச்சி, மதுரை, கீழ்ப்பாக்கம், ஸ்டான்லி மருத்துவக் கல்லூரிகள் மற்றும் சென்னைப் பல் மருத்துவக் கல்லூரி ஆகியவற்றில் மாணவ மாணவியர் விடுதிகள் மற்றும் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும். சென்னை பொது மருத்துவமனை, ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி, கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி, இராமநாதபுரம் அரசு மருத்துவமனை மற்றும் உதகை அரசு மருத்துவமனை ஆகிய இடங்களில்**

**உள்ள ஐந்து செவிலியர் பயிற்சிப் பள்ளிகளுக்கும் தலா ரூபாய் 1 கோடி வீதம் மொத்தம் ரூபாய் 5 கோடி செலவில் தங்கும் விடுதிகள் அமைக்கப்படும்.**

55. கிராமப்புரங்களில் உள்ள நோயாளிகள் மற்றும் கர்ப்பிணிப் பெண்களை அவசர சிகிச்சைக்காக மருத்துவமனைகளுக்கு உரிய நேரத்தில் கொண்டு சேர்க்கும் வகையில், தமிழ்நாடு சுகாதார அமைப்புகள் திட்டத்தின் கீழ், அனைத்து வட்டாரங்களிலும் 24 மணிநேர மருத்துவ ஊர்திச் சேவை வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், இதுவரை 187 வட்டாரங்களுக்கு புதிய மருத்துவ ஊர்திகள் வழங்கப்பட்டுள்ளன. **மீதமுள்ள 198 வட்டாரங்களுக்கும் வரும் ஆண்டிலேயே புதிய மருத்துவ ஊர்திகள் ரூபாய் 21 கோடி செலவில் வழங்கப்படும்.**

56. கர்ப்பிணிப் பெண்கள் நலம் பேணிட ஒவ்வொருவருக்கும் ரூபாய் 6,000 வீதம் நிதி உதவி வழங்கப்படும் வகையில் முதலமைச்சர் கலைஞர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டம், நமது நாட்டிற்கே முன்னோடித் திட்டமாக விளங்கி, பெண்கள் மற்றும் குழந்தைகள் நலன் காப்பதில் முக்கியப் பங்காற்றி வருகிறது. இந்த ஆண்டில், இத்திட்டத்தின் கீழ் 2,36,823 கர்ப்பிணிப் பெண்கள் பயனடைந்துள்ளனர். **வரும் ஆண்டிலும், இரண்டு இலட்சம் கர்ப்பிணிப் பெண்கள் பயனடையும் வகையில், இந்தத் திட்டத்திற்கு ரூபாய் 120 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

57. தமிழ்நாடு சுகாதார அமைப்புகள் திட்டத்தின் கீழ் 64 தலைமையக மருத்துவ மனைகள், மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல அவசர சிகிச்சை மையங்களாகத் தரம் உயர்த்தப் பட்டுள்ளன. **வரும் ஆண்டில், மேலும் 32 மருத்துவமனைகள் இவ்வாறு தரம் உயர்த்தப்படும். இந்த மருத்துவமனைகளில் குழந்தைகள் நல மருத்துவர்கள், மயக்கமருந்து மருத்துவர்கள் மற்றும் மகப்பேறு மருத்துவர்கள் போன்ற சிறப்பு மருத்துவர்கள் பணியமர்த்தப்படுவார்கள்.** மாநிலத்திலுள்ள அனைத்து மருத்துவ மனைகளுக்கும் மருந்துகள் வாங்குவதற்காக ரூபாய் 193 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மொத்தமாக, மக்கள் நலவாழ்வுத் துறைக்கு ரூபாய் 2,286 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## தொழில்துறை

58. தொழில் முனைவோர் எளிதில் அணுகக்கூடிய அரசாக இந்த அரசு திகழ்வதால், புதிய தொழிற்சாலைகள் தமிழ்நாட்டில் வந்த வண்ணம் உள்ளன. இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, மோட்டரோலா, அப்போலோ டயர்ஸ், டெசால்வ், டெல் கம்ப்யூட்டர்ஸ், குரோத் லிங், சாம்சங், மகிந்திரா–ரெனால்ட்–நிஸ்ஸான் மற்றும் கபாரோ ஆகிய நிறுவனங்களுடன், ரூபாய் 6,985 கோடி




மதிப்பீட்டிலான தொழில் முதலீடுகளுக்கான எட்டு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப் பட்டுள்ளன. இவற்றால், 96,000 நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த அரசின் தொழில் கொள்கையின் சாதனைகளின் சிகரமாக அண்மையில் 26.2.2007 அன்று நமது நாட்டின் மகிந்திரா நிறுவனமும், பிரெஞ்சு நாட்டின் ரெனால்ட் கார் நிறுவனமும், ஜப்பான் நாட்டு நிஸ்ஸான் கார் நிறுவனமும் இணைந்து, ரூபாய் 4,000 கோடி முதலீட்டில் சென்னைக்கு அருகே ஒரகடத்தில் ஒரு மாபெரும் கார் உற்பத்தித் தொழிற்சாலையை நிறுவும் கூட்டு முயற்சி திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது. போர்டு மற்றும் ஹுண்டாய் கார் தொழிற்சாலைகளுக்குப் பிறகு தமிழகத்தில் உருவாகும் மாபெரும் கார் தொழிற்சாலை

இதுவாகும். இவ்வாறு மோட்டார் வாகனம் மற்றும் உதிரிப் பாகங்கள் தயாரிக்கும் தொழிலில் தமிழகம் இழந்த முதல் இடத்தை மீண்டும் பெற்றுள்ளது.

**59. சென்னை எண்ணூர் துறைமுகப் பகுதியிலும், கடலூர் மாவட்டத்திலும் இரு கப்பல் கட்டும் தளங்கள் ரூபாய் 3,700 கோடி முதலீட்டில் தனியார் துறையில் அமைக்கப்படவுள்ளன. இதனால் இப்பகுதிகளிலுள்ள சுமார் 25,000 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.**

**60. சிவகங்கையில் உள்ள கிராபைட் கனிமவளத்தை முழுமையாகப் பயன்படுத்தும் வகையில், தமிழ்நாடு கனிம நிறுவனம், தனியார் தொழில் முனைவோருடன் இணைந்து, சர்வதேசத் தரத்திலான உயர் தொழில்நுட்பத்துடன் கிராபைட் சுத்திகரிக்கும் மற்றுமொரு தொழிற்சாலையை அமைத்திட, தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.**


**61. நமது மாநிலத்தில், விவசாயத்திற்குப் பாதிப்பு ஏற்படாமல், தொழிற்சாலைகளை அமைத்து ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கத்தக்க விதத்தில் பல இடங்கள் இருக்கின்றன. அவற்றில் விவசாயத்திற்குப் பயன்படுத்தத்தக்க நிலங்கள் இருக்குமாயின், அந்த இடங்களை ஒதுக்கிவிட்டு, மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் தெரிவித்துள்ள கருத்தின்படி சாதாரண மக்களுக்கு எந்தவிதமான பாதகமும் ஏற்படாத வகையில், அங்கே சிறப்புப் பொருளாதார மண்டலங்களை அமைப்பதில் எந்தத் தவறும் இல்லை. இந்த வகையில், இத்தகைய நிலங்கள் அதிகம் உள்ள தென் மாவட்டங்களில் புதிய தொழிற்சாலைகள் நிறுவப்படுவதற்கு ஏதுவாக, விருதுநகர் மாவட்டத்தில் ஒரு சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைக்கப்படும்.**

62. மறைந்த மத்திய அமைச்சர் முரசொலி மாறன் அவர்களால், தென் மாவட்டங்களின் வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டு, திட்டமிடப்பட்டு உருவாக்கப்பட்ட நாங்குநேரி சிறப்புப் பொருளாதார மண்டலத்திற்கு, தற்போது மீண்டும் புத்துயிரூட்டப்பட்டுள்ளது. இதற்காக, மேலும் ஒரு புதிய கூட்டுத் தொழில் முனைவோர் தேர்ந்தெடுக்கப்பட்டு இம்மண்டலத்திற்குத் தேவையான கூடுதல் நிலங்களைக் கையகப்படுத்தும் பணி நிறைவுறும் தருவாயில் உள்ளது.

## தகவல் தொழில்நுட்பம்

63. தமிழக அரசின் முனைப்பான முயற்சிகளினால் மின்னணுச் சாதனங்கள், தொலைத் தொடர்புக் கருவிகள் மற்றும் கணினிகள் தயாரிப்பில் தமிழகம் ஒரு முன்னணி மாநிலமாக மாறியுள்ளது. சாம்சங், மோட்டாரோலா மற்றும் டெல் கம்ப்யூட்டர் போன்ற நிறுவனங்கள் தமிழகத்தில் தங்கள் தொழிற்சாலைகளை நிறுவியுள்ளது தமிழக அரசின் தொழில் கொள்கைக்கு கிடைத்த வெற்றியாகும். அண்மையில் மைய அரசு அறிவித்துள்ள செமி கண்டக்டர் கொள்கை, மிக உயர் தொழில்நுட்பம் வாய்ந்த ஐ.சி.சிப்பம் (Integrated Circuit Chip) தயாரிக்கும் தொழிற்சாலைகள் (Fab facility) நம் நாட்டில், குறிப்பாகத் தமிழகத்தில் அமைய வழி வகுக்கும்.

64. கணினி மென்பொருள் தொழில், ஆயிரக்கணக்கான தமிழக இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை அளித்து வருகிறது




என்பதைக் கருத்தில் கொண்டு இந்த அரசு இத்தொழிலுக்குத் தொடர்ந்து ஊக்கம் அளித்து வருகிறது. சென்னை மட்டுமன்றி மாநிலத்தின் பிற நகரங்களிலும் மென்பொருள் நிறுவனங்கள்

அமைக்கப்பட வேண்டும் என்ற இந்த அரசின் கொள்கையின் அடிப்படையில், 24.2.2007 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கோவை மாநகரத்தில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைப்பதற்கான அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்நிகழ்ச்சியில் குறிப்பிட்டதற்கிணங்க, மதுரை, திருச்சி, சேலம் ஆகிய நகரங்களில் தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் அமைக்க நிலங்கள் எல்காட் நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன. அதுபோன்று, திருநெல்வேலியில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைப்பதற்கான நிலங்கள் கண்டறியப்பட்டுள்ளன. சென்னை தரமணியில் இரண்டாவது டைடல் பூங்கா அமைப்பதற்கான ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளன.

65. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான பெண் பட்டதாரிகள் மற்றும் பொறியியலாளர்கள், சென்னை மாநகரில் உள்ள மென்பொருள் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த தொழில்களில் பணிபுரிகின்றனர்.




**இப்பெண்களுக்கு நவீன வசதிகள் மற்றும் பாதுகாப்புடன் கூடிய உறைவிட வசதி தேவை என்பதைக் கருத்தில் கொண்டு, மைய அரசின் பணிபுரியும் பெண்கள் விடுதித் திட்டத்தின் கீழ் நிதி உதவி பெற்று, பணிபுரியும் பெண்கள் விடுதி ஒன்று பெரிய அளவில் அமைக்கப்படும்.**

66. தேர்தல் அறிக்கையில் அறிவிக்கப் பட்டவாறு, வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி இலவசமாக வழங்கும் திட்டத்தின் முதல் கட்டமாக 30,000 தொலைக்காட்சிப் பெட்டிகள் பெரியார் நினைவு சமத்துவபுரங்களில் குடியிருப்போருக்கு வழங்கப்பட்டு, இரண்டாவது கட்டமாக சர்வதேச ஒப்பந்தப்புள்ளி மூலமாக சட்டமன்றக் கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவின் ஒப்புதல் பெற்று, ஒளிவுமறைவற்ற முறையில் ரூபாய் 685 கோடி செலவில் 25 இலட்சம் வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகள் கொள்முதல் செய்யப்பட்டு, மாநிலமெங்கும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன. வரும் ஆண்டுகளிலும் இந்தத் திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்தி, தமிழ்நாட்டில் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி இல்லாத வீடுகளே இல்லை என்ற நிலையை உருவாக்குவோம். இத்திட்டத்திற்காக, 2007–2008ஆம் ஆண்டுக்கு மேலும் ரூபாய் 750 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## சிறுதொழில்

67. கழக ஆட்சியில் செயல்படுத்தப்பட்டு வந்த, தொழிலில் பின்தங்கிய பகுதிகளில் அமைக்கப்படும் சிறுதொழில்களுக்கான முதலீட்டு மானியத் திட்டத்தை கடந்த ஆட்சியில் நிறுத்தப் பட்டிருந்ததை; மீண்டும் செயல்படுத்த அரசு ஆணையிட்டுள்ளது. தொழிலில் பின்தங்கிய வட்டாரங்களில் சிறுதொழில்கள் தொடங்கும் தொழில் முனைவோருக்கு முதலீட்டு மானியம் வழங்குவதற்காக 2007-2008ஆம் ஆண்டுக்கு ரூபாய் 20 கோடி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

**68. நீலகிரி மாவட்டத்தில் உள்ள தேயிலைத் தோட்டங்களை மேம்படுத்தியும், தரமான தேயிலையை உற்பத்தி செய்யும் வகையில் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகளை நவீனப்படுத்தியும், தேயிலை விவசாயிகளின் வருவாயை அதிகரிக்கும் நோக்கத்துடன், ரூபாய் 89 கோடி மதிப்பீட்டில் ஒரு பெருந்திட்டத்தை மைய அரசின் தேயிலை வாரிய நிதி உதவியுடன் இந்த அரசு செயல்படுத்தும்.**

## சாலை மேம்பாடு


69. தமிழ்நாட்டில் உள்ள மாநில நெடுஞ்சாலைகளில் ஒரு வழித் தடங்களாக இருக்கும் அனைத்துச் சாலைப் பகுதிகளும் இரு வழித் தடங்களாக மாற்றப்பட வேண்டும் என்ற குறிக்கோளுடன், 2006-2007ஆம் நிதி ஆண்டில் ரூபாய் 410 கோடி செலவில் 1,518 கிலோமீட்டர் நீளமுள்ள மாநில நெடுஞ்சாலைகளை அகலப் படுத்தி மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மீதமுள்ள 3,052 கிலோமீட்டர் நீளம் உள்ள மாநில நெடுஞ்சாலைகள், இனி வரும் ஆண்டுகளில் இருவழித்தடங்களாக மேம்படுத்தப் படும். சாலை மற்றும் பாலங்கள் மேம்பாட்டு மூலதனப் பணிகளுக்காக, 2007-2008 வரவு–செலவுத் திட்டத்தில் மொத்தம் ரூபாய் 2,698 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், சாலைகளை நன்கு பராமரிப்பதற்காக ரூபாய் 829 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

70. 2001–2006ஆம் ஆண்டுகளில், 9 இரயில்வே மேம்பாலப் பணிகள் மட்டுமே முடிக்கப் பட்டன. **ஆனால், 2006–2007ஆம் ஆண்டில் மட்டும், ரூபாய் 410 கோடி மதிப்பீட்டிலான 25 மேம்பாலங்களுக்கு இந்த அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. 2007–2008ஆம் ஆண்டில் மேலும் ரூபாய் 500 கோடி மதிப்பீட்டிலான 39 புதிய இரயில்வே மேம்பாலப் பணிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படும்.**

## மின்சக்தி

71. தமிழகத்தின் வேகமான பொருளாதார வளர்ச்சிக்கேற்ப மின்சக்தியின் தேவையும் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இதனை நிறைவேற்ற, புதிய மின் உற்பத்தி நிலையங்கள் அமைக்கப்படுவதற்கான பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம். நெல்லை மாவட்டத்தில், கூடங்குளத்தில், தற்போது 2,000 மெகாவாட் மின் உற்பத்தித் திட்டம் நிறுவப்பட்டு வரும் நிலையில், கூடுதலாக 4,000 மெகாவாட் திறன் உள்ள நான்கு கூடுதல் அணு உலைகள் நிறுவப்படும் என்ற மைய அரசின் அறிவிப்பு, தென் மாவட்டங்களில் பெருந் தொழில்கள் வளரவும் தமிழகத்தின் வருங்கால மின் தேவையை நிறைவேற்றுவதற்கும் மிக்க உறுதுணையாக இருக்கும். கூடுதலாக நிலம் கையகப்படுத்தாமல், ஏற்கெனவே கையகப் படுத்தப்பட்டுள்ள நிலப்பகுதியிலேயே இந்தக் கூடுதல் அணு உலைகள் அமைக்கப்படும். **இதனால் கூடுதலாக ரூபாய் 26,000 கோடி முதலீட்டை மைய அரசு தமிழகத்தில் செய்ய இருப்பதானது, அண்மைக் காலத்தில் தமிழக அரசு பெற்ற மிக உயரளவு மைய முதலீடாகும் என்பதைத் தெரிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்.**

72. காற்றாலைகளின் மூலம் மின் உற்பத்தி செய்வதில் தமிழகம் இந்தியாவிலேயே முதன்மை




மாநிலமாகத் திகழ்கிறது. 2007 மார்ச் திங்கள் இறுதியில் தமிழ்நாட்டில் உள்ள காற்றாலை மின் திறன் 3,400 மெகாவாட்டாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## போக்குவரத்து

73. 1996–2001 வரையிலான தி.மு.கழக ஆட்சிக் காலத்தில் 10,206 புதிய பேருந்துகள் அரசுப் போக்குவரத்துக் கழகங்களால் வாங்கப்பட்டன. ஆனால் 2001-2006 வரையிலான கடந்த ஆட்சியில் அரசு போக்குவரத்துக் கழகங்களால் 5,608 புதிய பேருந்துகள் மட்டுமே வாங்கப்பட்டன. இந்நிலையை மாற்றி, தி.மு. கழக ஆட்சியில், நடப்பாண்டிலேயே ரூபாய் 100 கோடி அரசு நிதி உதவியுடன் 2,230 புதிய பேருந்துகள் வாங்க கொள்முதல் ஆணை வழங்கப்பட்டு, இதுவரை 1,498 புதிய பேருந்துகள்

பெறப்பட்டு, பயன்பாட்டிற்குக் கொண்டுவரப் பட்டுள்ளன. எஞ்சியுள்ள பேருந்துகள் விரைவில் பெறப்படும். **வரும் நிதி ஆண்டில், மேலும் 3,000 புதிய பேருந்துகள் ரூபாய் 350 கோடி மதிப்பீட்டில் வாங்கப்படும். இதற்காக ரூபாய் 150 கோடி அரசு நிதி உதவியாக இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.** புறநகர்ப்





பகுதிகளில் உள்ள மக்களின் போக்குவரத்து வசதி கருதி, சென்னை மாநகரப் பேருந்துகள் 50 கிலோமீட்டர் வரையிலும் மற்ற மாநகரப் பேருந்துகள் 35 கிலோ மீட்டர் வரையிலும் நீட்டித்து இயக்கப்படுகின்றன.

## விமான நிலையங்கள்

**74.** அண்மைக் காலத்தில் தமிழகத்தில் விமானப் போக்குவரத்து மிக வேகமாக வளர்ந்து வருகிறது. இதனைக் கருத்தில் கொண்டு, சென்னை விமான நிலையத்தை விரிவாக்குதல் அல்லது புதிய விமான நிலையம் ஒன்றை அமைப்பதற்கான வாய்ப்புகள் குறித்து இவ்வரசு பரிசீலித்து வருகிறது. விரைவில் இது குறித்து தகுந்த முடிவெடுக்கப்படும். மேலும், கோவை, மதுரை, திருச்சி மற்றும் தூத்துக்குடி ஆகிய நகரங்களிலுள்ள விமான நிலையங்களில், அதிகரித்து வரும் விமானப் போக்குவரத்தைக் கையாள்வதற்கு, இந்த விமான நிலையங்கள் விரிவாக்கம் செய்யப்படுவது மிகவும் அவசியமாகும். இந்த விரிவாக்கப் பணிகளுக்குத் தேவையான நிலங்களை மாநில அரசே அளிக்கவேண்டும் என்று இந்திய விமான நிலைய ஆணையம் தமிழக அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது. இந்த வேண்டுகோளை ஏற்று, இந்த விமான நிலையங்களின் விரிவாக்கத்திற்குத் தேவையான நிலங்களை தமிழக அரசே இந்த ஆணையத்திற்கு வழங்கும்.

## மெட்ரோ ரயில் திட்டம்

**75. சென்னை மாநகரின் போக்குவரத்து நெருக்கடிக்கு ஒரு நீண்டகாலத் தீர்வாக, சுமார் ரூபாய் 9,000 கோடி மதிப்பீட்டில் மெட்ரோ இரயில் திட்டத்தைச் செயல்படுத்த இந்த அரசு முடிவு செய்துள்ளது. சுமார் 49 கிலோ மீட்டர் மொத்த**




**நீளத்தில் இரண்டு வழித்தடங்களைக் கொண்ட இந்தத் திட்டம், 5 ஆண்டுகளில் அமைக்கப்பட்டு செயல்படத் தொடங்கும்.** இந்தத் திட்டத்திற்கான விரைவான ஆய்வறிக்கையை டெல்லி மெட்ரோ இரயில் கழகம் தயாரித்து அண்மையில் அரசுக்கு அளித்துள்ளது. இந்தச் சிறப்புத் திட்டத்தின் ஆரம்பக்கட்டச் செலவுகளுக்காக இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## விரைவு இரயில் போக்குவரத்துத் திட்டம்

**76.** மயிலை லஸ் முதல் வேளச்சேரி வரையிலான விரைவு இரயில் போக்குவரத்துத் திட்டத்தின் இரண்டாவது கட்டப் பணிகள்

முடிவடையும் நிலையில் உள்ளது. **இத்திட்டத்தைப் புனித தோமையர் மலை வரை நீட்டித்தால் மட்டுமே இத்திட்டத்தின் முழுப்பயனையும் பெற இயலும் என்பதைக் கருத்தில் கொண்டு, இத்திட்டத்திற்கான ரூபாய் 416 கோடி செலவில், மூன்றில் இரண்டு பங்கு செலவை ஏற்க, தமிழக அரசு மைய அரசுக்கு இசைவு தெரிவித்துள்ளது. இத்திட்டத்திற்குத் தமிழக அரசின் 2007–2008 ஆண்டிற்கான பங்களிப்பாக ரூபாய் 20 கோடி வரவு–செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## நகராட்சி நிருவாகம்

77. வேகமாக வளர்ந்து வரும் நகர்ப்புரப் பகுதிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கு இந்த அரசு தனிக் கவனம் செலுத்தி வருகிறது. அதற்காக எடுத்த பெரும் முயற்சிகளின் விளைவாக, ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர சீரமைப்புத் திட்டத்தின் கீழ், இதுவரை ரூபாய் 2,470 கோடி மதிப்பீட்டில், குடிநீர், கழிவுநீரகற்றல், திடக்கழிவு மேலாண்மை, ஏழைகளுக்கு வீட்டுவசதி, குடிசைப் பகுதி மேம்பாடு, சாலை வசதி ஆகிய திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளன. சென்னை மாநகருக்கு மட்டும், ரூபாய் 1,060 கோடி மதிப்பீட்டில் 8 திட்டங்கள் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளன. மதுரை மாநகருக்கு, ரூபாய் 284 கோடி மதிப்பீட்டில் 7 திட்டங்கள் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளன. இதில், ரூபாய் 59 கோடி மதிப்பீட்டில் இரண்டாவது வைகைக் குடிநீர் மேம்பாட்டுத் திட்டமும், ரூபாய் 74 கோடி மதிப்பீட்டில் மதுரை மாநகரத் திடக்கழிவு மேலாண்மைத் திட்டமும் அடங்கும். கோவை மாநகருக்கு, ரூபாய் 501 கோடி மதிப்பீட்டில் 6 திட்டங்கள் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளன. ரூபாய் 114 கோடி மதிப்பீட்டில் கோவை மாநகரக் குடிநீர் மேம்பாட்டுத் திட்டமும், ரூபாய் 97 கோடி மதிப்பீட்டில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டமும் இதில் அடங்கும். மேலும், நகர்ப்புரப் பகுதிகளில் மண் சாலைகள் இருப்பின், அவற்றைத் தார் சாலைகளாக மேம்படுத்துவதற்காக நகராட்சிகளுக்கு நிதியுதவி அளிக்கப்படும்.

78. சுற்றுப்புறச் சூழல் மற்றும் பொது சுகாதாரம் ஆகியவற்றைப் பேணுவதில், கழிவுநீர் அகற்றலின் முக்கியத்துவத்தை நன்கு உணர்ந்த இந்த அரசு, முதற்கட்டமாகத் தமிழகத்தின் அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும், அடுத்த கட்டமாக அனைத்து நகராட்சிகளிலும் பாதாளச் சாக்கடைத் திட்டங்களைச் செயல்படுத்த முடிவு எடுத்துள்ளது. நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கு இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 2,661 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல்

79. 2006-2007ஆம் ஆண்டில் தமிழகத்தில் உள்ள ஊரகக் குடியிருப்புகளுக்கான குடிநீர் வசதி குறித்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, மாநிலத்திலுள்ள 86,981 ஊரகக் குடியிருப்புகளில், 36,452 ஊரகக் குடியிருப்புகளில் தினந்தோறும் நபர் ஒருவருக்குச் சராசரியாக 40 லிட்டருக்கும் குறைவாகக் குடிநீர் கிடைத்து வருவதாகக் கண்டறியப்பட்டுள்ளது. வரும் நான்கு ஆண்டுகளில், இத்தகைய ஊரகக் குடியிருப்புகள் அனைத்திலும் போதிய அளவு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க ஆவன செய்யப்படும். நடப்பாண்டில், 7,000 ஊரகக் குடியிருப்புகளில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி அளிக்கப் பட்டுள்ளது. **2007–2008ஆம் ஆண்டில், இத்தகைய 9,000 ஊரகக் குடியிருப்பு பகுதிகளுக்கு போதிய பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கான திட்டங்கள் மேற்கொள்ளப்படும். இதற்காக, ரூபாய் 411 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**80. இராமநாதபுரம், புதுக்கோட்டை மற்றும் சிவகங்கை மாவட்ட மக்களின் நீண்டகாலக் குடிநீர்ப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வாக ரூபாய் 616 கோடி மதிப்பீட்டிலான இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டப்பணிகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 30.1.2007 அன்று தொடங்கிவைக்கப்பட்டுள்ளன.** தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களின் குடிநீர்ப் பிரச்சினைக்கு ஒரே தீர்வான ஒகேனக்கல் குடிநீர் வழங்கல் திட்டம், ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு வங்கியின் நிதியுதவிக்காக மத்திய அரசால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து,

அந்த வங்கியின் வல்லுநர் குழு, இதற்கான ஆரம்பக் கட்ட ஆய்வுகளை அண்மையில் இந்த மாவட்டங்களில் நடத்தியுள்ளது. இத்திட்டத்தை ஒரு அறைகூவலாக ஏற்று இந்த அரசு செயல்படுத்தும்.

**81.** நடப்பாண்டில், **60** கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள், ரூபாய் **363** கோடி மதிப்பீட்டில் **20** இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில்



நிறைவேற்றப்பட்டு பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. **2007-2008**ஆம் ஆண்டில் **50** கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் ரூபாய் **626** கோடி மதிப்பீட்டில் **36** இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் நிறைவேற்றப்படும்.

**82.** நடப்பாண்டில், **55** நகரங்களில் **15** இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ரூபாய் **161** கோடி மதிப்பீட்டில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. வரும் ஆண்டில், மேலும் **60** நகரங்களில் ரூபாய் **389** கோடி மதிப்பீட்டில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டு பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும்.

## சென்னைப் பெருநகர் வளர்ச்சிப் பணிகள்


**83.** மாநகராட்சி மன்றங்கள் அமைந்துள்ள சென்னை, மதுரை, கோவை போன்ற நகரங்கள் மக்கள்தொகை பெருக்கத்தினால் மூச்சு விடவே திணறிக் கொண்டிருக்கிற நிலை; இன்னமும் சில ஆண்டுகளுக்குப் பிறகு மேலும் சீர்கெடக் கூடும் என்பதை முன்கூட்டியே எண்ணிப் பார்த்தும் – நெருக்கடி மிகுந்த போக்குவரத்து, இப்போதே மக்களைத் திக்குமுக்காடச் செய்வதை அனுபவத்தில் உணர்ந்துள்ளதாலும் – அந்த நகரங்கள் தூய்மையான காற்றோட்டமிக்க நிலை பெற்றுத் திகழ இப்போதே திட்டமிட்டுப் பணியாற்ற வேண்டும் என்றும், அப்போதுதான் வருங்காலத்தின் சாபத்துக்கு ஆட்படாமல் இருக்க முடியுமென்றும் கருதி; இந்த நகரங்களின் போக்குவரத்து நெரிசல் பிரச்சினைகளுக்கான தீர்வுகளைப் பரிந்துரைப்பதற்காக, மாநில அளவிலான மாநகர சாலைப் போக்குவரத்து மேம்பாட்டு ஆலோசனைக் குழுவும் – சென்னை, மதுரை, கோவை ஆகியவற்றுக்குத் தனித்தனி கிளைக் குழுக்களும் உருவாக்கப்படும். மேற்கண்ட நகரங்களை விரிவுபடுத்தவும், மக்களுக்கு தூய காற்றோட்டமுள்ள சூழலால் நல்வாழ்வு கிடைத்திடவும் இக்குழு தேவையான திட்டங்களை வகுக்கும். இக்குறிக்கோள்களை எய்துவதற்கான பணிகளை மேற்கொள்ள, முதற்கட்டமாக ரூபாய் **200** கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**84.** சென்னை மாநகரின் நீண்டகாலக் குடிநீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில், நாள் ஒன்றுக்கு **100** மில்லியன் லிட்டர் கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டத்திற்கான பணிகள் 25.2.2007 அன்று தொடங்கப்பட்டுள்ளன. மேலும், நாள் ஒன்றுக்கு **100** மில்லியன் லிட்டர் கடல்நீரைக் குடிநீராக்கும் மற்றுமொரு திட்டத்தை மைய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்துவதற்கு, சென்னை மாமல்லபுரம் சாலையில் நிலம் கண்டறியப்பட்டு, விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

**85. ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற மறு சீரமைப்புத் திட்டத்தின்கீழ் சென்னை மாநகரின் குடிநீர் வழங்கல் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் திட்டம் ரூபாய் 337 கோடி மதிப்பீட்டில் சென்னைக் குடிநீர் மற்றும் கழிவுநீரகற்றல் வாரியத்தினால் வரும் ஆண்டில் செயல்படுத்தப்படும். இதன் மூலம் நகரின் அனைத்துப் பகுதிகளிலும் குடிநீர் சமச்சீரான**

அளவில் வழங்கப்பட வகை செய்யப்படும். மேலும், சென்னை மாநகரின் திடக்கழிவு மேலாண்மையைத் தரமுயர்த்தும் திட்டம் ரூபாய் 255 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

86. தகவல் தொழில்நுட்ப அதிவிரைவுச் சாலையிலுள்ள (பழைய மாமல்லபுரம் சாலை) குடியிருப்புப் பகுதிகளும் மென்பொருள் பூங்காக்களும் பயனடையும் வகையில் ரூபாய் 42 கோடி திட்ட மதிப்பீட்டில் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் திட்டம் மேற்கொள்ளப்பட்டு ஓராண்டில் நிறைவேற்றப்படும்.




87. அடையாற்றின் கழிமுகப் பகுதியை மேம்படுத்தி அங்குள்ள இயற்கை மற்றும் உயிரினச் சூழலைப் பாதுகாப்பதோடு, அப்பகுதியில் நவீன வசதிகளுடன் பூங்கா ஒன்றை ரூபாய் 100 கோடி மதிப்பீட்டில் அமைப்பதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தவாறு, சென்னை மெரினா கடற்கரை, தலைமைச் செயலகப் பகுதி மற்றும் எலியட்ஸ் கடற்கரை ஆகியவற்றை அழகுபடுத்துவதற்கான பணிகள் சென்னை மாநகராட்சியால் ரூபாய் 25 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

## குடிசைப் பகுதி மேம்பாடு

88. இந்தியாவிலேயே முதன் முதலாக, 1971 ஆம் ஆண்டு தி.மு.கழக ஆட்சியில் தொடங்கப்பட்ட குடிசை மாற்று வாரியத் திட்டத்தின் கீழ், 12ஆவது நிதிக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் மைய அரசு வழங்கும் ரூபாய் 250 கோடி நிதி உதவியுடன், குடிசைப் பகுதிகளில் அனைத்து அடிப்படை வசதிகளுடன் 17,000 வீடுகள் கட்டப்படும். சுனாமி ஆழிப் பேரலைகளால் பாதிக்கப்பட்ட நகர்ப்புரக் குடிசைப் பகுதி வாழ் மீனவக் குடும்பங்களுக்கு சுமார் 13,000 அடுக்கு மாடி வீடுகள் ரூபாய் 295 கோடி செலவில் குடிசை மாற்று வாரியத்தால் கட்டப்படும். மேலும், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புரச் சீரமைப்புத் திட்டத்தின் கீழ், சென்னை, மதுரை மற்றும் கோவை ஆகிய மாநகராட்சிகள், பிற நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் உள்ள குடிசைப் பகுதிகளில் 40,000 வீடுகள் கட்டப்படும்.

## ஊரக வளர்ச்சி

89. கிராமங்களில் வாழும் மக்களுக்கு, ஐந்தே ஆண்டுகளில் அனைத்து அடிப்படை வசதிகளும் கிடைக்கச் செய்யும் வகையில், மாநிலத்திலுள்ள 12,618 ஊராட்சிகள் ஒவ்வொன்றிலும் தலா ரூபாய் 20 இலட்சம் ஒதுக்கீட்டில், அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் பணிகளை மேற்கொள்ள, 'அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்' என்ற பெரும் திட்டத்தை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 21.1.2007 அன்று தொடங்கிவைக்கப்பட்டுள்ள இந்தத் திட்டத்தின் கீழ், நடப்பாண்டில் 2,540 ஊராட்சிகளில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. **வரும் நிதியாண்டிலும், 2,534 ஊராட்சிகளில் ரூபாய் 507 கோடி செலவில் இத்தகைய அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்படும்.**

90. இந்த அரசு எடுத்துள்ள முயற்சிகளின் பலனாக மத்திய அரசின் தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் நமது மாநிலத்தில், கடலூர், திண்டுக்கல், நாகப்பட்டினம், சிவகங்கை, திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் ஆகிய 6 மாவட்டங்களில் மிகச் சிறப்பாக நிறைவேற்றப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் பங்கேற்கும் பயனாளிகளுக்கு குறைந்தபட்ச ஊதியம் உறுதி செய்யப்பட்டு, திட்டப் பணிகள் சிறப்பாக

நிறைவேற்றப்பட்டு வருகின்றன. ரூபாய் 108 கோடி செலவிடப்பட்டுள்ள இத்திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ள 5 இலட்சம் குடும்பங்களில், 56 விழுக்காடு குடும்பங்கள் ஆதிதிராவிடர் குடும்பங்கள் என்பதும், இத்திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டுள்ள மனித வேலை நாட்களில் 82 விழுக்காடு பெண்களே பயன்பெற்றுள்ளனர் என்பதும் வறியோர்க்கு வாழ்வளிக்கும் இத்திட்டத்தின் குறிக்கோள் முழுமையாக எய்தப்பட்டுள்ளதைத் தெளிவாக்கும். இத்திட்டத்தின் மற்றுமொரு பயனாக, இத்திட்டம் செயல்படுத்தப்படும் மாவட்டங்களில், விவசாயத் தொழிலாளர்களுக்கான தினக்கூலி வீதமும் உயர்ந்துள்ளது. இத்திட்டத்தை மாநிலத்தின் மற்ற மாவட்டங்களிலும் செயல்படுத்த வேண்டுமென மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் விடுத்த கோரிக்கையை ஏற்று, கூடுதலாக திருநெல்வேலி, தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் கரூர் ஆகிய நான்கு மாவட்டங்களிலும் இத்திட்டத்தைச் செயல்படுத்த மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மொத்தமாக, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைக்கு இந்த வரவு-செலவுத் திட்டத்தில் ரூபாய் 3,471 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## உள்ளாட்சி அமைப்புகள்

91. இந்தியத் திருநாட்டின் மறைந்த இளம்பிரதமர் ராஜிவ் காந்தி அவர்களின் கனவான பஞ்சாயத்து ராஜ் சட்டம், நாடு தழுவிய அளவில் விவாதிக்கப்பட்டு இயற்றப்பட்ட பின்னர், உள்ளாட்சி அமைப்புகளுக்கு முதல்முறையாகத் தேர்தல் நடத்தி, அதிகாரப் பகிர்வைக் குறிக்கோளாகக் கொண்டு, இந்த அமைப்புகளைத் தமிழகத்தில் வேரூன்றச் செய்தது அன்றிருந்த தி.மு.கழக அரசுதான். இந்த உள்ளாட்சி அமைப்புகளுக்கான அதிகாரப் பகிர்வு, நிதிப்பங்கீடு போன்ற பல்வேறு பொருள்கள் குறித்து ஆய்ந்து தேவையான பரிந்துரைகளை மூன்றாவது மாநில நிதிக்குழு அளித்துள்ளது. உள்ளாட்சி நிருவாகச் சக்கரம் திறம்படச் சுழல்வதற்குத் தேவையான நிதியை இந்த அரசு தொடர்ந்து வழங்கும்.

92. மாநில அரசின் சொந்த வரி வருவாயிலிருந்து பகிர்ந்தளிக்கப்படும் நிதிப்பங்கீடு (Devolution), நேரடியாக மாற்றப்படும் வருவாய் (Assigned Revenues) மற்றும் பல்வேறு திட்டங்களுக்கான நிதியுதவி என மூன்று இனங்களின் கீழ், மாநில அரசு உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி அளித்து வருகிறது. **இந்த அமைப்புகளின் நிதியாதாரத்தில், மாநில அரசிடமிருந்து கிடைக்கப்பெறும் நிதிப்பங்கீட்டுத் தொகையே முக்கியப் பகுதியாகும் என்பதைக் கருத்தில் கொண்டு, வரும் ஆண்டில், இந்த நிதிப்பங்கீடு தற்போதுள்ள 8 சதவீதத்திலிருந்து 9 சதவீதமாக உயர்த்தப்படும். இந்த உயர்வினாலும் மற்றும் வருவாய் வளர்ச்சியினாலும், 2006-2007ஆம் ஆண்டு ரூபாய் 2,112 கோடியாக இருந்த நிதிப்பங்கீடு, 2007-2008ஆம் ஆண்டில் ரூபாய் 2,734 கோடியாக உயரும். இதனால், இந்த ஒரு இனத்தின் மூலமாக மட்டும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு வரும் ஆண்டில் ரூபாய் 622 கோடி கூடுதலாகக் கிடைக்கும். மூன்றாவது நிதிக்குழுவின் பரிந்துரைக் காலத்திற்குள், இந்த நிதிப்பங்கீடு 10 சதவீத அளவிற்கு, படிப்படியாக மேலும் உயர்த்தப்படும். இதுமட்டுமன்றி, மாற்றப்பட்ட வருவாய் இனங்களின் கீழ் நடப்பாண்டில் வழங்கப்படும் ரூபாய் 752 கோடி அளவிலான நிதி, வரும் ஆண்டில் ரூபாய் 919 கோடியாக உயரும். மேலும், திட்டப்பணிகளுக்கான நிதியுதவியாக ரூபாய் 1,292 கோடி வரும் ஆண்டில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு அளிக்கப்படும்.**

93. மேற்கூறியவாறு, நிதிப்பங்கீடு, மாற்றப்படும் வருவாய் மற்றும் திட்ட உதவிகள் என்ற இந்த மூன்று இனங்களின் கீழ் மொத்தம் ரூபாய் 4,278 கோடி 2006-2007ஆம் ஆண்டில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு நேரடியாக வழங்கப்பட்டுள்ளது. வரும் 2007-2008ஆம் ஆண்டில், இந்த இனங்களின் கீழ் மொத்தம் ரூபாய் 4,945 கோடி உள்ளாட்சி அமைப்புகளுக்கு நேரடியாகவே வழங்கப்படும். இந்தத் தொகை மட்டுமன்றி, சில மாநிலங்களில் உள்ளாட்சி அமைப்புகள் மேற்கொண்டுவரும் பணிகளான தொடக்கக் கல்வி, பொதுச் சுகாதாரம், ஊரகக் குடிநீர்க் கட்டமைப்பு வசதிகள் போன்ற பணிகளை,

நமது மாநிலத்தில் உள்ளாட்சி அமைப்புகளுக்குப் பதிலாக அரசே மேற்கொள்ள வேண்டிய நிலைமை இருப்பதால், இப்பணிகளுக்காக ரூபாய் 4,224 கோடி அரசுக்கு மேலும் செலவு ஏற்படும். எனவே, உள்ளாட்சி அமைப்புகளுக்கு அளிக்கப்படும் நேரடி நிதியுதவி மற்றும் அவை ஆற்றவேண்டிய பணிகளுக்காக மாநில அரசு செலவிடும் மொத்தத் தொகை ரூபாய் 9,169 கோடி என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இது மாநிலத்தின் சொந்த வரி வருவாயில் சுமார் 30 சதவீதமாகும். நிதிப்பங்கீடு, அதிகாரங்களைப் பகிர்ந்தளித்தல், வரிமுறைகள் மற்றும் பல்வேறு இனங்கள் பற்றிய மூன்றாவது நிதிக்குழுவின் பரிந்துரைகள் மற்றும் அவற்றின் மீது இந்த அரசு எடுத்த நடவடிக்கைகள் பற்றிய விளக்கக் குறிப்பு இந்த கூட்டத் தொடரிலேயே சட்டப்பேரவையில் வைக்கப்படும்.

## வருவாய் நிருவாகம்


94. பத்து ஆண்டுகளுக்கு மேலாக அரசுப் புறம்போக்கு நிலங்களில் வீடுகள் கட்டிக் குடியிருக்கும் ஏழை எளியவர்களுக்குப் பட்டா வழங்க, கடந்த தி.மு.கழக ஆட்சிக் காலத்தில் 2000 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்ட புரட்சிகரமான திட்டத்தை மீண்டும் செயல்படுத்தி, தகுதியுள்ளவர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் ஆறு மாத காலத்திற்குள் வழங்கப்பட இந்த அரசு ஆணையிட்டுள்ளது. தேவைப்படின், இக்காலம் நீட்டிக்கப்பட்டு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படும்.

**95. சேலத்தில், மிகப் பழைய கட்டடங்களில் இயங்கும் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் மற்றும் பிற துறை அலுவலகங்களுக்கு ரூபாய் 25 கோடி மதிப்பீட்டில் ஒரு புதிய கட்டட வளாகம் கட்டப்படும். மேலும், மாநிலத்தில் தனியார் கட்டடங்களில் இயங்கும் கெங்கவல்லி, குந்தா, வீரகேரளம்புதூர், பந்தலூர், காரியாபட்டி, இலுப்பூர், வாழப்பாடி மற்றும் தொட்டியம் ஆகிய எட்டு வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு ரூபாய் 11 கோடி மதிப்பீட்டில் வரும் நிதியாண்டில் கட்டடங்கள் கட்டப்படும். இதன் மூலம், தமிழகத்தில் சொந்தக் கட்டடம் இல்லாத வட்டாட்சியர் அலுவலகங்களே இல்லை என்ற நிலையை உருவாக்குவோம்.**

96. பாராளுமன்ற சட்டமன்ற தொகுதிகளை வரையறுப்பதற்கான பணிகள் நடைபெற்று வருவதால், மீண்டும் தனி அரியலூர் மாவட்டத்தை அமைப்பதற்கான இந்த அரசின் அறிவிப்பு உடனடியாக நடைமுறைப்படுத்தப்பட இயலாத சூழ்நிலை உள்ளது. இந்தப் பணி நிறைவடைந்தவுடன் இம்மாவட்ட நிருவாகம் செயல்படத் தொடங்கும். மேலும், **சட்டமன்றத் தொகுதிகளின் அடிப்படையில் புதிய மாவட்டங்கள் அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் வந்துள்ளதைக் கருத்தில் கொண்டு, அக்கோரிக்கைகளைக் கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டுள்ள இந்த அரசு, தொகுதி வரையறைப் பணிகள் முடிவுற்ற பின் புதிய மாவட்டங்களை அறிவித்து அவற்றின் நிருவாகத்தை நடைமுறைப்படுத்தும்.**

## சுனாமி சீரமைப்பு மற்றும் மறுவாழ்வுப் பணிகள்

97. சுனாமி நிவாரணப் பணிகளுக்காக, ராஜீவ் காந்தி மறுவாழ்வுத் திட்டம் மற்றும் வெளிநாட்டு உதவி பெறும் திட்டங்களின் கீழ் மத்திய அரசு மூலம் பெறப்பட்ட ரூபாய் 4,897 கோடி மொத்த ஒதுக்கீட்டில், கடந்த ஆட்சிக் காலத்தின்போது உடனடி நிவாரணப் பணிகளுக்கு மட்டும் தொகை செலவிடப்பட்டு, நிரந்தர மறுசீரமைப்புப் பணிகள் நிறைவேற்றப்படாதிருந்த நிலை கண்டறியப்பட்டு, சுனாமி மறுசீரமைப்புப் பணிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. **24.6.2006 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆய்வின்போது, 8,406 நிரந்தர வீடுகள் மட்டுமே கட்டி முடிக்கப்பட்டிருந்த நிலையில், தற்போது 19.3.2007 அன்று இருந்த நிலவரப்படி 22,420**




**வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு, எஞ்சியவற்றிற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.** தனியார் தொண்டு நிறுவனங்களால் கட்டப்பட இயலாமல் இருந்த 3,000 வீடுகளை அரசே கட்ட ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதுமட்டுமன்றி, **புயல், வெள்ளம், சுனாமி எனத் தொடர்ந்து இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்படும் கடலோரப்பகுதிகளில் வாழும் மீனவர்கள் உள்ளிட்ட ஏழை எளியவர்களைப் பாதுகாக்கும் வண்ணம், கடலிலிருந்து ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்குள் இருக்கும் 52,000 குடிசை வீடுகளில் குடியிருப்போருக்கு, மத்திய அரசின் நிதியுதவியுடன் 22,000 நிரந்தர வீடுகள் அமைத்துத் தர ஆணையிடப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மீதமுள்ள 30,000 வீடுகள் உலக வங்கியின் ஒப்புதலுடன் கட்டிக் கொடுக்கப்படும்.**

## மகளிர் நலன்

**98.** பெண்களுக்கு, சமச் சொத்துரிமையையும் உள்ளாட்சி அமைப்புகளில் 33 சதவீத இட ஒதுக்கீட்டையும் வழங்கி, பெண்ணுரிமை காத்தது இந்த அரசுதான் என்பதை நீங்கள் அறிவீர்கள். இந்த வகையில், நாடாளுமன்றம் மற்றும் சட்டப்பேரவைகளில் மகளிருக்கு 33 சதவீத இடஒதுக்கீடு வழங்குவதற்கான சட்ட முன்வடிவு இன்னும் நிறைவேற்றப்படாமல் உள்ளதை வேதனையுடன் சுட்டிக்காட்டுவதோடு, இது குறித்து விரைந்து முடிவெடுத்து பெண்ணுரிமையை நிலைநாட்ட வகைசெய்யும்படி மத்திய அரசை இந்த அரசு தொடர்ந்து வலியுறுத்தும்.

**99.** ஏழை மற்றும் நடுத்தரக் குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் பயன்பெறும் வகையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ஆகஸ்டு 15–இல் அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வரும், சமையல் எரிவாயு இணைப்பு இல்லாத குடும்பங்களுக்கு, இலவசமாக எரிவாயு அடுப்பும் சமையல் எரிவாயு இணைப்பும் வழங்கும் திட்டத்தின் கீழ், முதல் கட்டமாக 3 இலட்சம் எரிவாயு இணைப்புகள் வழங்கத் திட்டமிடப்பட்டு, இதுவரை 74,201 குடும்பங்களுக்கு இலவசமாக எரிவாயு அடுப்பும், இலவச எரிவாயு இணைப்பும் வழங்கப்பட்டுள்ளன. **வரும் நிதியாண்டில், ஐந்து**




**இலட்சம் இலவச இணைப்புகள் வழங்க ரூபாய் 100 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம், அடுத்து வரும் ஆண்டுகளிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.**

**100.** சாதிமத பேதமின்றி மீண்டும் செயல்படுத்தப்பட்டு வரும், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திருமண உதவித் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் திருமண உதவித் தொகை, ரூபாய் 10,000 லிருந்து ரூபாய் 15,000 ஆக இந்த அரசால் உயர்த்தப்பட்டுள்ளது. ஏழைப் பெண்களின் திருமணச் செலவுச் சுமையைக் குறைத்து, அவர்களது குடும்பங்களுக்குப் பேருதவி புரியும் இத்திட்டத்தின் கீழ் இந்த ஆண்டு இதுவரை 46,000 ஏழைப் பெண்கள் பயனடைந்துள்ளனர். வரும் நிதி ஆண்டிலும், 50,000 பெண்கள் பயன்பெறும் வகையில் ரூபாய் 75 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## மகளிர் சுயஉதவிக் குழுக்கள்

**101.** 1989ஆம் ஆண்டு தி.மு.கழக ஆட்சியில் தருமபுரி மாவட்டத்தில் தொடங்கப்பட்ட மகளிர் சுய உதவிக் குழு இயக்கம் மேலும் வலுப்பெற, அவர்களுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில், சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் பயிற்சி உதவித் தொகையை, இந்த அரசு உயர்த்தி வழங்கியுள்ளது. நடப்பு நிதியாண்டில் 19,000 புதிய சுயஉதவிக் குழுக்கள் அமைக்கப் பட்டுள்ளன. **2007–2008ஆம் ஆண்டில் 5 இலட்சம் மகளிர் பயன்பெறும் வகையில் 25,000 புதிய சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்படும். இந்தக்**

குழுக்களின் திறனை மேம்படுத்தி, வருவாய் ஈட்டும் தொழில்களைத் தொடங்குவதற்கு, தொடர்ந்து இந்த அரசு ஊக்கமளிக்கும்.

## வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

102. வறியோரிலும் மிக வறியவர், ஏழை மகளிர், ஊனமுற்றோர், ஆதரவற்றோர் போன்ற சமுதாயத்தின் அடித்தளத்தில் உழலுவோரின் முன்னேற்றத்திற்காக, உலக வங்கியின் உதவியுடன் 'வாழ்ந்து காட்டுவோம்' திட்டத்தை முதல் கட்டமாக 15 மாவட்டங்களில் உள்ள 15 ஒன்றியங்களில் இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. **ரூபாய் 717 கோடி மதிப்பீட்டிலான இத்திட்டம், வரும் ஆண்டில் விரிவாக்கப்பட்டு, 70 ஒன்றியங்களில் உள்ள 2,432 ஊராட்சிகளில் செயல்படுத்தப்படும்.**

## முதியோர் மற்றும் ஆதரவற்றோர் நலன்

103. முதியோர், ஆதரவற்ற விதவைகள், கணவனால் கைவிடப்பட்டோர் போன்றோர்க்கு வழங்கப்பட்டு வந்த ஒய்வூதியத் தொகையை




ரூ.200 லிருந்து ரூ.400 ஆக இந்த அரசு இரண்டு மடங்கு உயர்த்தி வழங்கியுள்ளது. சுமார் 11 இலட்சம் ஏழைகள் மற்றும் ஆதரவற்றோர்க்கு வாழ்வளிக்கும் இத்திட்டத்திற்காக ரூபாய் 625 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## மனவளர்ச்சி குன்றியோர் நலன்

**104. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அண்மையில் வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற மனவளர்ச்சி குன்றியோர் மாநாட்டில் அறிவித்தவாறு, மனவளர்ச்சி குன்றியோரைப் பராமரிக்கத் தனிக்கவனம் தேவையென்பதைக் கருத்தில் கொண்டு, அவர்களுக்குத் தேவையான உறைவிடத்துடன் கூடிய சிறப்புக் கல்வி (Special Education) மற்றும் தொழிற்பயிற்சி வசதிகள் அனைத்து மாவட்டங்களிலும் அளிக்கப்பெற இந்த அரசு ஆவன செய்வதுடன், அவர்களைப் பராமரித்திட ஆர்வமுடன் முன்வரும் தகுதியுடைய தொண்டு நிறுவனங்களுக்கு ஊனமுற்றோர் நலவாரியம் மூலமாக தேவையான நிதியுதவியும் வழங்கும்.**

**105. தங்களைத் தாங்களே பராமரித்துக் கொள்ளக்கூட இயலாத மனவளர்ச்சி குன்றியோரின் வாழ்வாதாரத்திற்கு எத்தகைய கொழு கொம்பும் இல்லாத கொடுமையைப் போக்கிடும் வகையில், வருமான வரம்பைக் கருத்தில் கொள்ளாமல், எண்ணிக்கை வரையறையின்றி இவர்கள் அனைவருக்கும் கடும் ஊனமுற்றோருக்கான உதவித் தொகை வழங்கப்படும். இவர்களுக்கு மாதாந்திர உதவித் தொகை வழங்குவதற்காகவும், அவர்களைப் பராமரிப்பதற்காகத் தொண்டு நிறுவனங்களுக்கு நிதியுதவி அளிப்பதற்காகவும், இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 25 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## ஊனமுற்றோர் நலன்

106. முழுமையாகக் கண்ணொளி இழந்தோர் படும் வேதனைகள், மனநலம் குன்றியோரின் வேதனைகளைவிடக் கொஞ்சமும் குறைந்தவை அல்ல என்பதால், மனவளர்ச்சி குன்றியோருக்கு அளிக்கப்படும் வசதிகள் போன்றே இவர்களுக்கும் தேவையான அளவுக்கு வசதிகள் வழங்கிட இந்த அரசு ஆவன செய்யும். **கல்லூரிகளில் படிக்கும் பார்வையற்றோருக்கு, சென்னை மற்றும் மாவட்டத் தலைமையகங்களில் உறைவிட வசதிகள் செய்து கொடுக்கப்படும். மேலும், இவர்களுக்கு மடக்கு**

**ஊன்றுகோல்கள் (Folding Sticks) மற்றும் கருப்புக் கண்ணாடிகள் (Black Goggles) வழங்கும் திட்டத்தின் கீழ், இதுவரை இக்கருவிகள் வழங்கப்படாமல் உள்ள அனைத்துப் பார்வையற்றோருக்கும் 2007–2008ஆம் ஆண்டில் இவை வழங்கப்படும்.**

107. ஊனமுற்றோர்க்கு வழங்கப்படும் உதவித் தொகையை இந்த அரசு நடப்பாண்டில் ரூ.200 லிருந்து ரூ.400 ஆக உயர்த்தியுள்ளதால் 71,000 ஊனமுற்றோர் தகுந்த பயன்பெற்று வருகின்றனர். மேலும் கடும் ஊனமுற்றோருக்கு வழங்கப்படும் உதவித்தொகை ரூ.200 லிருந்து ரூ.500 ஆக உயர்த்தப்பட்டு, இதனால் 10,000 கடும் ஊனமுற்றோர் பயனடைந்துள்ளனர். **தமிழகத்தில் உள்ள கால் ஊனமுற்றோருக்கு, அரசாலும், தொண்டு நிறுவனங்களாலும் மூன்று சக்கர வண்டிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதுவரை மூன்று சக்கர வண்டிகள் வழங்கப்படாத கால் ஊனமுற்றோர் அனைவருக்கும் மூன்று சக்கர வண்டிகள் வழங்கும் வகையில், 6,000 வண்டிகள் ரூபாய் 180 இலட்சம் செலவில் வரும் ஆண்டில் வழங்கப்படும். கடும் ஊனமுற்றோர் சிரமமின்றி நீண்ட தூரம் சென்று வரும் வகையில், அவர்களுக்கு மோட்டார் பொருத்தப்பட்ட மூன்று சக்கர வண்டிகள் வழங்கப்படும்.**

108. இவை அன்னியில், ஊனமுற்றோர்க்கென ஒரு தனி நலவாரியம் அமைத்து, அனைத்து உதவிகளையும் வழங்க இந்த அரசு ஆவன செய்துள்ளது. **இந்த நல உதவிகள் அரசால் எக்காலத்திலும் தொடர்ந்து வழங்கப்படுவதை உறுதி செய்யும் வகையில், இதற்கான தனிச் சட்டமுன்வடிவு இந்தச் சட்டமன்றக் கூட்டத்தொடரிலேயே அறிமுகப்படுத்தப்படும்.**

## நெசவாளர் நலன்

109. **கைத்தறி நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பை அளிக்கும் வகையில், பொங்கல் திருநாளை ஒட்டி ஏழை எளியோர்களுக்கு இலவச வேட்டி மற்றும் சேலை வழங்கும் திட்டம் 2007–2008 நிதி ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.** இத்திட்டத்திற்காக ரூபாய் 256 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம் வழங்க, இந்த அரசால் கடந்த ஆண்டு அறிவிக்கப்பட்ட திட்டத்திற்காக 2007-2008ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 78 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதனால் 1,50,000 கைத்தறி நெசவாளர்களும், 80,000 விசைத்தறி நெசவாளர்களும் தொடர்ந்து பயன்பெறுவர். **60 வயது முதிர்ந்த கைத்தறி நெசவாளர்களுக்குத் தற்போது மாதந்தோறும் வழங்கப்படும் ரூ.200 ஓய்வூதியத் தொகை, ரூ.400ஆக, இருமடங்காக உயர்த்தப்படும். இதற்கான கூடுதல் செலவை அரசே ஏற்கும்.** இத்திட்டத்தின் மூலம் சுமார் 13,000 ஓய்வூதியம் பெறும் கைத்தறி நெசவாளர்கள் பயன்பெறுவர்.

110. நெசவாளர்களின் வருவாயைப் பெருக்கும் நோக்கில், அகமதாபாத்தில் உள்ள தேசிய வடிவமைப்பு நிறுவனத்துடன் இணைந்து புதிய வடிவமைப்புகளை அறிமுகப்படுத்தி, கைத்தறித் துணிகளின் விற்பனையை அதிகரிப்பதற்கான திட்டத்தை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. பட்டு நெசவுக்குத் தேவையான பட்டுநூலை, தமிழ்நாட்டிலேயே உற்பத்தி செய்யும் நோக்குடன் 2007-2008ஆம் ஆண்டில் கூடுதலாக 10,000 ஏக்கர் நிலப்பரப்பில் மல்பெரி சாகுபடி செய்யப்படும். ரூபாய் 15 கோடி மதிப்பீட்டில் மைய அரசு நிதியுதவியுடன் பட்டு வளர்ப்பு மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படும்.

**111. தமிழகத்தைச் சேர்ந்த கைவினைஞர்கள் தாங்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை நேரடியாகச் சுற்றுலாப் பயணிகளிடம் விற்பனை செய்ய ஏதுவாக ஒரு விற்பனை வளாகம் கன்னியாகுமரியில் அரசால் அமைக்கப்படும்.** இத்திட்டத்திற்காக மைய அரசிடமிருந்து பெறப்படும் ரூபாய் 140 இலட்சம் நிதி உதவியோடு, மாநில அரசும் தன் பங்காக ரூபாய் 60 இலட்சம் அளிக்கும்.

## மீனவர் நலன்

112. அண்மைக்காலத்தில், தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரின் தாக்குதலுக்கு

ஆளாகி, சந்தித்துவரும் இன்னல்கள் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தியப் பிரதமருக்கு கடிதங்கள் எழுதியுள்ளார். 12.3.2007 அன்று சென்னையில், தமிழக அமைச்சர்கள் முன்னிலையில் ஒரு மாபெரும் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டு இலங்கைத் துணைத் தூதரிடம் மனு கொடுக்கப்பட்டுள்ளது. டெல்லியிலும் மத்திய தமிழக அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், இந்தியப் பிரதமரைச் சந்தித்து இது குறித்து முறையிட்டுள்ள நிலையில், மைய அரசு இப்பிரச்சினையில் உடனடியாகத் தலையிட்டு, தமிழக மீனவர்களைப் பாதுகாக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

113. இந்த அரசு, மீனவர்களுக்கெனத் தனியாக மீனவர் நல வாரியம் ஒன்றை அமைக்க மேதகு ஆளுநர் உரையில் அறிவித்தது. **நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள், விவசாயிகள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் அனைத்து உதவிகளும் மீனவர்களுக்கும் வழங்கப்படும். இந்த உதவிகள் தொடர்ந்து வழங்கப்படும் வகையில், இதற்கான தனிச்சட்டம் இச்சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே அறிமுகப்படுத்தப்படும். மீன்களை உலர வைத்தல் மற்றும் மீன்களை விற்பனை செய்தல் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள பெண்களுக்கும் இத்திட்டத்தின் கீழ் உதவிகள் வழங்கப்படும். இதற்கென ரூபாய் 5 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

114. மீன் பிடிக்கச் செல்ல இயலாத காலங்களில் மீனவர்களுக்கு உதவித்தொகை அளிக்கும் திட்டத்திற்கு ரூபாய் 28 கோடியும், மீனவ மகளிருக்கு உதவித் தொகை அளிக்கும் திட்டத்திற்கு ரூபாய் 12.48 கோடியும் இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், மீனவர்கள் பயன்படுத்தும் டீசல் மீதான விற்பனை வரி விலக்கு, மதிப்புக்கூட்டு வரி செயல்பாட்டிற்கு வந்துள்ள நிலையிலும் தொடரும்.

## வேலைவாய்ப்பற்ற இளைஞர் நலன்

115. படித்து வேலையின்றி இருக்கும் இளைஞர்களின் துயர்துடைக்கும் வகையில், வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து காத்திருப்போருக்கு, மாதமொன்றுக்கு ரூபாய் 300 வரையில் உதவித் தொகையாக வழங்கும் திட்டத்தை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. 11.11.2006 அன்று முதலமைச்சர் கலைஞர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட இத்திட்டத்தின் முதற்கட்டத்தின் கீழ் 2,06,766 இளைஞர்களும், 24.2.2007 அன்று தொடங்கிவைக்கப்பட்ட இரண்டாவது கட்டத்தின் கீழ், கூடுதலாக 1,03,629 இளைஞர்களும் ஆக மொத்தம் 3,10,395 இளைஞர்கள் பயன்பெற்று வருகின்றனர். இத்திட்டத்திற்கு, வரும் நிதியாண்டில் ரூபாய் 95 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

116. இவ்வரசின் தொடர் முயற்சிகளின் பயனாகத் தமிழகத்தில் தொழில்துறையும் நற்பணித்துறையும் மிக வேகமாக வளர்ந்து வருகின்றன. இந்த வளர்ச்சியால் வேலை வாய்ப்புகள் பெருகி வரும் அதே வேளையில், இந்த வேலைவாய்ப்புகளைத் தமிழக இளைஞர்கள் பெற்றுப் பயனடைய, அவர்கள் மேற்கொள்ள விரும்பும் பணிக்கான திறனைப் பெற, பயிற்சி அளித்தல் இன்றியமையாததாகும். இந்த வகையில், **வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் அரசு வழங்கும் நிதியுதவித் திட்டத்தின் கீழ் பயன்பெறுவது மட்டுமன்றி, வேலைவாய்ப்பு கிடைக்கும்போது அந்த வேலைக்கான திறன் எய்தும் பயிற்சி பெறுவதற்காக, வரும் நிதியாண்டில் 50,000 இளைஞர்களுக்கு அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மூலமாக ரூபாய் 8 கோடி செலவில் தொழிற்பயிற்சி அளிக்கப்படும்.**

117. அரசுப் பணியிடங்களை விரைவில் நிரப்ப ஏதுவாக அனைத்து வேலைவாய்ப்பகங்களும் கணினி மயமாக்கப்படும். **அதிக வேலை வாய்ப்புகளை உருவாக்கவல்ல ஆயத்த ஆடை மற்றும் பின்னலாடைத் தொழிற்சாலைகளில், பயிற்சி பெற்ற தொழிலாளர்களின் பற்றாக்குறையை நீக்கும் வகையில், ஒசூர், மதுரை, திருவண்ணாமலை, திருநெல்வேலி மற்றும் தருமபுரியில் ரூபாய் 2 கோடி செலவில் பயிற்சி நிலையங்கள் அமைக்கப்படும்.** சுய வேலைவாய்ப்பை ஏற்படுத்தும் வகையில் 10,000

ஆட்டோ ரிக்ஷாக்களுக்கு, அனுமதிச் சீட்டு வழங்க அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

118. வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்குத் தகுந்த வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தும் வகையில் 10,000 இளைஞர் சுயஉதவிக் குழுக்கள் அமைக்கப்படும் என்று இந்த அரசு அறிவித்தது. அதன்படி, இதுவரை 8,600 இளைஞர் சுயஉதவித் குழுக்கள் அமைக்கப்பட்டு, தொழில் நிறுவனங்களுடன் இணைந்து இவர்களுக்குத் தொழிற்பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

## அமைப்பு சாராத் தொழிலாளர் நலன்

119. எந்தவித சமூகப் பாதுகாப்பும் இன்றி, கவனிப்பாரற்று இருந்த அமைப்புசாராத் தொழிலாளர்களின் சமூகப்பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் தொழிலாளர் நல வாரியங்களை அமைத்தது தி.மு.க அரசுதான். இடையில் கலைக்கப்பட்ட இவ்வாரியங்களை, இந்த அரசு மீண்டும் அமைத்து, அமைப்புசாராத் தொழிலாளர்களுக்கான சமூகப்பாதுகாப்பு மற்றும் நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது. 2006-2007ஆம் ஆண்டில் இதுவரை பல்வேறு நலவாரியங்களின் வாயிலாக 1,21,596 தொழிலாளர்களுக்கு ரூபாய் 29 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. ஆயிரக்கணக்கான அமைப்புசாராத் தொழிலாளர்களுக்கு நலத்திட்ட உதவிகளைச் சுணக்கமின்றி வழங்குவதற்கு ஏதுவாக அமைப்புசாராத் தொழிலாளர் நலவாரிய அலுவலகங்கள் கணினிமயமாக்கப்படும்.

## ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன்

120. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது இந்த அரசின் தலையாய இலட்சியங்களில் ஒன்றாகும். நாட்டிலேயே முதன் முறையாக, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் பொருளாதார மேம்பாட்டுக்காக மைய அரசு வழங்கி வரும் சிறப்பு மைய உதவியைப் போன்று (Special Central Assistance), ரூபாய் 25 கோடி மதிப்பீட்டில் ஒரு சிறப்பு மாநில நிதி உதவித் திட்டத்தை இந்த அரசு அறிவித்துச் செயல்படுத்தியது. வரும் நிதி ஆண்டிலும் இத்திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்த ரூபாய் 25 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**121. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களில் படிப்பில் சிறந்து விளங்கும் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில், ஒரு புதிய திட்டத்தைச் செயல்படுத்த இந்த அரசு முன்வந்துள்ளது. இத்திட்டத்தின் கீழ், ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசுப் பள்ளிகளில் 10ம் வகுப்பில் அதிக மதிப்பெண் பெறும் 10 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ மாணவியரைத் தேர்ந்தெடுத்து, தமிழகத்தில் உள்ள தலைசிறந்த மேல்நிலைப் பள்ளிகளில் அந்த மாணவர்களின் விருப்பப்படி 11ஆம் வகுப்பில் சேர்த்து, சிறந்த முறையில் படித்திட வழிவகை செய்யப்படும். அவர்களுக்கான கல்விக் கட்டணம் மற்றும் உறைவிடச் செலவு ஆகியவற்றை அரசே ஏற்கும். இத்திட்டத்திற்காக, இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 2 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

122. 2006-2007ஆம் நிதி ஆண்டில் 1,97,400 பயனாளிகள் பயன்பெறும் வகையில் ரூபாய் 208 கோடி செலவில் ஆதிதிராவிடர் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் 1,70,036 ஆதி திராவிடர்கள் பயனடையும் வகையில் சுய உதவிக் குழுக்களுக்கு ரூபாய் 25.49 கோடி நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. 11,982 இளைஞர்களுக்கு ரூபாய் 22.56 கோடி செலவில் வேலைவாய்ப்புகளுக்கான தொழில் பயிற்சிகள் வழங்கப் பட்டுள்ளன. மனிதக் கழிவை மனிதனே அள்ளும் கொடுமையை நீக்க, இந்தப் பணியில் ஈடுபட்ட 11,691 துப்புரவுப் பணியாளர்களுக்கும் மறுவாழ்வு அளிக்கும் திட்டம், ரூபாய் 58.4 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை 3,199 துப்புரவுப் பணியாளர்கள் மாற்றுத் தொழிலுக்கான நிதி உதவி பெற்றுப் பயனடைந்துள்ளனர்.

## பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன்

123. **தேர்தல் அறிக்கையில் அறிவித்தவாறு, தற்போது தனியார் கட்டடங்களில் இயங்கிவரும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மாணவர் களுக்கான 50 இல்லங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் ரூபாய் 32.5 கோடி மதிப்பீட்டில் கட்டிக் கொடுக்கப்படும். இவ்வகுப்புகளைச் சேர்ந்த திறன்மிக்க மாணவர்களுக்கும், ஆதி திராவிடர் மாணவர்களுக்கான திட்டம் போன்றே, தலைசிறந்த மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் வாய்ப்பளிக்கும் திட்டம் செயல்படுத்தப்படும்.** 2006-2007ஆம் ஆண்டிலிருந்து, 13,290 பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபின இளைஞர்கள் பயனடையும் வகையில் ரூபாய் 10 கோடி நிதி ஒதுக்கீட்டில் வேலைவாய்ப்புப் பயிற்சித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதைப்போன்று, வரும் ஆண்டிலும் வேலைவாய்ப்புப் பயிற்சித் திட்டத்திற்காக ரூபாய் 10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

124. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், 1996–2001ஆம் ஆண்டுகளில், ஏழை எளிய பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்களுக்கு இலவச வீட்டு மனைப் பட்டா வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வந்தது. இடையில் நிறுத்தப்பட்டு, 2006-2007ஆம் நிதி ஆண்டில் இந்த அரசால் மீண்டும் துவக்கப்பட்ட இத்திட்டத்திற்காக, வரும் நிதி ஆண்டிலும் ரூபாய் 5 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் நிலம் கையகப்படுத்தும் பணிக்கெனத் தனியாகப் பணியாளர்கள் நியமிக்கப்படுவார்கள்.

125. **பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சேர்ந்த சிறு, குறு விவசாயிகளுக்கு நீர்ப்பாசன வசதிகள் அமைப்பதற்காக, அதிகபட்சம் ரூபாய் ஒரு இலட்சம் வரை மானியத்துடன் கூடிய கடன் வழங்குவதற்கான புதிய திட்டம் வரும் நிதி ஆண்டில் செயல்படுத்தப்படும். வங்கிக் கடன் மற்றும் அதற்கு இணையான அதிகபட்சம் தலா ரூபாய் 50,000 அளவிலான 50 விழுக்காடு அரசு மானியம் வழங்கும் இத்திட்டம், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலமாகச் செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்காக ரூபாய் 25 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## சிறுபான்மையினர் நலன்

126. இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் சிறுபான்மையினருக்கு அளித்துள்ள உரிமைகளைப் பேணிப் பாதுகாக்க, இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. மைய அரசு அமைத்த நீதியரசர் இராஜேந்தர் சச்சார் குழுவின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள, பொருளாதார ரீதியிலும், கல்வி அறிவிலும் சிறுபான்மையினரின் பின்தங்கிய நிலையைக் கருத்தில் கொண்டு, அனைத்துத் துறைகளிலும் அவர்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் கிடைத்திடத் தேவையான முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளும். **சிறுபான்மையினரின் சமூகப் பொருளாதார முன்னேற்றத்திற்கு அரசின் தனி கவனம் தேவை என்பதைக் கருத்தில் கொண்டு, அவர்களின் நலனுக்கென ஒரு தனி இயக்குனரகம் அமைத்திட இந்த அரசு முடிவு செய்துள்ளது.**

127. **அரசு மற்றும் தனியார் துறைகளில் அதிக வேலைவாய்ப்புகளையும், சுய வேலை வாய்ப்புகளையும் பெற, சிறுபான்மையினரைத் தகுதியடையச் செய்யும் நோக்குடன், 2007–2008ஆம் ஆண்டில் சிறுபான்மையினர் திறன் பயிற்சித் திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டம், ரூபாய் 250 இலட்சம் மதிப்பீட்டில் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் செயல்படுத்தப் படும். இத்திட்டத்தின் கீழ், 5,000 சிறுபான்மையின இளைஞர்கள் மற்றும் பெண்களுக்குத் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த தொழில்கள், ஆயத்த ஆடை தயாரித்தல் போன்ற பல்வேறு தொழில்களில் பயிற்சிகள் அளிக்கப்படும். வரும் நிதியாண்டில், தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம்,**

**21,000 பயனாளிகள் பயன்பெறும் வகையில் ரூபாய் 30 கோடி கடன் உதவி வழங்கப்படும்.**

## இலங்கைத் தமிழர் நலன்

**128.** தமிழ்நாட்டில் இருக்கும் இலங்கை அகதிகளுக்கு வழங்கப்படும் உதவித் தொகையை இருமடங்காக உயர்த்தியதோடு, அகதிகள் முகாம்களில் உள்ள வசதிகளை மேம்படுத்தவும், இந்த அரசு தேவையான நடவடிக்கைகளை எடுத்துவருகிறது. இலங்கையில் வாழும் தமிழர்களின் உயிருக்கும் உடமைக்கும் பாதுகாப்பு இல்லாத சூழல் தொடர்ந்து வருவதைக் கருத்தில் கொண்டு, பல ஆண்டுகளாக நிலவிவரும் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண, இந்திய அரசு விரும்புகின்ற வகையில் பேச்சுவார்த்தைகள் மூலமாக அமைதியான அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்று இந்த அரசு விரும்புகிறது.

## சத்துணவில் முட்டை வழங்கும் திட்டம்

**129.** அனைத்துக் குழந்தைகளுக்கும் சத்தான உணவு கிடைக்கச் செய்யும் வகையில், கல்வி வளர்ச்சி நாளாம் காமராஜர் பிறந்த நாள் முதல், வாரம் இருமுறை முட்டைகள் வழங்கும் திட்டத்தை இவ்வரசு நடைமுறைபடுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 68,14,601 குழந்தைகள் சத்தான உணவு உண்டு வருகின்றனர். **கல்வி கற்கும் பருவத்தில் குழந்தைகளின் அறிவு மற்றும் உடல் வளர்ச்சிக்குச் சிறந்த புரதச் சத்து அவசியம் என்பதைக் கருத்தில் கொண்டு, குழந்தைகளுக்கு மேலும் கூடுதல் ஊட்டச்சத்து அளிக்கும் வகையில், வரும் கல்வி வளர்ச்சி நாள் முதல், இத்திட்டத்தின் கீழ் வாரம் மூன்று முறை முட்டை வழங்கப்படும். இதனால் அரசுக்கு ரூபாய் 53 கோடி கூடுதல் செலவு ஏற்படும்.** 2007–2008ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் வாரம் மூன்று முறை முட்டை வழங்கும் திட்டத்திற்காக ரூபாய் 165 கோடியும் மொத்தமாக புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். பெயரால் அமைந்துள்ள சத்துணவுத் திட்டத்திற்கு ரூபாய் 781 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.




## தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாடு

**130.** செம்மொழித் தகுதியை நமது தமிழ் மொழிக்கு மத்திய அரசு வழங்கியுள்ள போதிலும், முறைப்படி அதற்கான உரிமைகளையும், சிறப்புக்களையும், அதிகாரம், நிதியாதாரம் ஆகியவற்றையும் பெறுவதற்கு வலுவாக வாதிட வேண்டிய நிலைமை இன்னமும் இருப்பதைச் சுட்டிக்காட்டுவதோடு, தமிழ் மக்களின் கவலை தீரவும், களிப்பு மேலிடவும் தமிழக அரசும், தமிழகச் செம்மொழிக் குழுவினரும் வலியுறுத்தி வேண்டுகின்ற கோரிக்கைகளை நிறைவேற்றுவதில் மத்திய அரசின் மனித வள மேம்பாட்டுத் துறையின் தாமதத்தைத் தவிர்த்திட, இந்த அரசு முனைப்பான முயற்சிகள் மேற்கொண்டு, தொடர்ந்து செயல்படும்.

**131.** மத்திய ஆட்சி மொழிகளாக மாநில ஆட்சி மொழிகளும் இடம்பெற வேண்டுமென்றும், அதில் தவிர்க்க முடியாத சிக்கல் இருப்பின், முதலில் தமிழ் மொழியை மத்திய ஆட்சி மொழிகளில் ஒன்றாக ஆக்கிட வேண்டுமென்றும், திருச்சியில் 1996ஆம் ஆண்டு நடைபெற்ற மாநில மாநாட்டிலிருந்து தி.மு. கழகம் கூறி வருவதை நிறைவேற்ற மத்திய அரசு முன் வரவேண்டுமென வலியுறுத்துவோம்.

**132.** 1974ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்டத்தின் கீழ், திட்டமிடப்பட்ட 31 பகுதிகளில் இதுவரை 18 பகுதிகள் அச்சிட்டு ஏற்கெனவே வெளியிடப்பட்டும், 2006-2007ஆம் நிதியாண்டில் 7 பகுதிகள் இறுதியாக்கம் செய்யப்பட்டு வெளியிடப்படவும் உள்ளன. எஞ்சியுள்ள 6 பகுதிகளை வெளியிடும் பணி, வரும் ஆண்டுகளில் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

133. தமிழுக்குத் தொண்டாற்றிய தமிழறிஞர்கள் பெருமையைப் பாராட்டிப் போற்றி




வரும் இந்த அரசு, அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு வழங்கப்படும் நிதியுதவியை ரூ.500லிருந்து ரூ.1,000 ஆகவும், எல்லைப் போராட்ட தியாகிகளுக்கு வழங்கப்பட்டு வரும் நிதியுதவியை, ரூ.3,000லிருந்து ரூ.4,000 ஆகவும் உயர்த்தியுள்ளது.

134. இந்த அரசு அமைந்ததற்குப் பின்னர், பரிதிமாற் கலைஞர் என்ற சூரிய நாராயண சாஸ்திரியார், புலவர் குழந்தை, சிலம்புச்செல்வர் ம.பொ.சி., புலவர் குலாம் காதிறு நாவலர், தி.வை.சதாசிவ பண்டாரத்தார், மாயூரம் வேதநாயகம் பிள்ளை, டாக்டர் சி.இலக்குவனார், மகாவித்துவான் தண்டபாணி தேசிகர், புலவர் கா.கோவிந்தன், தெ.பொ.மீனாட்சி சுந்தரனார், த.நா.குமாரசாமி, கா.சு.பிள்ளை, தி.ஜ.ரங்கநாதன் (தி.ஜ.ர), நாரண.துரைக்கண்ணன், டாக்டர். மா.இராசமாணிக்கனார், டாக்டர். வ.சுப.மாணிக்கம் மற்றும் சக்தி வை.கோவிந்தன் ஆகிய 17 தமிழ்ச் சான்றோர்களின் நூல்கள் இதுவரை நாட்டுடைமையாக்கப்பட்டு, அவர்களுடைய வாரிசுதாரர்களுக்கு ஒரு கோடியே 29 இலட்சம் ரூபாய் பரிவுத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. **அடுத்து, சிங்காரவேலர், கிருபானந்த வாரியார், குன்றக்குடி அடிகளார், கி.ஆ.பெ.விசுவநாதம், கி.வா.ஜகன்னாதன், அவ்வை துரைசாமி பிள்ளை, அ.ச.ஞான சம்பந்தனார், திருக்குறளார் முனுசாமி, உவமைக்கவிஞர் சுரதா, சாவி, மாவெண்கோ என்ற வ.கோ.சண்முகம், தீபம் நா.பார்த்தசாரதி, எஸ்.எஸ்.தென்னரசு, சி.பி.சிற்றரசு, ஏ.வி.பி.ஆசைத்தம்பி, டி.கே.சீனுவாசன், ராம.அரங்கண்ணல், கவிஞர் வாணிதாசன், கவிஞர் கருணானந்தம், ஜலகண்டபுரம் ப.கண்ணன் ஆகியோரது நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு, அவரவர்கள் எழுதிய நூல்களின் எண்ணிக்கை, சிறப்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு, அவர்தம் மரபுரிமையாளர்களுக்குப் பரிவுத் தொகை வழங்கப்படுவதுடன், தமிழ்ச் சான்றோர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கும் திட்டம் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படும். மறைந்த தமிழ்ச் சான்றோர் அன்னியில், வசதி குறைந்த நிலையில் வாழ்ந்துவரும் தமிழ் எழுத்தாளர்களுக்கும், தமிழ் ஆர்வலர்களுக்கும், பரிவுத் தொகை வழங்கும் புதிய திட்டம் ஒன்றும் நடைமுறைப்படுத்தப்படும்.**

135. **கன்னியாகுமரியில் அய்யன் திருவள்ளுவர் திருவுருவச் சிலையைக் காணவரும் பிற மாநில மற்றும் வெளிநாட்டுப் பயணிகளுக்கு, அய்யன் திருவள்ளுவரின் பெருமை, திருக்குறளின் மேன்மை பற்றிய கையேடுகள், ஆங்கிலம் மற்றும் மாநில மொழிகளில் அச்சிடப்பட்டு வழங்கப்படும்.**

## சமூகச் சீர்திருத்தம்

136. சாதி ஒழிப்பு, மூடநம்பிக்கை ஒழிப்பு, கலப்புத் திருமணம், மதநல்லிணக்கம் போன்ற சமூகச் சீர்திருத்த, பகுத்தறிவு விளக்கப் பணிகளை நடைமுறைப்படுத்த, சமூகச் சீர்திருத்தத் துறை மீண்டும் இந்த அரசால் அமைக்கப்பட்டுள்ளது. இந்தத் துறைக்குத் தேவையான பரிந்துரைகளை வழங்க, பேராசிரியர் நன்னன் அவர்கள் தலைமையில் சமூக ஆர்வலர்கள் ஏழு பேர் கொண்ட குழு அமைக்கப்படும். இந்தக் குழுவின் பரிந்துரைகள், சமூகச் சீர்திருத்தத் துறை மூலமாகச் செயல்படுத்தப்படும்.

137. இந்த அரசு பொறுப்பேற்றவுடன் தந்தை பெரியார் அவர்களின் நெஞ்சிலிருந்த முள்ளினை அகற்றி அவரது கனவினை நனவாக்கும்

வகையில், இந்துக்களில் தகுதி பெற்ற அனைத்துச் சாதியினரும், இந்து சமயத் திருக்கோயில்களில் அர்ச்சகர் ஆகலாம் என்ற சமத்துவக் கொள்கையை நிலைநாட்டும் ஆணையை வெளியிட்டது. இதனை நடைமுறைக்குக் கொண்டு வருவது தொடர்பான ஆலோசனைகள் வழங்குவதற்காக, ஓய்வுபெற்ற நீதியரசர் திரு. ஏ.கே. ராசன் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட உயர்நிலைக்குழு அளித்த பரிந்துரைகள் அனைத்தையும் அரசு ஏற்றுக்கொண்டு ஆணை வெளியிட்டுள்ளது. **இக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் முதல் கட்டமாக, பழனி, மதுரை, திருச்செந்தூர் மற்றும் திருவண்ணாமலை ஆகிய இடங்களில் சைவ ஆகமத்திற்கும்; திருச்சி மற்றும் சென்னையில் வைணவ ஆகமத்திற்கும் அர்ச்சகர் பயிற்சி நிலையங்கள் தொடங்கப்படும்.**

## சுற்றுலா

138. உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் நோக்குடன், சுற்றுலாத் தலங்களை மேம்படுத்த 2007-2008ஆம் ஆண்டில் ரூபாய் 27 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், ஏலகிரி, திருவரங்கம், மெரினா கடற்கரை, உதகமண்டலம், முதுமலை போன்ற முக்கியச் சுற்றுலா மையங்களில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும். **வண்டலூர் உயிரியல் பூங்காவில் இரவுக் கானக உலா (Night Safari) திட்டத்திற்கான விரிவான ஆய்வறிக்கை தயாரிக்கப்பட்டு செயல்படுத்தப் படும். சென்னைக் கடற்கரையில் சர்வதேசத் தரத்திலான மீன் காட்சியகம் ஒன்று அமைக்கப்படும்.**

**139. தமிழர்களின் சிற்பக் கலைத் திறனுக்குத் தலைசிறந்த எடுத்துக்காட்டாக விளங்கிவரும் மாமல்லபுரத்தில், சுற்றுலாப் பயணிகளுக்கு நமது சிற்பக் கலைஞர்களின் கலைத்திறனை ஒருங்கே அறிமுகம் செய்யும் வகையில் 'சிற்பப் பூங்கா' (Sculpture Park) ஒன்று அமைக்கப்படும். குழந்தைகள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் பல்வகை வண்ணத்துப்பூச்சி இனங்களை ஒரே இடத்தில் காணும் வகையில் வண்டலூர், வனவிலங்கு பூங்காவில் ஒரு சிறப்புப் பகுதியாக 'வண்ணத்துப் பூச்சிப் பூங்கா' (Butterfly Park) ஒன்று அமைக்கப்படும்.**




## சமத்துவப் பொங்கல்

140. தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாள் இந்த ஆண்டு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, சமத்துவப் பொங்கலாக மாநிலமெங்கும் மக்களால் பேருவகையோடு கொண்டாடப்பட்டது. **இனி வரும் ஆண்டுகளிலும் பொங்கல் விழா தமிழ் மக்களின் பங்கேற்புடன் அரசு விழாவாகச் சிறப்பாகக் கொண்டாடப்படும்.** இக்கொண்டாட்டங்களின்போது, சென்னையிலும், மாவட்டத் தலைநகரங்களிலும் ஏனைய நகரங்களிலும் மற்றும் பேரூர்களிலும், தமிழ் கலாச்சாரத்தின் சிறப்புகளைப் பறைசாற்றும் பண்பாட்டுச் சின்னங்களாக விளங்கும்



தமிழகத்தின் பாரம்பரியக் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்படும். மேலும், சுற்றுலாத்துறையும் தமிழக அரசின் இயல், இசை, நாடக மன்றத்தின் தகுதிச் சான்றிதழ் பெற்ற தனியார் அமைப்புகளும் இணைந்து நடத்தும் பாரம்பரியக் கலை நிகழ்ச்சிகளுக்கும் இந்த அரசு தொடர்ந்து ஆதரவளிக்கும். **இந்தக் கலைகளைப் பேணும் வகையில், 'தமிழ்ப் பண்பாட்டுக் கலை மையம்' (Centre for Tamil Culture and Folk Arts) ஒன்றும் அமைக்கப்படும்.**

**141. வரும் 30.10.2007 அன்று, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் நூற்றாண்டு விழாவை அரசின் சார்பில் சிறப்பாகக் கொண்டாட முடிவு செய்யப்பட்டுள்ளதையொட்டி, ரூபாய் 50 இலட்சம் செலவில், பசும்பொன் கிராமத்திலுள்ள அன்னாரது நினைவு இல்லம் பழைமை மாறாமல் புதுப்பிக்கப்பட்டு, நூற்றாண்டு விழா தோரண வாயில் மற்றும் அணையா விளக்கு ஆகியவை அமைக்கப்படுவதோடு, அவரது நினைவிடத்தை வழிபட வரும் பொதுமக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் பணிகளும் மேற்கொள்ளப்படும்.**

**142. மறைந்த பொதுவுடைமைத் தலைவர் திரு. ப.ஜீவானந்தம் அவர்களின் நினைவைப் போற்றும் வகையில் அன்னாரது 100வது பிறந்த நாள் விழா சென்னை, கோவை மற்றும் நாகர்கோவில் நகரங்களில் 21.8.2007 அன்று அரசின் சார்பில் கொண்டாடப்படும்.**

**143. அயோத்திதாச பண்டிதர் அவர்களால் 1907, ஜூன் 19ஆம் நாளன்று தொடங்கப்பட்ட "ஒரு பைசா தமிழன்" எனும் வார இதழ் - அவரது முக்கியமான சாதனைகளில் ஒன்றாகக் கருதப்படுவதாலும், தமிழ் இதழியல் வரலாற்றில் தலைமையானதொரு இடம் வகிப்பதாலும், உலகெங்கும் பரவிக் கிடந்த ஒடுக்கப்பட்ட தமிழர்களை ஒருங்கிணைத்து, அவர்களுக்கு உணர்ச்சி ஊட்டுவதில் முன்னோடி இதழாகத் திகழ்ந்ததாலும்; அந்த இதழுக்கு அரசு சார்பில் நூற்றாண்டு விழா கொண்டாடப்படும்.**

## வனத்துறை

144. ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு வங்கி நிதியுதவியுடன் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின் இரண்டாவது கட்டப் பணிகள் ரூபாய் 567 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 2007-2008ஆம் ஆண்டில் ரூபாய் 115 கோடி மதிப்பீட்டில் இத்திட்டத்தின் கீழ், வனப் பகுதியை ஒட்டியுள்ள 230 கிராமங்களில் 1,27,260 ஏக்கர் பரப்பளவுள்ள தரம் குன்றிய காடுகள் மேம்படுத்தப்படும்.

145. வனப்பகுதிகளுக்கு அருகிலுள்ள விவசாய நிலங்களிலுள்ள பயிர்களை வனவிலங்குகள் சேதப்படுத்துவதைத் தடுக்கும் பொருட்டு 181 கிலோ மீட்டர் நீளத்திற்கு சூரிய மின் வேலி அமைக்க ரூபாய் 290 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

146. மரங்களை வளர்த்து தமிழ்நாட்டின் வனப் பரப்பை அதிகரிக்கும் நோக்குடன் விவசாயிகளின் தரிசு நிலங்களிலும் மரங்களை வளர்ப்பதற்கு ஆவன செய்யப்படும். மேலும், நகர்ப்புரங்களில் காற்றில் கலந்துள்ள மாசினைக் குறைக்கும் நோக்குடன் வனத்துறையால் உயரமாக வளர்க்கப்பட்ட மரக்கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு, கல்வி மற்றும் சுகாதார நிறுவனங்களுக்கு வழங்கப்படும். "மரங்களை நாம் வளர்த்தால் மரங்கள் நம்மை வளர்க்கும்" என்பதைக் கருத்தில் கொண்டு, மரங்கள் நடும் பணியைத் தொண்டு நிறுவனங்களின் பங்கேற்புடன் ஒரு பெரும் மக்கள் இயக்கமாக நடத்த இந்த அரசு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும்.

## விளையாட்டு மற்றும் இளைஞர் நலன்


147. தேசிய மற்றும் சர்வதேசப் போட்டிகளில் தமிழகத்தின் புகழை நிலைநாட்டும் விளையாட்டு வீரர்களுக்கு, இந்த அரசு தொடர்ந்து ஊக்கம் தந்து ஆதரவளிக்கும். **கிராமப்புற இளைஞர்களின் உடல்நலம் பேணுவதோடு அவர்களுடைய விளையாட்டுத் திறனையும்**



தொடர்ச்சி 45 ஆம் பக்கம்...



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள், திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி ஊராட்சி ஒன்றியம், சென்னாவரத்தில் இரண்டாவது கட்டமாக இலவச எரிவாயு அடுப்பு மற்றும் இணைப்புகளை வழங்கினார். உடன் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், அரசு தலைமைச் செயலாளர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளார்கள். (17.3.2007)




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள், மறைமலை நகரில் பி.எம்.டபிள்யு - கார் தொழிற்சாலையைத் தொடங்கி வைத்தார். (29.3.2007)



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களை, கின்னஸ் சாதனைக்காக 29.4 கி.மீ. தூரம் ஓடிய மதுரை வில்லாபுரத்தைச் சேர்ந்த ஐந்தரை வயது சிறுமி எல்.எஸ் சிவஸ்ரீ தனது பெற்றோருடன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார் (19.3.2007). சிறுமியை ஊக்குவிக்கும் வகையில் ரூபாய் ஒரு இலட்சம் வழங்கப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் திருவண்ணாமலை மாவட்டத்தில் மூன்றாம் கட்டமாக நிலமற்ற ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு இலவச நிலங்களை வழங்கினார்கள். (17.3.2007)



மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில், பயனாளிகளுக்கு இலவச எரிவாயு அடுப்பு மற்றும் இணைப்புகளை வழங்கினார். மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. என்.சுரேஷ்ராஜன் அவர்கள் உடன் உள்ளார்.




மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், தருமபுரி மாவட்டத்தில் பயனாளிகளுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்கினார்.



மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் திரு.ஆற்காடு நா. வீராசாமி அவர்கள் கோயம்புத்தூர் மாவட்டத்தில் பயனாளிகளுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்கினார், மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு. பொங்கலூர் நா. பழனிசாமி அவர்கள் உடன் உள்ளார்.



மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி அவர்கள், நாகப்பட்டினம் மாவட்டத்தில், பயனாளிகளுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்கினார்.



மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு. இரா, ஆவுடையப்பன் அவர்கள் தலைமையில், மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு.என்.சுரேஷ்ராஜன் அவர்கள் திருநெல்வேலி மாவட்டத்தில், பயனாளிகளுக்கு இலவச எரிவாயு அடுப்பு மற்றும் இணைப்புகளை வழங்கினார். மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு.டி.பி.எம்.மைதீன்கான் அவர்கள் உடன் உள்ளார்.





மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி. ஆ.தமிழரசி அவர்கள் மதுரை மாவட்டத்தில் பயனாளிகளுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்கினார்.



மாண்புமிகு கதர்வாரியத்துறை அமைச்சர் திரு. கா. ராமச்சந்திரன் அவர்கள் கிருஷ்ணகிரி மாவட்டத்தில், பயனாளிகளுக்கு இலவச எரிவாயு அடுப்பு மற்றும் இணைப்புகளை வழங்கினார்.



மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் டாக்டர். திருமதி. பூங்கோதை அவர்கள் கிருஷ்ணகிரி மாவட்டத்தில், பயனாளிகளுக்கு இலவச எரிவாயு அடுப்பு மற்றும் இணைப்புகளை வழங்கினார்.



மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. தா.மோ. அன்பரசன் அவர்கள், தருமபுரி மாவட்டத்தில் பயனாளிகளுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்கினார்.



மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. ஐ. பெரியசாமி அவர்கள் திண்டுக்கல் மாவட்டத்தில், பயனாளிகளுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்கினார்.



மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள், புதுக்கோட்டை மாவட்டத்தில் பயனாளிகளுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்கினார். மாண்புமிகு மத்திய இணையமைச்சர் திரு. எஸ். ரகுபதி அவர்கள் உடன் உள்ளார்.



மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் குடிசைமாற்று வாரியத்துறை அமைச்சர் திரு. சுப.தங்கவேலன் அவர்கள், இராமநாதபுரம் மாவட்டத்தில் பயனாளிகளுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்கினார்.

36ஆம் பக்க தொடர்ச்சி....

**மேம்படுத்தும் வகையில், இளைஞர்கள் பெரிதும் விரும்பும் விளையாட்டுக்களான கிரிக்கெட், கால்பந்து, கையுந்துப் பந்து போன்றவற்றிற்கான விளையாட்டு உபகரணங்கள், ரூபாய் 5 கோடி செலவில், மாநிலத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளுக்கும் வழங்கப்படும்.**

**148. மாநிலமெங்கும் விளையாட்டுக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் நோக்கத்துடன், திருவண்ணாமலை மற்றும் திருவாரூர் ஆகிய மாவட்டத் தலைநகரங்களில் புதிய நீச்சல் குளங்கள் ரூபாய் 132 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும். சென்னை பெரியமேட்டில் உள்ள நேரு உள் விளையாட்டரங்கத்தின் மேம்பாட்டுப் பணிகளுக்காக ரூபாய் 200 இலட்சமும், மதுரை மாவட்ட விளையாட்டரங்கத்தின் மேம்பாட்டுப் பணிகளுக்காக ரூபாய் 50 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. திருநெல்வேலி மற்றும் ஈரோடு மாவட்ட விளையாட்டு அரங்கங்களில் ரூபாய் 140 இலட்சம் மதிப்பீட்டில் புதிய விளையாட்டு விடுதிகள் கட்டப்படும்.**

## கலைத் துறை

**149.** திரைப்படத் துறைக்கு உதவும் வகையில் வெளிப்புறப் படப்பிடிப்புக்கான கட்டணத்தைக் குறைத்தும், தமிழ் மொழி ஆர்வத்திற்கு ஊக்கம் அளித்திடும் வகையில் தமிழில் பெயர் சூட்டப்படும் தமிழ்த் திரைப்படங்களுக்கு கேளிக்கை வரியிலிருந்து முழுமையான விலக்கு அளித்தும் இந்த அரசு அறிவித்துள்ளது. அத்துடன், திரையரங்கக் கட்டணங்களைக் குறைத்ததன் மூலம் மீண்டும் பொதுமக்கள் திரையரங்குகளுக்கு வந்து திரைப்படங்களைக் காணச் செய்து திரைப்படத் தொழிலுக்குப் புத்துயிரூட்டி, அந்தத் துறையில் பணிபுரியும் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களின் வாழ்விற்கு வளம் சேர்த்துள்ளது.

**150. தமிழ் மொழியில் பெயரிடப்படும் திரைப்படங்களுக்கு இந்த அரசால் அறிவிக்கப்பட்ட சலுகையின் பயன்கள், திரைப்படங்களின் தயாரிப்பாளர்களுக்கு அல்லது பழைய தமிழ்த் திரைப்படங்களின் தற்போதைய உரிமைதாரர்களுக்குக் கிடைத்திட இந்த அரசு ஆவன செய்யும்.** குறைந்த செலவில் தயாரிக்கப்படும் தரமான தமிழ்த் திரைப்படங்களுக்கான மானியங்களையும், திரைப்படக் கலைஞர்கள் மற்றும் சின்னத்திரைக் கலைஞர்களுக்கான விருதுகளையும் தொடர்ந்து வழங்கி, திரை மற்றும் கலையுலகை ஊக்குவிக்கும் பணிகள் நிறைவேற்றப்படும்.

151. தென்னிந்தியத் திரைப்படத் தொழிலாளர்கள் சம்மேளனத்தின் சார்பில், அந்தத் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்ட நிலம் வழங்கிட வேண்டும் என்று கேட்டுக்கொண்ட கோரிக்கையினை இந்த அரசு ஏற்று, அதற்கான நிலம் தேர்வு செய்யும் பொறுப்பை அவர்களிடமே ஒப்படைத்தது. நிலம் தேர்வு செய்யும் பணி தற்போது முடிவடைந்துள்ளதால், அதற்கான அரசு ஆணை விரைவில் வழங்கப்படும்.

## பத்திரிக்கையாளர் நலன்

**152.** பத்திரிக்கைத் துறையில் இருப்பவர்களின் ஓய்வூதியம், குடும்ப ஓய்வூதியம் ஆகியவற்றை உயர்த்தி வழங்கியதோடு, பணிக்காலத்திலேயே மறைந்திட நேரிடும் பத்திரிக்கையாளர்களின் குடும்பங்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தையும் அவர்தம் குடும்பங்கள் எளிதில் உதவி பெறும் வகையில் இந்த அரசு திருத்தி அமைத்துள்ளது. **இவர்களில் உரியவர்களுக்கு நல உதவிகளை மேலும் செம்மையாக அளித்திட, தனி நல நிதியம் ஒன்று உருவாக்கப்படும்.**

## இந்து சமய அறநிலையத் துறை

**153.** இந்த அரசு பதவியேற்றது முதல் இதுவரை **690** திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு, குடமுழுக்குகள் நடத்தப் பட்டுள்ளன. நமது மாநிலத்தில், சிற்பக் கலைகளையும் வரலாற்றுப் பெருமைகளையும் நினைவூட்டும் பழைமைவாய்ந்த பல கோயில்கள் சரியாகப் பராமரிக்கப்படாமல் சிதிலமடைந்து இருப்பதைக் கருத்தில் கொண்டு, இவற்றைப் பழைமை மாறாமல் புதுப்பித்திடும் வகையில், பன்னிரெண்டாவது நிதிக்குழுவின் பரிந்துரையின்

கீழ் பெறப்படும் நிதியுதவியுடன் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும். **காஞ்சிபுரம் தேவராஜ சுவாமி திருக்கோயில், பாளையங்கோட்டையில் உள்ள அழகிய மன்னார் இராஜகோபால சுவாமி திருக்கோயில், தரங்கம்பாடியில் உள்ள மாசிலாநாதர் மற்றும் வரதராஜபெருமாள் திருக்கோயில்கள், நாகப்பட்டினம் மாவட்டம் செம்பியன் மாதேவியிலுள்ள கைலாசநாதர் திருக்கோயில் மற்றும் தஞ்சையில் உள்ள இராஜகோபால சுவாமி திருக்கோயில் உள்ளிட்ட 48 பழம்பெரும் கோயில்களில் ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் இப்பணிகள் மேற்கொள்ளப்படும்.**

154. கிராமக் கோயில்களில் உள்ள பூசாரிகளின் நலனுக்காக ஒரு தனி நலவாரியம் இந்த அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த நலவாரியத்தின் மூலமாக அவர்களுக்கான நலத்திட்ட உதவிகள் வழங்கப்படும்.

## அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஓய்வூதியர்கள் நலன்

155. அரசின் நலத் திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்க்கும் அரும்பணியில் அரசு ஊழியர்களின் பொறுப்பான கடமையை நன்கு உணர்ந்துள்ள இந்த அரசு, கடந்த ஆட்சியில் பறிக்கப்பட்ட உரிமைகளை அவர்களுக்கு மீட்டெடுத்துத் தந்துள்ளது. இந்த அரசு பதவியேற்ற பிறகு அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஓய்வூதியர்கள் நலன் காக்க எடுத்துள்ள பல்வேறு நடவடிக்கைகளின் விவரம் பின்வருமாறு:–

- ஒப்பந்த அடிப்படையில் தொகுப்பூதியத்தின் கீழ் பணிபுரிந்துவந்த 45,987 ஆசிரியர்கள், ஆண்டொன்றுக்கு ரூபாய் 400 கோடி கூடுதல் செலவில் காலமுறை ஊதியத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளனர்.
- காலியாக இருந்த அரசுப் பணியிடங்களைக் காலமுறை ஊதியத்தில் நிரப்பிட ஆணையிடப்பட்டுள்ளது. வேலை நியமனத் தடையாணையால் பாதிக்கப்பட்டோர் பயனடையும் வகையில், அரசுப் பணிக்கு விண்ணப்பிப்பதற்கான அதிகபட்ச வயது வரம்பை மேலும் 5 ஆண்டுகள் வரை நீட்டிப்பதற்கான ஆணையை இந்த அரசு வழங்கியுள்ளது.
- அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் சாலைப் பணியாளர்கள் ஆகியோரின் வேலை நிறுத்தப் போராட்டத்தின் போதும், பணிநீக்கக் காலத்தின்போதும், உயிர் நீத்தோரின் வாரிசுகளுக்குக் கருணை அடிப்படையிலான பணி நியமனம் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.
- 2000–2001 ஆம் ஆண்டு வரை அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டு வந்த மிகை ஊதியம் (Bonus) மற்றும் சிறப்பு மிகை ஊதியம் (Special Ad-hoc Bonus) மற்றும் ஓய்வூதியர்களுக்கு வழங்கப்பட்ட பொங்கல் பரிசு ஆகியன ரூபாய் 250 கோடி செலவில் மீண்டும் அளிக்கப் பட்டுள்ளது.
- அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களின் வேலை நிறுத்தக் காலம், ஊதியத்தோடு கூடிய பணிக் காலமாகக் கருதப்பட ஆணையிடப்பட்டுள்ளது.
- அரசு ஊழியர்கள் 33 ஆண்டுகள் பணிபுரிந்தால் மட்டுமே முழு ஓய்வூதியம் பெற இயலும் என்பதை மாற்றி, 30 ஆண்டுகள் பணியாற்றினாலே முழு ஓய்வூதியம் வழங்கப்பட வகை செய்யப்பட்டுள்ளது.
- ஓய்வுபெறுவதற்கு முந்தைய 10 மாதங்களின் சராசரி அடிப்படை ஊதியத்தில் 50 சதவீதமே ஓய்வூதியமாகக் கணக்கிடப்பட்ட முறையை மாற்றி, கடைசியாகப் பெற்ற ஊதியத்தில் 50 சதவீதம் அல்லது கடைசி 10 மாதங்களின் சராசரி ஊதியத்தில் 50 சதவீதம் ஆகியவற்றில், எது அதிகமோ அதன் அடிப்படையில் ஓய்வூதியம் கணக்கிடப்பட ஆணையிடப்பட்டுள்ளது.
- ஐந்தாவது மத்திய ஊதியக் குழுவின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டதன்

பயனாக வழங்கப்பட வேண்டிய ரூபாய் 872 கோடி நிலுவைத் தொகை, 2006–2007ஆம் ஆண்டிலிருந்து 3 சம ஆண்டுத் தவணைகளில் ரொக்கமாக வழங்கப்பட ஆணையிடப்பட்டுள்ளது.

இவை தவிர, அரசு அலுவலர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களிடமிருந்து வரப்பெற்றுள்ள கோரிக்கைகளைப் பரிசீலித்து, அவர்களை மேலும் ஊக்குவிக்கும் வகையில், பின்வரும் சலுகைகள் வழங்கப்படும்.

- **அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு வழங்கப்படும் அகவிலைப்படியை 29 சதவீதத்திலிருந்து 35 சதவீதமாக மத்திய அரசு உயர்த்தி வழங்க ஆணையிட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து, மாநில அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் ஆகியோருக்கு அகவிலைப்படியை 6 சதவீதம் உயர்த்தி 1.1.2007 முதல் 35 சதவீதமாக இந்த அரசு வழங்கும். இந்த அகவிலைப்படி உயர்வு நிலுவைத் தொகையும் ரொக்கமாக வழங்கப்படும். இதனால் நடப்பாண்டில், ரூபாய் 150 கோடியும், வரும் நிதி ஆண்டில் ரூபாய் 600 கோடியும் அரசுக்கு கூடுதல் செலவு ஏற்படும்.**

- **அரசு அலுவலர்களின் ஓய்வூதியம் கணக்கிடப் படுவதற்கான முறை மற்றும் முழு ஓய்வூதியம் பெறுவதற்கான பணிக்கால வரம்பு ஆகியவற்றில் இந்த அரசு மீண்டும் அளித்த சலுகைகள், 1.4.2003 முதல் 30.7.2006 வரை ஓய்வு பெற்றவர்களுக்கும் அளிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்று, இக்காலத்தில் ஓய்வு பெற்றவர்களுக்கும், முழு ஓய்வூதியம் பெறுவதற்கான பணிக்கால வரம்பு 30 ஆண்டுகள் எனவும், அடிப்படை ஊதியத்தில் 50 விழுக்காடு அல்லது ஓய்வு பெறுவதற்கு முன்புள்ள 10 மாத சராசரி ஊதியத்தின் 50 விழுக்காடு ஆகியவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையிலும் ஓய்வூதியம் கணக்கிடப்பட்டு வழங்கப்படும்.**

- **தைப்பொங்கல் திருநாள் உள்ளிட்ட, அரசால் குறிப்பிடப்பட்டுள்ள பண்டிகைகளையொட்டி, அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் பெறும் பண்டிகை முன்பணம், ரூபாய் 1,000 என்ற அளவிலேயே உள்ளது. இதை உயர்த்தி அளிக்க வேண்டும் என்ற கோரிக்கைகளை ஏற்று, வரும் ஆண்டிலிருந்து பண்டிகை முன்பணம் ரூபாய் 1,000 லிருந்து ரூபாய் 2,000மாக இருமடங்கு உயர்த்தி வழங்கப்படும்.**

- **அரசு அலுவலர்கள் பணி நிமித்தமாகவும், விடுமுறைக்கால பயணச் சலுகைகளை பயன்படுத்தியும் பயணம் செய்வதற்கான தகுதி வரம்புகள் 1.12.2001 முதல் குறைக்கப்பட்டன. இதனை ரத்து செய்து, அனைத்து பயணத் தகுதி வரம்புகளையும் 1.12.2001க்கு முன்பிருந்த நிலைக்கே மீண்டும் கொண்டுவர இந்த அரசு முடிவெடுத்துள்ளது.**

## மின்னணு ஒப்பந்தப்புள்ளி முறை அறிமுகம்

156. அரசு மற்றும் அரசு நிறுவனங்களின் கட்டுமானப் பணிகளை நிறைவேற்றுவதிலும், அரசுக்குத் தேவையான பொருள்கள் மற்றும் நற்பணிகளைக் கொள்முதல் செய்வதிலும், வெளிப்படையான மற்றும் பாரபட்சமற்ற நடைமுறை கடைபிடிக்கப்பட வகைசெய்யும் தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தை, தி.மு.க அரசுதான் 1998ஆம் ஆண்டில் இயற்றியது. ஒப்பந்தப்புள்ளி நடைமுறைகளை மேலும் ஒளிவுமறைவற்றதாக்கும் நோக்குடன், இணையதளம் மூலமாக ஒப்பந்தக்காரர்கள் ஒப்பந்தப்புள்ளிப் படிவங்களை இடையூறின்றிப் பெற்று, ஒப்பந்தப்புள்ளிகளை அளிப்பதற்கு வகைசெய்யும், கணினிமயமாக்கப்பட்ட மின்னணு ஒப்பந்தப்புள்ளி முறை (e-tendering) அரசால் அறிமுகப்படுத்தப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அண்மையில் அறிவித்துள்ளார்கள். **இரண்டு கட்டங்களாகச் செயல்படுத்தப்படவுள்ள இம்முறையின் மூலமாக, 1.7.2007 முதல் திறந்த ஒப்பந்தப்புள்ளி முறையில் ரூபாய் 10 இலட்சத்திற்கு மேற்பட்ட**

**ஒப்பந்தப்புள்ளிகளுக்கான படிவங்களை இணையதளத்திலிருந்தும் பெறவும், 1.10.2007 முதல் ஒப்பந்தப்புள்ளிகளைச் சம்பந்தப்பட்ட துறைகளின் இணையதளங்களின் மூலமாகவும் அளிப்பதற்கும் வழிவகை செய்யப்படும். திறந்த ஒப்பந்த முறையில், ரூபாய் 5 இலட்சத்திற்கு மேற்பட்ட ரூபாய் 10 இலட்சம் வரையிலான ஒப்பந்தப்புள்ளிகளைப் பொறுத்தவரையில், தற்போதுள்ள நடைமுறையே தொடரும்.**

## உயர்நிலைக் கண்காணிப்புக் குழு

157. இந்த அரசு பதவியேற்ற நாள் முதலாக, தேர்தல் வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்றும் வகையில் தமிழக மக்களின் நலனையே குறிக்கோளாகக் கொண்டு, நலத்திட்டங்கள் பலவற்றைச் செம்மையாகச் செயல்படுத்தி வருகிறது. **இத்திட்டங்களின் நன்மைகள் பயனாளிகள் அனைவருக்கும் கிடைப்பதை உறுதி செய்யவும், இத்திட்டங்களின் செயலாக்கத்தைத் தொடர்ந்து கண்காணிக்கவும், இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் திட்டத்திற்கு அமைக்கப்பட்ட குழுவைப் போன்றே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில், சட்டமன்றக் கட்சிகளின் பிரதிநிதிகளைக் கொண்ட மாநில அளவிலான உயர்நிலைக் கண்காணிப்புக் குழு (High Level Monitoring Committee) ஒன்றினை இந்த அரசு அமைக்கும். பொது விநியோகத் திட்டம், இலவச எரிவாயு அடுப்பு வழங்கும் திட்டம், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டம், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம், படித்து வேலையற்ற இளைஞர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டம், +1 படிக்கும் மாணவ மாணவியருக்கு இலவச சைக்கிள்கள் வழங்கும் திட்டம் ஆகிய இந்த அரசின் முக்கிய நலத்திட்டங்களின் செயலாக்கத்தினை ஆய்வு செய்து கண்காணிப்பதோடு, இத்திட்டங்களை மேலும் செம்மைப்படுத்தத் தேவையான அறிவுரைகளையும் இந்தக் குழு நல்கும்.**

## திட்டப் பணிகள்

158. வரும் 2007–2008ஆம் நிதியாண்டு பதினோராவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் ஆண்டாகும். 5.2.2007 அன்று மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் மத்திய திட்டக்குழுத் துணைத் தலைவர் ஆகியோரிடையே நடந்த ஆலோசனைக் கூட்டத்தில், 2007–2008ஆம் ஆண்டில் ரூபாய் 14,000 கோடி என்ற உயரளவிலான ஆண்டுத் திட்ட ஒதுக்கீட்டிற்கு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

159. பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட ஒதுக்கீடான ரூபாய் 40,000 கோடியை இரு மடங்காக உயர்த்தி, ரூபாய் 80,000 கோடி அளவில் பதினோராவது ஐந்தாண்டுத் திட்டம் செயல்படுத்தப்படும். இந்தத் திட்டக் காலத்தில், மாநிலப் பொருளாதாரத்தைச் சராசரியாக 9 சதவிகித அளவிற்கு வளர்ச்சி அடையச் செய்வதைக் குறிக்கோளாகக் கொண்டு, இந்த அரசு திட்டங்களை வகுத்துச் செயல்படுத்தும்.


## வணிக வரிகள்

160. 1.1.2007 முதல் தமிழகத்தில் மதிப்புக் கூட்டுவரி அறிமுகப்படுத்தப்படும் என கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப் பட்டவாறு, இதற்கான சட்டம் இயற்றப்பட்டு, நமது மாநிலத்தில் இந்த மதிப்புக் கூட்டுவரி முறை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இந்த மதிப்புக் கூட்டுவரி முறையும் இந்த வரிமுறையில் அரசு அறிவித்த சலுகைகளும் வணிகர்கள், தொழில்துறையினர் மற்றும் பொதுமக்கள் அனைவரின் வரவேற்பையும் பெற்றுள்ளன.

161. பொது விற்பனை வரி முறையில் இருந்த பலவகை உயர் வரிவிகிதங்களுக்குப் பதிலாக, மதிப்புக்கூட்டுவரி முறையில் மூன்று வரி விகிதங்களே நிர்ணயம் செய்யப்பட்டதுடன், கூடுதல் விற்பனை வரி, மறு விற்பனை வரி மற்றும் உபரி வரி ஆகியன அறவே நீக்கப்பட்டுள்ளன. மேலும், இந்த வரிவிதிப்பு முறையில், உற்பத்தியாளர்கள் மற்றும் வணிகர்கள் உள்ளீட்டுப் பொருள்களை கொள்முதல்

செய்யும்போது செலுத்திய வரியைப் பொருள்களை விற்பனை செய்யும்போது செலுத்தக்கூடிய விற்பனை வரியிலிருந்து கழித்துக்கொள்ள இயலும். மாநிலத்திற்குள்ளேயே கொள்முதலும் விற்பனையும் செய்யும் சிறு வணிகர்களின் மொத்த விற்பனைத் தொகை ஆண்டொன்றுக்கு ரூ.10 இலட்சத்திற்கு மிகாமல் இருந்தால், அவர்களுக்குப் பதிவுச் சான்று பெறுவதிலிருந்தும், வரி செலுத்துவதிலிருந்தும், விலக்கு அளிக்கப்பட்டுள்ளதுடன், இவ்வணிகர்களின் ஆண்டு விற்பனைத்தொகை ரூ.10 இலட்சத்திற்கு மேலும், ரூ.50 இலட்சத்திற்கு மிகாமலும் இருப்பின், அவர்கள் தங்கள் விருப்பப்படி இணக்கவரி முறையை ஏற்று அரை விழுக்காடு வரி செலுத்தலாம். இத்துடன், அனைத்து உற்பத்தியாளர்கள் மற்றும் வணிகர்கள் சுயவரிவிதிப்பு செய்துகொள்ளும் வசதியும் அளிக்கப்பட்டுள்ளது. மேலும், பதிவுச் சான்றையும் ஆண்டுதோறும் புதுப்பிக்கத் தேவையில்லை. தமிழ்நாடு பொது விற்பனைவரிச் சட்டத்தில், சமையல் எண்ணெய், பயறுவகைகள், வெல்லம் உள்ளிட்ட பொருள்களுக்கு வழங்கப்பட்ட வரிவிலக்குச் சலுகைகள். அனைத்தும் மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்திலும் உண்டு.

**162. 24.2.2007** அன்று அரசு சார்பில் நடத்தப்பட்ட வணிகர்கள் மற்றும் உற்பத்தியாளர்களின் பிரதிநிதிகளுடனான கலந்தாய்வுக் கூட்டத்தில் விடுக்கப்பட்ட கோரிக்கைகளின் அடிப்படையில், நுகர்வோர், வணிகர்கள் மற்றும் உற்பத்தியாளர்கள் அனைவரின் நலனையும் கருத்தில் கொண்டு பின்வரும் சலுகைகள் அறிவிக்கப்படுகின்றன.




**குடும்பத் தலைவிகள், சாதாரண மக்கள் மற்றும் விவசாயிகள் அன்றாடம் பயன்படுத்தும் பொருள்களுக்கு வரிவிதிப்பு கூடாது என்ற இவ்வரசின் கொள்கைக்கிணங்க பின்வரும் பொருள்கள் மீதான மதிப்புக்கூட்டு வரி ரத்து செய்யப்படும்.**

- மண்ணெண்ணெய் பிரஷ்ஷர் ஸ்டவ்
- 'உள்ளூர் வரி' செலுத்தப்பட்ட இரசாயன உரங்களைக் கொண்டு தயாரிக்கப்படும் கலப்பு உரக்கலவைகள்
- விதைப்பதற்காக மட்டும் உபயோகப்படுத்தப் படும் அனைத்து விதைகள்
- முத்திரையிடப்பட்ட (sealed) கேன்கள் மற்றும் பாக்கெட்டுகளில் விற்கப்படும் சுத்திகரிக்கப் பட்ட குடிநீர்
- கொப்பரை நீங்கலாக மாநிலத்தின் உள்ளும் வெளியிலும் விற்கப்படும் தேங்காய்
- பட்டாணி மாவு
- வறுத்த பட்டாணி
- தேங்காய் சிரட்டைத் தூள்
- பஞ்சாமிர்தம், நாமக்கட்டி, விபூதி மற்றும் பிரசாதம்
- குறிப்பிட்ட 38 வகை நாட்டுமருந்துகள்
- கடல் சிப்பி மற்றும் கடல் பாசி
- செயற்கை வைரங்கள்
- தஞ்சாவூர் தட்டு
- துணிப் பை
- வரைப்பட மற்றும் பகுப்பாய்வு உபகரணங்கள்

- பயிற்சி நோட்டுப் புத்தகம் மற்றும் வரைப்படப் புத்தகம்.

- கணக்குப் பயிற்சி உபகரணங்கள்

- மரத்திலான பென்சில், பென்சில்கள், அழிப்பான்கள், எபோனைட் பேனாக்கள், எபோனைட் பந்து முனைப் பேனாக்கள் (Ball point pens), மை வில்லைகள் உள்ளிட்ட எழுதும் மை

- ஆலையில் தயாரிக்கப்படாத, கைத்தறி மற்றும் விசைத்தறிகள் மூலம் தயாரிக்கப்படும் தலையணை உறைகள், படுக்கை விரிப்புகள் மற்றும் துண்டுகள்

- அனைத்துவகை கற்பூரம்

- முந்திரித் தோல்

- கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில், அனைத்து சமையல் எண்ணெய்களுக்கும் வழங்கப்பட்ட சலுகைகள் அனைத்தும் சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய்களுக்கும் விரிவாக்கப்படும்.

- சமையல் எண்ணெய், சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய், புண்ணாக்கு மற்றும் எண்ணெய் நீக்கப்பட்ட புண்ணாக்கு உள்ளிட்ட வகைகளுக்கு 2000ஆம் ஆண்டு நிர்ணயிக்கப்பட்ட விற்பனை வரி விலக்குக்கான ஆண்டு விற்பனைத் தொகை உச்சவரம்பு, ரூ.300 கோடியிலிருந்து ரூ.500 கோடியாக உயர்த்தப்படும்.

- கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில், பருப்பு மற்றும் பயறு வகைகளுக்கு வழங்கப்பட்ட சலுகைகள், மொச்சை, காராமணி, தட்டைப் பயறு, கொள்ளு மற்றும் அவரை ஆகியவற்றிற்கும் விரிவாக்கப்படும்.

- பருப்பு மற்றும் பயறு வகைகள் ஒவ்வொன்றுக்கும் 2000ஆம் ஆண்டு நிர்ணயிக்கப்பட்ட ஆண்டு விற்பனைத் தொகை உச்சவரம்பு, ரூ.300 கோடியிலிருந்து ரூ.500 கோடியாக உயர்த்தப்படும்.

- கோதுமை மீதான 4 சதவீத வரி 2 சதவீதமாகக் குறைக்கப்படும்.

- நட்சத்திர தகுதி பெறாத உணவகங்கள் மற்றும் இனிப்பகங்களால், வரி செலுத்தி கொள்முதல் செய்து விற்பனை செய்யப்படும் சுத்திகரிக்கப் பட்ட குடிநீருக்கான (Bottled Mineral Water) வரிவீதம், 12.5 சதவீதத்திலிருந்து 2 சதவீதமாகக் குறைக்கப்படும்.

சாதாரண மக்களால் உபயோகப்படுத்தப்படும் பின்வரும் பொருட்களுக்கான வரிவீதம் 12.5 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாகக் குறைக்கப்படும்: –

- உடனடி காஃபி நீங்கலாக சிக்கரி மற்றும் வணிகச் சின்னமிடாத காஃபி தூள்

- வணிகச் சின்னமிட்ட மசாலா பவுடர்

- மரவள்ளிக் கிழங்கு சிப்ஸ், மாவு, மரவள்ளிக் கிழங்கு திப்பி

- பஜ்ஜி மாவு

- சத்து மாவு

- வணிகச் சின்னமிடாத நெய்

- பேரீச்சம்பழப் பாகு (Syrup)

- Interesterified தாவர எண்ணெய் (வனஸ்பதி)

- வணிகச் சின்னமிடாத பன், ரஸ்க், பிஸ்கட், கேக் போன்ற பேக்கரி பொருட்கள்

- நோய் அறிதற்கான சோதனைக் கருவிகள் மற்றும் சோதனைக்கான வேதிப்பொருள்கள் (reagents). துணைப் பொருள்கள், இரத்தம்

சேமிக்கும் பைகள் மற்றும் ஒருமுறை மட்டுமே உபயோகப்படுத்தற்குரிய சிகிச்சைப் பொருள்கள் (disposables)

- மாவு அரவை இயந்திரங்கள் (wet grinders)
- RCC பைப்புகள் (சிமெண்ட் கொள்முதல் மீது செலுத்திய வரிக்கு உள்ளீட்டு வரி வரவு வசதியின்றி)
- RCC மூலம் தயாரிக்கப்படும் கிராதிகள் கதவு மற்றும் ஜன்னல் பிரேம்கள் (சிமெண்ட் கொள்முதல் மீது செலுத்திய வரிக்கு உள்ளீட்டு வரி வரவு வசதியின்றி)
- வணிகச் சின்னமிடாத ஸ்டீல் பர்னிச்சர் (un-branded steel furniture)
- கதவுகள், ஜன்னல்கள், சட்டங்கள், புரோபைல்கள், மோட்டார் வாகன, தொழில் மற்றும் கழிவுநீக்க உபகரணங்கள் நீங்கலான பிளாஸ்டிக் பொருட்கள்
- குத்துவிளக்கு, அகல்விளக்கு, பாவை விளக்கு, யானை விளக்கு, கார்த்திகை விளக்கு, கோவில் மணி, கற்பூரத் தட்டு, தூபக்கால்
- வார்ப்படச் சிலைகள்
- பதிவு செய்யப்பட்ட மற்றும் பதிவு செய்யப்படாத ஒலி நாடாக்கள்
- கணக்குப் பேரேடுகள் மற்றும் நாட்குறிப்புகள்
- பள்ளிக்கூடப் பைகள் மற்றும் பயணத்திற்குப் பயன்படும் வணிகச் சின்னமிடாத பைகள் (travel bags)
- கேடயங்கள்
- முள்வேலி கம்பி , கம்பி வடம் மற்றும் கம்பி இணைப்புகள்
- பருத்தி நூலினாலான தரைத் துடைப்பான்கள்
- உபயோகப்படுத்தப்பட்ட சீருந்துகள் / மோட்டார் வாகனங்கள் (உள்ளீட்டு வரிவரவு வசதியின்றிக் கூட்டிய மதிப்பிற்கு மட்டும்)
- நெசவு இயந்திரங்கள் மற்றும் உதிரி பாகங்கள்
- ஆணிகள், புஷ்கள், வாஷர்கள், ரிவிட் போன்ற இணைப்பான்கள்
- எலக்ட்ரோப்ளக்ஸ் (Electroflux)

**தொழிற்சாலைகளுக்கான இடு பொருட்களாகப் பயன்படுத்தப்படும் பின்வரும் பொருட்கள் 4 சதவிகித வரிவீதத்தில் பட்டியலிடப்படுகின்றன.**

- தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படும் உயர்ரக மண்ணெண்ணெய் (superior kero-sene oil) (இது உள்ளீட்டு வரி வரவுக்கு உரியதல்ல)
- ஏற்கெனவே 20 சதவீதத்தில் கொள்முதல் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ள, குறிப்பிட்ட இரசாயனத் தொழிற்சாலைகளில் மூலப் பொருளாகப் பயன்படுத்தப் படுவதற்காகக் கொள்முதல் செய்யப்படும் கரும்புச் சாற்றின் கழிவு (molasses). இது உள்ளீட்டு வரி வரவிற்கு உரியதல்ல.
- தொழிற்சாலைகளுக்கான வாயுக்கள் (Industrial gases), நெசவு இயந்திர உதிரி பாகங்கள் போன்ற தொழிற்சாலை இடுபொருள்களை உற்பத்தியாளர்கள் அல்லது வணிகர்கள் தொழிற்சாலை மூலப் பொருட்களாக விற்பனை செய்யும்போது 4 சதவீத வரி விதிப்புக்குட்படுத்தப்பட்டு பட்டியலிடப்படும்.
- 2006ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டம், முதலாம் அட்டவணையில் உள்ள

பகுதி B-யின் பதிவு 67, குறிப்பிட்ட பொருள்களை, தொழில் உள்ளீட்டுப் பொருட்களாக அறிவிக்க வகை செய்கிறது. இதன் கீழ், ஏற்கெனவே 27 பொருட்கள் தொழில் உள்ளீட்டுப் பொருட்களாக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளன. ஒவ்வொரு பொருளுக்கும் தனித்தனியாக காலவரையறையின்றி அறிவிக்கைகள் வெளியிடப்படுவதற்குப் பதிலாக, தமிழ்நாடு மதிப்புக்கூட்டுவரிச் சட்டம், 2006 முதலாம் அட்டவணையில் பகுதி– B யில் இனம் 67 ஐ பின்வருமாறு திருத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

"தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச்சட்டத்தில், இரண்டாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் தவிர்த்து, மாநிலத்தில் ஏனைய பொருட்களைத் தயாரிக்கப் பயன்படும் பொருட்கள் அல்லது தயாரிப்புத் தொடர்பாக உபயோகப்படுத்தப் படுகின்ற நுகர் பொருட்கள், சிப்பமிடத் தேவையான பொருட்கள் மற்றும் லேபிள்கள் உட்பட, இயந்திரத் தளவாடங்கள்; எத்தில் ஆல்கஹால்; அப்சல்யூட் ஆல்கஹால்; மீத்தைல் ஆல்கஹால்; சுத்திகரிக்கப்பட்ட சாராவி; நியூட்ரல் சாராவி மற்றும் சிமெண்ட் நீங்கலாக, முதலாம் அட்டவணையில் பகுதி "C"இல் குறிப்பிடப்பட்டுள்ள எந்தப் பொருளும்".

- **ஆண்டு விற்பனைத் தொகை ரூ. 50 இலட்சம் வரையுள்ள வணிகர்களில், அரை விழுக்காடு இணக்கவரி செலுத்துவோர், தற்போது வரிவிலக்களிக்கப்பட்ட பொருட்களின் விற்பனைத் தொகை மீதும் வரி செலுத்த வேண்டும் என்ற நிலை உள்ளது. வரி விதிப்பிற்குள்ளாகும் பொருட்களின் விற்பனைத் தொகை மீது மட்டுமே வணிகர்கள் வரி செலுத்த வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தில் இதற்குத் தேவையான திருத்தம் செய்யப்படும்.**

- **வணிகர்களின் கோரிக்கைகளை ஏற்று, 12.5 சதவிகித வரிவிதிப்பிற்கு உள்ளாகும் பொருட்களை தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரிச் சட்டத்தின் முதலாம் அட்டவணையில், பிரிவு 'C' இல் பட்டியலிடப்படும்.**

**இதுவரை அறிவித்த அனைத்து வரிச்சலுகைகளும் 1.1.2007 முதல் நடைமுறைக்கு வரும்.**

## பதிவுத் துறை

163. பதிவுத் துறையில், சொத்துப் பரிமாற்றம் பதிவு செய்யப்பட்டும், சரியான சந்தை மதிப்பை நிர்ணயம் செய்து செலுத்தப்பட வேண்டிய முத்திரைத் தீர்வைத் தொகை முடிவு செய்யப்படாமல், சுமார் 27,000 ஆவணங்கள் நீண்ட காலமாக நிலுவையில் உள்ளன. இந்த ஆவணங்களின் கீழ், சுமார் 400 கோடி ரூபாய் முத்திரைத் தீர்வைத் தொகை அரசால் பெறப்பட இயலாமல் முடங்கியுள்ளது. **இவ்வாறு முடங்கியுள்ள முத்திரைத் தீர்வை வருவாயை அரசு கால தாமதமின்றிப் பெறவும், அத்துடன் ஆவணதாரர்கள் முத்திரைத் தீர்வைச் சலுகையைப் பெற்று அத்தீர்வையைச் செலுத்தி ஆவணங்களைத் திரும்பப் பெற்றுக்கொள்ளவும் வழி செய்வதற்கென்று ஒரு புதிய திட்டம் விரைவில் அறிமுகப்படுத்தப்படும்.**

**164. நமது மாநிலத்தில், ஏறத்தாழ 15,000 ஆவண எழுத்தர்கள் மற்றும் 15,000 உதவியாளர்கள், பத்திரப் பதிவு அலுவலகங்களைச் சார்ந்து தொழில் புரிந்து வருகின்றனர். இவர்களுடைய நலனைக் கருத்தில் கொண்டு, 'ஆவண எழுத்தர்கள் நலநிதியம்' ஒன்று உருவாக்கப்படும்.**

## ஒட்டுமொத்த நிதிநிலை

165. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2007–2008ஆம் ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்டத்தின் நிதிநிலை பற்றிய கணிப்புக்களைத் தற்போது நான் அளிக்கின்றேன். 2007–2008ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசின் மொத்த வருவாய் வரவுகள் ரூபாய்

44,532.28 கோடி எனவும், ஏற்படக்கூடிய வருவாய்ச் செலவினங்கள் ரூபாய் 44,633.66 கோடி எனவும் மதிப்பிடப்பட்டுள்ளன. இதனால் ஏற்படும் வருவாய்ப் பற்றாக்குறை ரூபாய் 101.38 கோடியாக இருக்கும் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

166. 2007–2008ஆம் ஆண்டில் அரசின் மூலதனச் செலவு (கடன்கள் மற்றும் முன் பணங்களின் நிகரம் உட்பட) ரூபாய் 7,699.18 கோடியாக இருக்குமெனக் கணக்கிடப் பட்டுள்ளது. வருவாய் பற்றாக்குறையோடு சேர்த்து, இதனால் ரூபாய் 7,800.56 கோடி அளவிற்கு நிதிப் பற்றாக்குறை ஏற்படும். இது மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் 2.84 சதவீதமே ஆகும் என்பதால், இது 2003ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலைப் பொறுப்புடைமைச் சட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட நிதிநிலைப் பற்றாக்குறை குறியீடான, மாநில உற்பத்தி மதிப்பின் 3 சதவீதத்திற்குள்ளாகவே உள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்தில் கொள்ள வேண்டுகிறேன். பொதுக்கணக்கின் நிகரத்தோடு எடுத்துக் கொண்டால், ஒட்டுமொத்தப் பற்றாக்குறை ரூபாய் 3.75 கோடியாக இருக்கும். செலவினங்களில் சிக்கனத்தைக் கடைப்பிடித்தும், மேம்பட்ட வரி வசூல் நிருவாகம் மூலமாகவும் இந்தப் பற்றாக்குறை ஈடுகட்டப்படும்.

167. வரவு–செலவுத் திட்ட உரையின் இணைப்பில் அளிக்கப்பட்டுள்ள இடைப்பட்டகால நிதி நிலவரத் திட்டத்தில் (Medium Term Fiscal Plan - MTFP), மாநிலத்தின் எதிர்கால நிதிநிலைச் செயல்திட்டம் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது. இதனை வரவு–செலவுத் திட்டத்தின் ஒரு பகுதியாகப் படிக்கப்பட்டதாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். இந்த இடைப்பட்டகால நிதி நிலவாத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிதிநிலை இலக்குகளை இவ்வரசு செம்மையாகப் பின்பற்றும்.

168. தேர்தல் வாக்குறுதிகளாயினும், இந்த அவையில் நிறைவேற்றிடும் சட்டங்களாயினும், பல இடையூறுகளுக்கிடையிலேயும் நிறைவேற்றி முடித்திட முனைந்திடும் திட்டங்களாயினும் – "நம்மால் முடியுமா?" என்ற நம்பிக்கையைக் குலைக்கும் கேள்விக்குறி எழுமேயானால்; எவ்வளவுதான் வலிமை உடையவராயிருந்தாலும், 'அவர் மேற்கொள்ளும் செயலில் உறுதியில்லா தவராக இருந்தால் அவரை உலகம் மதிக்காது'

"எனைத் திட்ப மெய்தியக் கண்ணும் வினைத்திட்பம்
வேண்டாரை வேண்டா துலகு"

எனும் குறள் வழங்கும் அறிவுரையை எச்சரிக்கையாக எடுத்துக் கொண்டு, இந்த அரசு ஆற்றியுள்ள கடமைகளையும் ஆற்ற இருக்கின்ற அருஞ்செயல்களையும் இந்த நிதிநிலை அறிக்கை மிகவும் பொறுப்புடன் பட்டியலிட்டுள்ளது. இத்தனையும் தமிழ் மாநிலத்திலுள்ள ஒரு சாதாரண, சாமானிய, நடுத்தரக் குடும்பத்து மனிதரை – அவர் விவசாயியாகவோ, நெசவாளியாகவோ, தொழிலாளியாகவோ, வணிகராகவோ, அரசு அலுவலராகவோ எந்த வகையிலேனும் சமுதாயத்தில் ஓர் அங்கமாக இருப்பவர் என்ற முறையில், அவரும், அவரைச் சார்ந்தோர் அனைவரும் வாழ்வில் வளம் பெற்றுத் திகழ்ந்திட ஏற்ற வழிமுறைகளைக் காண்பதற்காகவே இந்த அரசு எந்நாளும் எந்தச் சூழ்நிலையிலும் கடமையாற்றும் என்ற உறுதியை வழங்கி, – அந்த அறவழிக் கடமையாற்றிட ஓர் கருவியாக அமைந்துள்ள இந்த நிதி நிலை அறிக்கையைத் தயாரித்திடத் துணை நின்ற நிதித் துறைச் செயலாளர் திரு. கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., அவர்களுக்கும் அரசின் நிதித் துறை உள்ளிட்ட அனைத்துத் துறைகளின் அலுவலர்களுக்கும் இதயமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, 2007–2008ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட அறிக்கையை தங்கள் முன்னும், என்னருந்தமிழ் மக்கள் முன்னரும் பணிவன்புடன் வைக்கின்றேன்.

**வணக்கம்**

**க. அன்பழகன்,**
நிதியமைச்சர்.

## இணைப்பு

# இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம்

தமிழ்நாடு அரசு 2003ஆம் ஆண்டு நிதிநிலைப் பொறுப்புடைமை சட்டத்தை இயற்றியுள்ளது. இச்சட்டம் பன்னிரண்டாவது நிதிக்குழுவினால் வரையறுக்கப்பட்ட நிபந்தனைகளுக்கேற்ப பின்னர் திருத்தப்பட்டுள்ளது. இந்தச் சட்டத்தின் 3(1) பிரிவின்படி, மாநில அரசு வரவு செலவுத் திட்ட அறிக்கையுடன் இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம் குறித்த அறிக்கை ஒன்றை சட்டப் பேரவையில் வைக்க வேண்டும். இச்சட்டத்தின் 3(2) பிரிவின்படி, மேற்கோள்களை விளக்கி, தொடர் ஆண்டுகளுக்கு ஏற்ற இலக்குகளாக, வருவாய் பற்றாக்குறை, நிதிநிலை பற்றாக்குறை ஆகியவை குறித்து வரையறுக்கப்பட்ட நிதிநிலைக் குறியீடுகளுடன் இந்த இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம் வகுக்கப்பட வேண்டும். இச்சட்டத்தின்படி, நடப்பு நிதிநிலைப் போக்குகளையும் அரசு மேற்கொண்டுள்ள கொள்கை முடிவுகளையும் கருத்தில் கொண்டு, 2007-2010 ஆம் ஆண்டுகளுக்குரிய நிதிநிலை பற்றிய கணிப்புகளை உள்ளடக்கிய இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம் தயாரிக்கப்பட்டு இந்தப் பேரவை முன் வைக்கப்படுகிறது. இத்துடன் இணைப்பாகக் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை, 2007-2010 ஆண்டுக் காலத்திற்கான இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டத்தைக் காட்டுகிறது.

## நோக்கங்கள்

2. 2007–2012ஆம் ஆண்டு காலத்திலான பதினொன்றாவது ஐந்தாண்டுத் திட்டம், 9 சதவீத சராசரி ஆண்டுப் பொருளாதார வளர்ச்சியை இலக்காகக் கொண்டுள்ளது. இந்த திட்ட காலத்தின்போது, வேளாண்மைத்துறை 4 சதவீத அளவில் வளரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

3. தமிழ்நாட்டின் 60 சதவிகித மக்கள்தொகை வேளாண்மை மற்றும் அது தொடர்பான தொழில் நடவடிக்கைகளையே சார்ந்துள்ளது. எனவே, விவசாயிகளின் பெரும் கடன்பளுவை நீக்கி, வேளாண் நடவடிக்கைகளை மீண்டும் துவங்குவதற்கு, கூட்டுறவுத் துறையில் விவசாயிகள் பெற்ற பயிர்க் கடன்களை தள்ளுபடி செய்து இந்த அரசு ஆணையிட்டது. இதனையொட்டி அரசுக்கு ஏற்பட்டுள்ள நிதிப் பொறுப்புகளையும் இந்த அரசால் அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு நலத் திட்டங்களுக்கான செலவுகளையும் இந்த 2007–2010ஆம் ஆண்டுகளுக்கான இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம் கணக்கில் கொண்டுள்ளது.

4. 2007-2008ஆம் ஆண்டில், அரசின் மொத்த வருவாய் வரவுகளில் 5 சதவீத அளவிற்குள் வருவாய் பற்றாக்குறை குறைக்கப்படவேண்டும் எனவும், 2008-2009ஆம் ஆண்டில் வருவாய் பற்றாக்குறை முற்றிலுமாக நீக்கப்பட்டு, அதன் பின்னர் இந்த நிலை தொடர்ந்து கடைப்பிடிக்கப்படவேண்டும் எனவும் இச்சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளது. இந்த வரையறையின்படியே, மொத்த வருவாய் வரவுகளில் வருவாய் பற்றாக்குறை 5 சதவீத அளவிற்கும் குறைவாக கட்டுப்படுத்தப்படும் என்பதை 2007-2008ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம் காட்டுகிறது. மேலும், இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டத்தில் 2008-2009 ஆம் ஆண்டில் வருவாய் பற்றாக்குறை நீக்கப்படும் என்றும், 2009-2010ஆம் ஆண்டிலும் இந்த நிலை தொடரும் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

5. 2007-2008ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளில் நிதிப்பற்றாக்குறை, மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பீடுகளில் 2.84 சதவீதமாக இருக்கும் என கணக்கிடப்பட்டுள்ளது. இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டத்தில், இப்பற்றாக்குறையை 2008-2009ஆம் ஆண்டில் 2.58 சதவீதமாகவும் 2009-2010 ஆம் ஆண்டில் 2.42 சதவீதமாகவும் குறைக்க இயலும் எனக் கருதப்பட்டுள்ளது.

6. 2008-2009 ஆம் ஆண்டில் வருவாய் பற்றாக்குறை முற்றிலுமாக நீக்கப்படுவதால், நிதிப்பற்றாக்குறை முழுவதும் மூலதனச்

செலவுகளை மேற்கொள்வதற்குப் பயன்படுவதாக அமையும் என்பதையும், மாநிலம் தனது நடப்புச் செலவுகளுக்குத் தேவையான நிதி ஆதாரங்களைச் சொந்தமாகவே திரட்ட இயலும் என்பதையும் இது குறிக்கும்.

**7.** மாநிலம் தனது எதிர்பாராக் கடன் பொறுப்புகளை முறையாக நிருவகித்து வருகிறது. ஒவ்வொரு ஆண்டிலும் நிலுவையிலுள்ள அரசு உத்தரவாதங்கள் முந்தைய ஆண்டின் மொத்த வருவாய்க் கணக்கு வரவுகளில் **100** சதவீத அளவிற்குக் குறைவாகவோ அல்லது மாநில மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் **10** சதவீத அளவிற்குக் குறைவாகவோ, இவற்றில் எது குறைவானதோ அந்த அளவிற்கு அமையப்பெற வேண்டும். **31.3.2006** அன்று உள்ளபடி நிலுவையிலுள்ள அரசு உத்தரவாதங்களின் அளவு மொத்த வருவாய் வரவுகளில் **18.63** சதவீதமாகவும் மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் **2.99** சதவீதமாகவும் உள்ளது. ஒவ்வொரு ஆண்டிலும் மீளப்பெறும் சாத்தியக் கூறுகளின் அடிப்படையில் **(Risk weighted)** கணக்கிடப்பட்ட நிலுவையிலுள்ள அரசு உத்தரவாதங்கள் முந்தைய ஆண்டின் மொத்த வருவாய்க் கணக்கு வரவுகளில் **75** சதவீதத்திற்கு மிகாமலோ அல்லது மாநில மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் **7.5** சதவீதத்திலோ இதில் எது குறைவானதோ அந்த அளவிற்குள் இருக்க வேண்டும். **31.3.2006** அன்று உள்ளபடி மீளப்பெறும் சாத்தியக் கூறுகளின் அடிப்படையில் கணக்கிடப் பட்ட அரசு உத்தரவாதங்களின் **(Risk weighted guarantees)** அளவு, மொத்த வருவாய் வரவுகளில் **5.53** சதவீதமாகவும் மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் **0.89** சதவீதமாவும் உள்ளது. பயனளிக்கக்கூடிய திட்டங்களுக்கு மட்டும் உத்தரவாதங்கள் அளிக்கப்படுவதை உறுதி செய்யும் வகையில் அரசு உத்தரவாதங்கள் கட்டுப்படுத்தப்படும்.

**8.** மூலதனச் செலவுகளுக்கான ஒதுக்கீடுகள் அதிகப்படுத்தப்பட்டுள்ள அதே வேளையில், பன்னிரண்டாம் நிதிக்குழு நிர்ணயித்துள்ள குறியீடுகளுக்கேற்ப அரசுச் சொத்துக்களின் பராமரிப்புச் செலவுகளுக்கும் போதுமான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

## எதிர்வருவாய்க் கணக்கு வரவுகள்

### மத்திய வரிகளில் பங்கு

**9.** மத்திய வரிகளில் மாநிலத்தின் பங்கு **2007-2008** ஆம் ஆண்டிற்கான மைய அரசின் வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ரூபாய் **7,567** கோடி என கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. **2008-2009** ஆம் ஆண்டில் **6** சதவிகித வளர்ச்சியை கணக்கில் கொண்டும் **2009-2010** ஆம் ஆண்டில் **7.5** சதவீத வளர்ச்சியை கணக்கில் கொண்டும் மத்திய அரசு வரிகளின் பங்கீடு கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

### மாநில அரசின் சொந்த வரி வருவாய்

**10.** தமிழ்நாட்டின் மொத்த உற்பத்தி மதிப்பீடுகளில் வரிவருவாயின் விகிதம் நாட்டிலேயே மிக உயர்ந்ததாகத் திகழ்ந்து வருகிறது. **2007–2008** ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளில் இந்த விகிதம் **11.3** சதவீதமாக உள்ளது. மாநிலத்தின் சொந்த வரிவருவாய் ரூபாய் **30,988** கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது **2006-2007** ஆம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீடுகளைக் காட்டிலும் **10.5** சதவீதம் அதிகமாகும். பின்வரும் ஆண்டுகளில் மாநில சொந்த வரிவருவாயின் வளர்ச்சி வீதம் **12** சதவீதம் என்ற அளவில் இருக்குமெனக் கணிக்கப் பட்டுள்ளது. மாநிலத்தின் சொந்த வரிவருவாயின் முக்கியக் கூறுகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

**11. 2007-2008** ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் வணிக வரிகளின் வசூல் ரூபாய் **21,599** கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. இது **2006-2007** ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீடுகளை

விட 8.6 சதவீதம் கூடுதலாகும். தமிழ்நாட்டில் மதிப்புக் கூட்டுவரி நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளதால் ஏற்படக்கூடிய வருவாய் இழப்பையும், இழப்பில் 50 சதவீதத்தை மத்திய அரசு 2007–2008 ஆம் ஆண்டில் ஈடு செய்யும் என்பதையும் இந்த மதிப்பீடு கணக்கில் கொண்டுள்ளது. மத்திய விற்பனை வரி 1.4.2007 முதல் 3 சதவீதமாகவும், 2008-2009 ஆம் ஆண்டில் 2 சதவீதமாகவும், 2009-2010 ஆம் ஆண்டில் 1 சதவீதமாகவும் கணக்கிடப்படுள்ளது.

12. 2007-2008 ஆம் ஆண்டில் ஆயத்தீர்வை வரவுகள் ரூபாய் 4,370 கோடியாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. இது 2006-2007 ஆம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீடுகளைவிட 15 சதவீதம் கூடுதலாகும். பின்வரும் ஆண்டுகளுக்கு இதே அளவில் வளர்ச்சி எதிர்நோக்கப்பட்டுள்ளது.

13. வீட்டுவசதி மற்றும் அசையாச் சொத்துக்களை வாங்கி விற்பதில் காணப்படும் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப்பதிவுக் கட்டணங்களில் உயரளவு வளர்ச்சி கணக்கில் கொள்ளப்பட்டுள்ளது. 2007–2008ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்டுள்ள ரூபாய் 3,259 கோடி அளவிலான வரவுகள், 2006-2007ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு களிலிருந்து 20 சதவீத வளர்ச்சியைக் காட்டுகிறது. வருமாண்டுக்கான வரவுகளில் 20 சதவீத வளர்ச்சி கணக்கில் கொள்ளப்பட்டுள்ளது.

14. வரும் ஆண்டில், மோட்டார் வாகன வரிகள் 2006–2007 ஆம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீடுகளைவிட 10 சதவீதம் கூடுதலாக, ரூபாய் 1,410 கோடியென மதிப்பிடப்பட்டுள்ளது. பின்வரும் ஆண்டுகளுக்கு 12 சதவீத வளர்ச்சி கணக்கில் கொள்ளப்பட்டுள்ளது.

**வரி அல்லாத வருவாய்**

15. இவ்வினம் 2007-2008 ஆம் ஆண்டில் ரூபாய் 2845 கோடியாகும். வருவாய் வரவுகளில் வரி அல்லாத வருவாயின் பங்கு 6.4 சதவீதமே யாகும். இந்த வருவாய் இனங்களை நிருவகிக்கும் நிறுவனங்கள் (Agencies) பயன்பாட்டுக் கட்டணங்களை நற்பணிகளை வழங்குவதற்கான செலவினங்களுக்காகப் பயன்படுத்திக் கொள்வதால், இந்த வருவாய் உயர்வதற்கு அதிக வாய்ப்புகள் இல்லை. மேலும், கல்வித் துறையில் மாணவர்களின் நலன் கருதி, கல்விக் கட்டணம், தேர்வுக் கட்டணம் ஆகியவற்றை இந்த அரசு ரத்து செய்துள்ளது. பொதுத்துறை நிறுவனங்களுக்கும் சட்டப்படியான வாரியங்களுக்கும் அரசு குறைந்த அளவிலேயே கடன்களை வழங்கி வருவதால் வரும் ஆண்டுகளில் வட்டி வரவுகளும் குறைவாகவே இருக்கும். இவையனைத்தையும் கருத்தில் கொண்டு, வரும் ஆண்டுகளில் வரி அல்லாத வருவாய் 5 சதவித அளவிற்கே வளரும் என கணக்கிடப்பட்டுள்ளது.

**16. மத்திய அரசிடமிருந்து பெறும் உதவி மானியங்கள்:**

பன்னிரண்டாவது நிதிக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையிலும், மத்திய அரசுத் திட்டங்கள் மற்றும் மத்திய அரசுடன் பகிர்ந்து கொள்ளப்படும் திட்டங்கள் ஆகியவற்றுக்காகவும் மத்திய அரசு அளிக்கும் மானியங்களின் அடிப்படையில் இந்த இனம் கணக்கிடப்பட்டுள்ளது. 1.4.2005க்கு முன்னர் ஏற்பளிக்கப்பட்ட வெளிநாட்டு உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்களுக் கான மானியங்களும், உதவி மானியங்களின் கீழான எதிர்காலக் கணிப்புகளில் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. மொத்தம், 2007–2008 வரவு செலவுத் திட்டதில் மத்திய

அரசின் மானியங்கள் ரூபாய் 3,131 கோடியாகவும் பின்வருமாண்டுகளில் 6 சதவீத வளர்ச்சியுடனும் கணிக்கப்பட்டுள்ளது.

**வருவாய்க் கணக்கில் செலவுகள்**

17. 2007-2008 ஆம் ஆண்டிற்கான வருவாய்க் கணக்கு செலவுகள் ரூபாய் 44,634 கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது 2006-2007 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடுகளைவிட 9.6 சதவீத வளர்ச்சியைக் காட்டுகிறது. அரசின் பல்வேறு துறைகளில் உள்ள பணியிடங்களை நிரப்புதல் மற்றும் அரசு அறிமுகப்படுத்தியுள்ள பல்வேறு புதிய நலத் திட்டங்கள் ஆகியவற்றிற்கான கூடுதல் செலவே இந்த உயர்வுக்கு காரணமாகும். வருமாண்டுகளில் வருவாய்க் கணக்குச் செலவுகள் 11 சதவீத வளர்ச்சியுடன் கணக்கிடப் பட்டுள்ளன.

18. மாநில அரசின் சொந்த வரிவருவாயில் சம்பளங்கள் மற்றும் ஓய்வூதியம் குறித்த செலவுகள் 69 சதவீதமாக இருக்கும். இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டத்தில் இந்த அளவைத் தொடர்ந்து கடைப்பிடிக்கக் கருதப்பட்டுள்ளது.

19. உயர்வட்டிகொண்ட கடன்களை மாற்றி அமைத்து வட்டிப் பொறுப்புகள் குறைக்கப்படும். கடன் பளுவை சமாளிக்கக் கூடிய அளவிற்குள்ளேயே வைத்திருக்கும் வகையில், கடன் பொறுப்புகளை அரசு கவனமாகக் கண்காணிக்கும். பன்னிரண்டாவது நிதிக்குழு பரிந்துரைத்துள்ளவாறு வருவாய் வரவுகளில் வட்டி செலவுகளின் பங்கை 15 சதவீத அளவிற்குள் கட்டுப்படுத்துவதற்கு இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ளது.


**பலன்கள்**

20. இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகள் 2005-2006 ஆம் ஆண்டில் எய்தப்பட்டுள்ளதைப் போல 2006-2007 ஆம் ஆண்டிலும் எய்தப்படும் என எதிர்பார்க்கப் படுகிறது. 2007–2008 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளில் நிதிப்பற்றாக் குறையை மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் 3 சதவீதத்திற்குள் கட்டுப்படுத்தும் அதே நேரத்தில், சாதனை அளவாக ரூபாய் 7,861 கோடி அளவிலான மூலதனச் செலவிற்கும் ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன.

21. சமூகப் பாதுகாப்பு வளையத்தில் கீழ் அளிக்கப்படும் நல உதவிகள் அதிகரிக்கப் பட்டுள்ளன. இதற்காக மொத்த ஒதுக்கீடு 2006-2007 ஆம் ஆண்டிலிருந்த ரூபாய் 11,292 கோடியிலிருந்து 2007-2008 ஆம் ஆண்டில் ரூபாய் 13,179 கோடியாக உயர்ந்துள்ளது.

22. பன்னிரண்டாவது நிதிக்குழுவின் பரிந்துரைகளின்படியே பொது சொத்துக்களின் பராமரிப்பிற்கான ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன. கல்வி, சத்துணவு மற்றும் பொது சுகாதாரம் ஆகியவற்றிற்கான ஒதுக்கீடுகள் குறிப்பிடத்தக்க அளவில் உயர்த்தப்பட்டுள்ளன. வருமாண்டு களிலும் இதே அளவு உயர் ஒதுக்கீடுகள் உறுதி செய்யப்பட்டுள்ளன.

23. தற்போது அளிக்கப்பட்டுள்ள இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டத்தில் குறிப்பிடப் பட்டுள்ளவாறு, அனைத்து நிதிநிலை இலக்குகளையும் நம் மாநிலம் முழுமையாக எய்த உள்ளது. □






# சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு மொழியாக தமிழ்

## மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடிதம்

**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள்,
மாண்புமிகு இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களுக்கும்,
மாண்புமிகு மத்திய உள்துறை அமைச்சர் திரு.சிவராஜ் பாட்டீல்,
மாண்புமிகு மத்திய சட்ட அமைச்சர் திரு. பரத்வாஜ்
ஆகியோருக்கும் **11.3.2007** அன்று எழுதிய கடிதம் :-



பல்லாண்டு காலமாக கோடிக்கணக்கான தமிழர்கள், மாநிலத்தின் அதிகாரப்பூர்வமான மொழியாகிய தமிழ் மொழி, சென்னை உயர் நீதி மன்றத்தின் வழக்கு மொழியாகவும் மாற வேண்டும் என்று ஏங்கி வந்தனர். மத்தியிலுள்ள ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு, இந்திய மொழிகளில் செம்மொழி என ஒரே மொழியாக தமிழ் மொழியை அறிவித்ததை அடுத்து தமிழர்களின் இந்த ஆவல் மேலும் அதிகரித்தது.

இந்திய அரசியலமைப்புச் சட்டம் 348 (2) பிரிவின் படியும் அதிகாரப்பூர்வ மொழிகள் சட்டம் 7ஆவது பிரிவின் படியும், சென்னை உயர் நீதிமன்றத்தின் உத்தரவுகள், ஆணைகள் மற்றும் இதர நடவடிக்கைகளில் தமிழ் மொழியை அறிமுகப்படுத்தும் வகையில் 6.12.2006 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் என்னால் தீர்மானம் ஒன்று முன்மொழியப்பட்டது.

இந்தத் தீர்மானத்தை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை பெரும் உற்சாகத்துடனும் எதிர்பார்ப்புடனும் ஒருமனதாக நிறைவேற்றியது. தமிழக ஆளுநர் அவர்களின் பரிந்துரையைப் பெற்றபிறகு, சென்னை உயர் நீதிமன்றத்தில் தமிழ்மொழியை வழக்கு மொழியாகப் பயன்படுத்த அதிகாரம் வழங்கி இந்தியக் குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெறுவதற்காக இந்த தீர்மானம் மத்திய அரசிற்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இதற்கிடையில், தமிழ்மொழியை உயர் நீதிமன்றத்தின் வழக்கு மொழியாகப் பயன்படுத்த சென்னை உயர் நீதிமன்றமும் கொள்கை அளவில் ஒப்புதல் அளித்தது, தமிழக ஆளுநரும், சென்னை உயர் நீதிமன்றமும் சென்னை உயர் நீதிமன்றத்தில் தமிழ் மொழியைப் பயன்படுத்துவது முற்றிலும் சட்டபூர்வமானதே என்ற கருத்தைக் கொண்டிருக்கிறார்கள்.

தற்போது மத்திய அரசின் சட்டம் மற்றும் நீதி அமைச்சகத்தின் நீதித்துறை 27.2.2007 தேதியிட்ட கடிதத்தில் உச்ச நீதிமன்றத்துடன் கலந்தாலோசித்து இந்தப் பிரச்சினை பரிசீலிக்கப்பட்டதாகவும், "தற்போது உயர் நீதிமன்றத்தின் உத்தரவுகள், ஆணைகள் மற்றும் இதர நடவடிக்கைகளில் மாநில மொழியை தற்போது அறிமுகப்படுத்துவது உகந்ததாக இருக்காது என்று இந்தியத் தலைமை நீதிபதி கருதுவதாகவும்" கூறப்பட்டுள்ளது. அரசியலமைப்புச் சட்டத்தில் இது தொடர்புடைய பிரிவுகளும், நாடாளுமன்றத்தால் உருவாக்கப்பட்ட சட்டங்களும் மாறுதல் எதுவுமின்றி இருக்கும் நிலையில், இந்தக் கடிதத்தில் கண்டுள்ள உள்ளடக்கம், சம்பந்தப்பட்ட அனைவருக்கும் ஆச்சரியத்தையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.

அரசியலமைப்புச் சட்டம் 348 (2) பிரிவு மற்றும் 1963 அதிகாரப்பூர்வ மொழிகள் சட்டம் 7ஆவது பிரிவு ஆகியவற்றின் அழுத்தம் மிகத் தெளிவாக உள்ளது. அதை பல்வேறு மாநிலங்களுக்கு பல்வேறு வகைகளில் அர்த்தம் கற்பிக்க முடியாது.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 348ஆவது பிரிவின்கீழ் கூறப்பட்டுள்ள எந்தத் தேவைக்காகவும் அல்லது அனைத்துத் தேவைகளுக்காகவும் பயன்படுத்தப்படவேண்டிய மொழியைப் பற்றி குடியரசுத் தலைவருக்கு நாடாளுமன்றத்தின் ஒரு ஆணையம் பரிந்துரை செய்யலாம் என்று அரசியலமைப்புச் சட்டத்தின் 344ஆவது பிரிவு கூறுகிறது. அதற்கிணங்க, நாடாளுமன்ற ஆணையம் ஒன்று அதன் பரிந்துரைகளை வழங்கியது; அந்தப் பரிந்துரைகளின் அடிப்படையில், நாடாளுமன்றம் அதிகாரப்பூர்வ மொழிகள் சட்டத்தை (1963) நிறைவேற்றியது. பின்னர் அந்தச் சட்டம் 1967 ஆம் ஆண்டு திருத்தப்பட்டது.

1963 அதிகாரப்பூர்வ மொழிகள் சட்டம் 7ஆவது பிரிவின்படி, ஒரு மாநிலத்தின் உயர் நீதிமன்றம் வெளியிடும் தீர்ப்பு, ஆணை அல்லது உத்தரவு ஆகியவற்றிற்காக ஆங்கில மொழியுடன் மாநிலத்தின் அதிகாரப்பூர்வமொழி அல்லது இந்தி ஆகியவற்றிற்கு மாநில ஆளுநர் அங்கீகாரம் வழங்கலாம். உயர் நீதிமன்றத்தில் வழக்கு மொழியாகப் பயன்படுத்தப் பட்ட மேற்கூறிய சட்டப்பிரிவைப் முன்வைக்க இந்திய ஒன்றியத்தில் உள்ள ஒவ்வொரு மாநிலத்துக்கும் உரிமை உண்டு.

இந்திய அரசியலமைப்புச் சட்டம் 348(2) பிரிவின் படியும், 1963ஆம் ஆண்டு அதிகாரப்பூர்வ மொழிகள் சட்டத்தின் 7ஆவது பிரிவின்படியும், இந்திய ஒன்றியத்திலுள்ள நான்கு மாநிலங்கள் (பீகார், உத்திரப்பிரதேசம், மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான்) அந்த மாநிலங்களின் உயர் நீதிமன்றங்களுடைய நடவடிக்கைகளில் அந்த மாநிலங்களின் அதிகாரப் பூர்வமான மொழியைப் பயன்படுத்த அனுமதிக்கப் பட்டுள்ளன என்பது கண்கூடு. (மாநிலங்களவையில் 12.12.2005 அன்று உடுக்குறியிட்ட கேள்வி எண் 279க்கு அளிக்கப்பட்ட பதிலின்படி)

இந்த அம்சத்தைப் பொறுத்தவரையில் இந்திய ஒன்றியத்தின் பகுதிகளான மாநிலங்களில் ஒன்றான ஒரு மாநிலத்தின், அதிகாரப்பூர்வமான மொழியைப் பயன்படுத்துவதில் பாரபட்சம் இருக்க முடியாது. எனவே தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் வேறொரு நிலைப்பாட்டை எடுக்க முடியாது.

உயர் நீதிமன்றங்களில் ஆங்கிலத்தைத் தவிர இதர மொழிகளைப் பயன்படுத்தும் விவரத்தில், 1965ஆம் ஆண்டு ஒரு சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. அதற்குப் பின் நாட்டின் நிலைமைகள் முற்றிலுமாக மாறியுள்ளன. அணுகுமுறைகள், பார்வைகள், நடைமுறைகள் ஆகிய அனைத்தும் மாறியுள்ளன. மாநில விருப்பங்கள் வேகம் பெற்று முன்னுக்கு வந்துள்ளன. இந்தியா போன்ற பல மொழிகளைக் கொண்ட ஒரு நாட்டில், ஒரு தனி மொழியைப் பயன்படுத்துவது குறித்து நிரந்தரமான விதி ஒன்று இருக்க முடியாது.

1963, அதிகாரப்பூர்வ மொழிகள் சட்டம் 7ஆவது பிரிவு உள்துறை அமைச்சகத்தின் 26.2.1970ஆம் தேதியிட்ட உள்துறை அமைச்சகத்தின் அறிவிக்கை 2/1/66 ஒ.எல்.–இன்படி அமலுக்கு வந்தது. அதிகாரப்பூர்வ மொழிகள் சட்டம் 7ஆவது பிரிவுக்காக 7.3.1970ஆம் தேதியை நியமனத் தேதியாக மத்திய அரசு தீர்மானித்தது. அலகாபாத் உயர் நீதிமன்றத்துடன் கலந்தாலோசித்து, உத்திரப்பிரதேச மாநில ஆளுநர், அலகாபாத் உயர் நீதிமன்றத்தால் வழங்கப்படும் தீர்ப்புகள், ஆணைகள் ஆகியவற்றிற்கு ஆங்கிலத்துடன் கூட இந்தி மொழியையும் பயன்படுத்த அதிகாரம் வழங்கி 28.10.1970 அன்று ஒரு அறிவிக்கையை வெளியிட்டார். இவை அனைத்தும் 1965ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டதாகக் கூறப்படும் தீர்மானத்திற்கு மிகவும் காலந்தாழ்த்தியவை ஆகும்.

மேலும் உயர் நீதிமன்றத்தில் தமிழ்மொழியைப் பயன்படுத்துவது என்பது அந்த மொழியை மட்டுமல்லாது ஆங்கிலத்துடன் கூடுதலாக மட்டுமே ஆகும். எனவே, நடவடிக்கைகள் ஆங்கிலத்தில் இருக்க வேண்டும் என்றும், ஆங்கிலத்தில் உத்தரவைப் பிறப்பிக்க வேண்டும் என்றும் நீதிபதி எவராவது விரும்பினால், அவர் ஆங்கிலத்தைப் பயன்படுத்த தடை ஏதும் இல்லை. மேலும் தமிழ்மொழியில் அளிக்கப்படும் எந்த உத்தரவும் அதிகாரப்பூர்வமான ஆங்கில மொழி பெயர்ப்புடன் இணைக்கப்பட்டிருக்கும். எனவே, தமிழில் பரிச்சயம் இல்லாத எந்த நீதிபதியும் வாதங்களைக் கேட்பதிலோ, உத்தரவுகளைப் பிறப்பிப்பதிலோ எந்தவிதமான சிரமத்தையும் சந்திக்க மாட்டார். எனவே கூறப்பட்டுள்ள காரணங்கள் சரியானவைகளாகத் தோன்றவில்லை.

கொல்கத்தா உயர் நீதிமன்றத்தில் வங்காள மொழியை வழக்கு மொழியாக அறிமுகப்படுத்த மேற்கு வங்க அரசு விடுத்திருந்த கோரிக்கையை நிராகரித்தது தமிழகத்தின் கோரிக்கையை நிராகரிக்க சரியான காரணமாக இருக்க முடியாது.

அரசியலமைப்புச் சட்டத்தின் 348ஆவது பிரிவு 344வது பிரிவு போலவே மாறுதலுக்கு உட்பட்டது என்பதை தாங்கள் ஏற்றுக் கொள்வீர்கள். நாடாளுமன்றம் வேறுவிதமாக சட்டம் இயற்றும் தேதி வரையில்தான் இந்தப் பிரிவு அமலில் இருந்தது. எனவே 348வது பிரிவு இனியும் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பகுதியாக இல்லை. 1963ஆம் ஆண்டு அதிகாரப்பூர்வ மொழிகள் சட்டம் அமலுக்குக் கொண்டு வரப்பட்ட தேதியிலிருந்து அந்தச் சட்டத்திற்கு வழிவகுத்து இந்தப் பிரிவு காலாவதியாகிவிட்டது. எனவே 1963ஆம் ஆண்டு அதிகாரப்பூர்வ மொழிகள் சட்டம் தொடங்கியதற்குப் பிறகு அரசியலமைப்புச் சட்டம் 348ஆவது பிரிவில் கூறப்பட்டுள்ள, அனைத்து உயர் நீதிமன்றத்திலும் "அனைத்து நடவடிக்கைகளும் ஆங்கில மொழியில் இருக்க வேண்டும்" என்ற நிபந்தனை அமலில் இல்லை. தற்போது 1963ஆம் ஆண்டு அதிகாரப்பூர்வ மொழிகள் சட்டம் மட்டுமே அதிகாரப்பூர்வமானதாகும். எனவே உயர்நீதிமன்றங்களில் ஆங்கிலம் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும் என்று கூறுவது அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரணானதாகும்.

18ஆவது நூற்றாண்டில் இங்கிலாந்தில் நடைபெற்ற நிகழ்வுகளைப் பற்றி தாங்கள் முழுமையாக அறிந்திருப்பீர்கள். சுருங்கக் கூறும் தன்மைகள் மற்றும் வழக்கு வார்த்தைகளின் வளம் ஆகியவற்றில் உயர்தரமாக இருந்த போதிலும் நீதிமன்றங்களில் பிரெஞ்சு மொழி, இறுதியில் ஆங்கில மொழிக்கு வழிவிட வேண்டியதாயிற்று. ஏறத்தாழ ஐந்து நூற்றாண்டுகள் சமருக்குப் பிறகு இந்த மாற்றம், இறுதி மாற்றம் வந்தது, இவ்வாறு, மாறுதல்கள் தவிர்க்க இயலாதது ஆகும்.

இந்திய அரசியலமைப்புச் சட்டம் 348 (2)வது பிரிவு மற்றும் 1963 ஆம் ஆண்டு அதிகாரப்பூர்வ மொழிகள் சட்டம் 7ஆவது பிரிவு ஆகியவற்றைப் பொறுத்தமட்டில், பீகார், உத்தரபிரதேசம், மத்தியப் பிரதேசம் மற்றும் ராஜஸ்தான் மாநிலங்களுக்கு சமமாக தமிழ்நாடு எதிர்பார்க்கிறது.

6.12.2006 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் ஒருமனதான தீர்மானம் மூலமாக மிகத் தெளிவாக வலியுறுத்தப்பட்ட தமிழக மக்களின் விருப்பத்திற்கு வடிவம் கொடுக்க அவசர நடவடிக்கைகளை தாங்கள் எடுப்பீர்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

தமிழக மக்களின் உணர்வுகளை நிச்சயமாகத் தாங்கள் மதித்து தமிழ்நாட்டின் உரிமையை நிலை நாட்டுவீர்கள் என்று நான் நம்புகிறேன்.

எனவே, சென்னை உயர் நீதிமன்றத்தில் தமிழ் மொழியை வழக்கு மொழியாகப் பயன்படுத்த அதிகாரம் வழங்கும் வகையில் குடியரசுத் தலைவரின் ஒப்புதலை விரைவாக பெற்றுத் தருமாறு தங்களைக் கேட்டுக் கொள்கிறேன். □

# வெடிவிபத்தில் இறந்தோர் வாரிசுக்கு அரசுப் பணி வழங்கப்படும்



தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவையில்
9-4-2007 அன்று
சிறப்பு கவன ஈர்ப்புத்
தீர்மானத்திற்கு பதிலளித்து
மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
**கலைஞர் மு. கருணாநிதி**
அவர்கள் ஆற்றிய உரை

**மா**ண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இன்றைய சிறப்பு கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மீது எதிர்க்கட்சியின் துணைத் தலைவர் மாண்புமிகு ஓ. பன்னீர்செல்வம் அவர்களும், காங்கிரஸ் கட்சியின் சார்பில் மாண்புமிகு உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் அவர்களும், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் அந்தக் கட்சியின் சட்டமன்றத் தலைவர் மாண்புமிகு கோ.க. மணி அவர்களும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் செல்வி பாலபாரதி அவர்களும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் திரு. சிவபுண்ணியம் அவர்களும் தங்கள் கருத்துக்களை எடுத்து வைத்திருக்கிறார்கள்.

நடைபெற்றது எதிர்பாராத ஒரு சோக நிகழ்ச்சி. அந்த சோக நிகழ்ச்சி பல படிப்பினைகளை நமக்குத் தரக் கூடிய நிகழ்ச்சியாக அமைந்திருக்கிறது என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. அந்த நிகழ்ச்சியை அடிப்படையாக வைத்து இங்கே எடுத்துச் சொல்லப்பட்ட கருத்துக்களையெல்லாம் ஏற்றுக்கொண்டு அவ்வழியிலே இந்த அரசு மேலும் முனைப்பாகச் செயல்படும் என்ற உறுதியை இங்கே உரை நிகழ்த்திய கட்சிகளின் தலைவர்கள், பிரதிநிதிகள் அனைவருக்கும் மாமன்ற உறுப்பினர் களுக்கும், தமிழ் நிலத்திலே வாழ்கின்ற மக்களுக்கும் நான் உறுதி கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

நம்முடைய பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் உரையாற்றும்போது இத்தகைய சோகங்கள் நடைபெறாமல் இருக்க, அரசின் பொறுப்பில் இது போன்ற உரிமங்கள் வழங்குகின்ற நிலை இருக்க வேண்டும், அதற்கு ஆவன இந்த அரசு செய்யுமா என்று கேட்டார்கள். அரசின் பொறுப்பிலே இந்த உரிமம் வழங்குவது மாத்திரமல்ல, அரசின் பொறுப்பிலே இருக்கின்ற காட்பாடி வெடி மருந்து கிடங்கிலே கூட கடந்த கால ஆட்சியில் விபத்து ஏற்பட்டு 24 பேர் இறந்திருக்கிறார்கள்.

ஆகவே அரசின் பொறுப்பில் இருந்தாலும், தனியார் பொறுப்பிலே இருந்து அவை விநியோகிக்கப்பட்டாலும், பொறுப்புள்ளவர்கள், கவலை உள்ளவர்கள், அக்கறை உள்ளவர்கள், இதனால் ஏற்படக் கூடிய விளைவுகளைக் கண்டு வருந்தக் கூடிய மனம் படைத்தவர்களுக்குத் தான் இதிலே அக்கறை இருக்க முடியும். ஆகவே அரசுப் பொறுப்பிலே இந்த உரிமங்களை வழங்குகின்ற நிலையை ஏற்படுத்துங்கள் என்று பீட்டர் அவர்கள் சொன்னதற்கு மாறாக, இதயம் உள்ளவர்கள் யாரோ, நாணயம் உள்ளவர்கள் யாரோ – குறுக்கு வழியிலே, திருட்டு வழியிலே சம்பாதிக்க வேண்டும். இந்தப் பொருளைக் கொண்டு என்று எண்ணாதவர்கள் யாரோ, அப்படிப்பட்டவர்களை ஆய்வு செய்து, அவர்களுக்கு இந்த உரிமங்கள் வழங்குகின்ற உரிமையைத் தர வேண்டுமென்று சொன்னால், அதுதான் பொருத்தமாக இருக்கும். இருந்தாலும்கூட, பீட்டர் அவர்களும், மற்றவர்களும் சொன்ன அந்தக் கருத்துக்களைப் பற்றி நான் யோசித்தபோது, இது மாவட்ட அதிகாரிகள் அளவிலோ, மாநில அதிகாரிகள் அளவிலோ நேரடியாக வழங்குகின்ற உரிமம் அல்ல. இந்த உரிமங்களை வழங்குகின்ற அதிகாரம் பெற்றதாக மத்திய அரசுதான் இருக்கிறது. மத்திய அரசு இது குறித்த உரிமங்களை வழங்க வேண்டும். ஆகவே மத்திய அரசோடு தொடர்பு கொண்டு இந்த உரிமங்கள் வழங்குவதை மாநில அரசு நேரடியாகச் செய்ய முடியுமா என்பதை நிச்சயமாக யோசித்து, நல்ல முடிவெடுக்கப்படும் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிகழ்ச்சிக்கு சற்று நம்முடைய கவனத்தைச் செலுத்தினால் 7–4–2007 அன்று காலை 11.30 மணியளவில் – விழுப்புரம் மாவட்டம், மைலம் காவல் நிலைய சரகத்தில், விழுப்புரம் – சென்னை தேசிய நெடுஞ்சாலையில் – ஜீப் எம்.எம். 540 எண். TCQ 3033 என்ற வாகனத்தில் வெடி மருந்துப் பொருள்கள் ஏற்றிக் கொண்டு பாதிராப் புலியூரிலிருந்து சென்டூர் வரும்போது, பாதிராப்புலியூர் கூட்டு ரோட்டில் அந்த வாகனத்திலிருந்து திடீரெனப் புகை வருவதைப் பார்த்த பொதுமக்கள் வாகனத்தின் ஓட்டுநரிடம் அதைத் தெரிவித்தார்கள்.

ஜீப் உடனடியாக நிறுத்தப்பட்டது – சாலையில் ஓரத்தில் இருந்த மண்ணை, பொதுமக்கள் உதவியுடன் அள்ளி வீசிய போது – வாகனம் பலத்த சத்தத்துடன் வெடித்துச் சிதறியது.

இந்த விபத்தில் அங்கே நின்று கொண்டிருந்த பொதுமக்களில் 14 பேர் சம்பவ இடத்திலும், 2 பேர் மருத்துவ மனையிலும் இறந்துள்ளார்கள். மொத்தம் 16 பேர் அல்லது நண்பர் மணி அவர்கள் சொன்ன கணக்குப்படி 17 பேர் இறந்திருக்கிறார்கள். அவர்களில் 11 பேர் ஆண்கள், 5 பேர் பெண்கள், ஒருவர் அடையாளம் தெரியவில்லை. இறந்தவர்களில் ஜீப்பை ஓட்டிய பாபு என்பவரும், உதவியாளர்கள் பலராமன், குமார் என்ற செந்தில்குமார் ஆகியோரும் அடங்குவர், இவர்கள் அனைவரும் சென்டூர், சிறுவத்தூர், தென் ஆலப்பாக்கம், பாலப்பட்டு கிராமங்களைச் சேர்ந்தவர்கள். 22 பேர் மொத்தம் காயமடைந்தனர். அவர்களில் 17 பேர் ஆண்கள், 5 பேர் பெண்கள், விழுப்புரம் அரசு மருத்துவ மனையில் வெளி நோயாளியாக ஒருவரும், திண்டிவனம் அரசு மருத்துவமனையில் உள் நோயாளிகளாக 9 பேரும், புதுவை ஜிப்மர் மருத்துவமனையில் உள் நோயாளிகளாக 9 பேரும், மேல் சிகிச்சைக்காக சென்னை சென்றவர்கள் 3 பேரும் காயமடைந்தவர்களாகும்.

இந்த விபத்தின் காரணமாக கான்கிரீட் வீடுகள் ஐந்து, ஓட்டு வீடுகள் எட்டு, கூரை வீடுகள் பதினேழு, பெருமளவுக்குப் பாதிக்கப்பட்டுள்ளன. கான்கிரீட் வீடுகள், ஓட்டு வீடுகள், கூரை வீடுகள் குறைவான அளவுக்கும், மிகக் குறைவான அளவுக்கும் சேதாரமாகி யுள்ளன. இவைகளில் அறவே சேதமாகியுள்ள வீடுகளும் உண்டு. இவையன்னியில், கான்கிரீட் கடை ஒன்றும் ; அரசுக்குச் சொந்தமான நான்கு

கட்டடங்களும் பாதிக்கப்பட்டுள்ளன. இந்தச் சேதாரங்களை 28 இலட்சம் ரூபாய் என விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் முதல் மதிப்பீடு செய்து அனுப்பியுள்ளார். இதனை மேலும் ஆய்ந்து, மொத்தத் தொகை எவ்வளவு என்பதைத் தெரிந்து கொண்டு, அந்த வீடுகளை கட்டித் தருவதற்கான முயற்சியும், அதற்கான நிவாரணத் தொகையும், நிதியும் நிச்சயமாக இந்த அரசால் வழங்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

## அரசுப் பணி வழங்கப்படும்

இறந்தவர்கள் குடும்பங்களைப் பற்றிய விவரத்தைப் பார்த்தால் பரிதாபகரமாக இருக்கின்றது.

1. ஏழுமலை – இவரே குடும்பத் தலைவர் – வயது 40 விவசாயக் கூலி – மனைவி இருக்கிறார் – 16 வயதில் ஒரு மகனும், 18 வயதில் ஒரு மகளும், 15 வயதில் ஒரு மகளும் உள்ளார்கள். இந்தப் பரிதாபகரமான குடும்பத்தின்மீது நிச்சயமாக இந்த அரசு பரிவு காட்டி, இன்றைக்கு மிச்சம் இருக்கின்ற அந்தக் குடும்பத் தலைவருடைய மனைவி இருந்தால் அவருக்கு வேலை, மகன், மகள் இருவருக்கும் அரசுப் பணிகளும் நிச்சயமாகத் தரப்படும்.

2. இன்னொரு குடும்பத்தில் குடும்பத் தலைவருடைய பெயர் முத்து – வயது 55 – மனைவி இருக்கிறார் – இரண்டு மகன்களும், ஒரு மகளும் இருக்கிறார்கள். இவரது தொழில் விவசாயம். இந்த மகன்களுக்கும், மகளுக்கும் நிச்சயமாக அரசுப் பணி வழங்கப்படும்.

3. சுந்தரம் – குடும்பத் தலைவர் – வயது 50 – மனைவி விஜயலட்சுமி உயிருடன் இருக்கிறார் – ஒரு பையன், ஒரு பெண் – தொழில் விவசாயம் தான். அந்தக் குடும்பத்திற்கும் இந்த அரசு உதவிகளைச் செய்யும். மிச்சம் இருக்கின்ற பையனுக்கும் ,பெண்ணுக்கும் அரசு வேலைவாய்ப்பு வழங்கும்.

4. முருகன் – குடும்பத்தலைவர் – வயது 40 – மனைவி ஜெயலட்சுமி இருக்கிறார் – 12 வயதில் ஒரு மகன் – 10 வயதில் ஒரு மகளும், 8 வயதில் ஒரு மகளும் இருக்கிறார்கள் – இவரது தொழில் விவசாயக் கூலி. இவர்களது குடும்பத்தையும் அரசு தத்து எடுத்துக்கொள்ளும்.

5. ஆனந்தாயி – வயது 35 – கணவன் உயிரோடு இருக்கிறார் – 11 வயதில் ஒரு மகனும், 13 வயதில் ஒரு மகளும், 8 வயதில் ஒரு மகளும் இருக்கிறார்கள். இவர்களும் விவசாயக் கூலிகள்தான். இந்தக் குடும்பத்தையும் அரவணைத்து அவர்களுக்கு ஆறுதல் வழங்கக் கூடிய அந்தப் பொறுப்பை அரசு ஏற்றுக் கொள்ளும்.

இப்படி இறந்தவர்களின் எல்லா குடும்பங்களுக்கும் – ஏறத்தாழ 16 அல்லது 17 குடும்பங்களுக்கும் – குழந்தைகள், இளம் வயது பிள்ளைகள் மகன், மகள் என்ற அளவிலே இருக்கிறார்கள் – அவர்களையெல்லாம் மாவட்டத்திலே இருக்கின்ற ஆட்சித் தலைவரும் மற்றும் மாவட்டத்திலே இருக்கின்ற மற்றக் கட்சிகளின் நண்பர்களும் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழுவின் மூலம் பரிந்துரைகள் பெறப்பட்டு ,அவைகளையேற்று மாவட்ட நிருவாகத்தின் மூலமாக இந்த அரசின் சார்பாக அந்தக் குடும்பங்களையெல்லாம் காப்பாற்றுகின்ற முழுப்பொறுப்பை அரசு ஏற்றுக் கொள்ளும்.

## ஆர்.டி.எக்ஸ் என்பதற்கு ஆதாரம் கிடையாது

இந்த வழக்கு விவரம் என்னவென்றால், புதுச்சேரி நகர மணலிப்பட்டு கிராமத்தைச் சேர்ந்த கோபால் என்பவரின் மகன், 48 வயதான சேகர் என்பவர் கடந்த பல ஆண்டு காலமாக வெடி மருந்து உரிமம் பெற்று, மைலம்

காவல் நிலையம் சரகம், பாதிராப்புலியூர் கிராமத்தில், வெடி மருந்துக் கிடங்கு வைத்துள்ளார். இந்தக் கிடங்கிற்கு சேலம் நகரில் உள்ள சிவசக்தி எக்ஸ்ப்ளோசிவ்ஸ் நிறுவனம் வெடி மருந்துப் பொருட்களை அளிக்கிறது. சேகர் திண்டிவனத்தை சுற்றியுள்ள கல் குவாரிகளுக்கு வெடி மருந்துப் பொருட்களை வழங்கி வருகிறார்.

சேகருக்குச் சொந்தமான ஜீப் எம்.எம். 540 (TCQ 3033) வெடி மருந்துகளை ஏற்றிச் செல்வதற்காகவே அதன் அமைப்பு பிரத்தியேகமாக மாற்றி அமைக்கப்பட்ட வாகனமாகும். 7.4.2007 அன்று காலை 10.30 மணிக்கு குடோனில் இருந்து மேற்கண்ட ஜீப்பில் ஓட்டுனர் பாபு மற்றும் உதவியாளர்கள் பலராமன் மற்றும் குமார் என்ற செந்தில்குமார் ஆகியோர் – தேசிய நெடுஞ்சாலையை அகலப்படுத்தும் பணிக்காக வெடிமருந்துகளான சிலரி 200 கிலோ, சேப்டி ஃப்யூஸ் 375 மீட்டர் மற்றும் 150 எலெக்ட்ரிக் டிட்டேனட்டர் ஆகியவற்றை தேசிய நெடுஞ்சாலையை அகலப்படுத்தும் எஸ்.பி.எல். இன்ப்ராஸ்ட்ரச்சர் பிரைவெட் லிமிடெட் என்ற துணை ஒப்பந்ததாரரிடம் விளங்கம்பாடி கிராமத்தில் அவற்றை ஒப்படைக்க வந்த போதுதான் – மேற்படி வாகனம் வெடித்து சிதறியிருக்கின்றது. இங்கே சொல்லப்பட்டது போலவோ அல்லது வெளியிலே சொல்லப்படுவதைப் போலவோ இது ஆர்.டி.எக்ஸ் என்பதற்கான எந்த ஆதாரமும் கிடையாது.

இந்த நிலையில் இந்த மருந்து எப்படி வெடித்தது என்றால், இந்த மருந்துகளைத் தனித்தனியாக எடுத்துச் சென்றிருந்தால் இந்த ஆபத்தே வந்திருக்காது. அவர்கள் வெடி மருந்துகளைத் தனியாகவும், டிட்டோனேட்டிங் ஃப்யூஸ் மற்றும் எலெக்ட்ரிக் டிட்டோனேட்டர்களை தனியாகவும் இரு வாகனங்களில் எடுத்துச் சென்றிருந்தால் இந்த விபத்து ஏற்பட்டிருக்காது. இந்தப் பொருட்களை ஒன்றோடொன்று உராய்கின்ற அளவிற்கு எடுத்துச் சென்ற காரணத்தினால் – பச்சை மூங்கில்களே ஒன்றாக உராய்ந்து மூங்கில் காடுகள் தீப்பற்றுவதைப்போல இந்த அபாயகரமான இந்தப் பொருட்கள் ஒன்றோடொன்று உராய்ந்ததின் காரணமாக தீப்பற்றி இந்தப் பெரும் ஆபத்து, இந்தச் சோகம் விளைந்திருக்கின்றது என்பதை நான் இங்கே எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்தச் சோக நிகழ்ச்சிக்காக தி.மு.கழக ஆட்சியைக் கலைக்க வேண்டுமென்றெல்லாம் கூடப் பேசப்படுகிறது. ஆனால் நம்முடைய பன்னீர்செல்வம் அவர்கள், எதிர்க்கட்சியின் துணைத் தலைவர், இங்கே பேசும்போது அரசு இனிமேல் எப்படி எச்சரிக்கையாக இருக்க வேண்டும், எத்தகைய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும், எப்படி ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமென்று எச்சரித்து எங்களுக்கு சில அறிவுரைகளைச் சொன்னாரே தவிர, அவர் இந்த அரசு கலைக்கப்பட வேண்டுமென்று சொல்லவில்லை. காரணம் கலைக்கிற இடத்திலே நான் இல்லாத காரணத்தால், இவரிடத்தில் சொல்லியும் ஒன்றும் புண்ணியம் இல்லை என்று அவர் சொல்லாமல் விட்டிருப்பார் என்று கருதுகிறேன்.

ஆனால் இது போன்ற சம்பவங்கள் கடந்த காலத்தில் நிறைய நடந்திருக்கின்றன. கடந்த காலத்தில் தி.மு.கழக ஆட்சி இருந்த போதும் நடந்திருக்கின்றது .அ.தி.மு.க. ஆட்சி இருந்த போதும் நடந்திருக்கிறது. என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர். ஆண்ட போதும் நடந்திருக்கின்றது.

12.3.1995 அன்று திருப்பெரும்புதூர் காவல் நிலைய சரகத்தில் சேந்தமங்கலம் அருகில் சென்னையை நோக்கி இரசாயனப் பொருள் ஏற்றி வந்து கொண்டிருந்த டாங்கர் லாரி ஒன்று அரசு விரைவுப் பேருந்துடன் மோதி, ரசாயனப் பொருள் ஏற்றி வந்த டாங்கர் லாரி வெடித்துச் சிதறி தீ பிடித்தது. தீ வேகமாகப் பரவி அதன் காரணமாக அதில் பயணம் செய்த 54 பேர் சம்பவ இடத்திலேயே கருகி இறந்தார்கள். 37 பேர் காயமடைந்தார்கள்.

1995 ஆண்டு மார்ச் 3ஆம் தேதியன்று, சேலம் மாவட்டம், ராசிபுரம் அருகே டெம்போ வேன் ஒன்றும், தனியார் பேருந்து ஒன்றும் மோதிக் கொண்ட விபத்தில் 20 பேர் இறந்தார்கள். இந்தச் சம்பவங்கள் குறித்து முதலமைச்சராக இருந்த ஜெயலலிதா எந்த பதிலும் அப்போது கூறவில்லை.

11.7.1995 அன்று அம்மையார் ஜெயலலிதா ஆட்சியிலே, சேலம் மாவட்டம், வாழப்பாடி துணை சார் பதிவாளர் அலுவலகத்தின் முன்பு வெடி பொருள் வெடித்ததில் 8 பேர் சம்பவ இடத்திலேயே இறந்தனர். 16 பேர் காயம் அடைந்தனர்.

24.2.1996 அன்று கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு உட்பட்ட காட்டூர் காவல் நிலைய எல்லைக்குள் அமைந்துள்ள சரவணம்பட்டி என்ற இடத்தில் மாருதி கார் ஒன்றில் குண்டு வெடித்து ஒருவர் மரணமடைந்தார்.

16.9.2002 அன்று அ.தி.மு.க ஆட்சிக் காலத்தில் சேலம் மாவட்டம், ஆத்தூரில் உள்ள ஒரு வீட்டில் வைத்திருந்த வெடிகள் வெடித்ததில் 17 பேர் இறந்தார்கள். 31 பேர்கள் காயமடைந்தார்கள்.

இங்கே நம்முடைய பீட்டர் அவர்கள் சொன்னார்கள். குடந்தையிலே எத்தனை பேர் குழந்தைகள் மாண்டார்கள் என்று. திருவரங்கத்தில் ஒரு திருமண மண்டபத்தில் எவ்வளவு அல்லோலகல்லோலம் நடைபெற்றது என்பதையெல்லாம் இங்கே பேசிய நம்முடைய கட்சிகளின் தலைவர்கள் எல்லாம் எடுத்துரைத்தார்கள்.

அதெல்லாம் இயற்கை. ஏனென்றால் இவைகளையெல்லாம் பெரிதுபடுத்தக் கூடாதென்று நான் அல்ல – கடந்த காலத்தில் முன்னாள் முதலமைச்சர் அம்மையார் ஜெயலலிதா அவர்களே இதே அவையில் சொல்லியிருக் கிறார்கள்.

“இத்தகைய ஒரு பொதுப் பிரச்சினை ஏற்படும்போது அனைத்துக் கட்சிகளும் தங்கள் மனமாச்சரியங்களை மறந்து, பொது அமைதி நிலவுவதற்கும், பொதுமக்களின் உயிரையும், உடைமைகளையும் பாதுகாப்பதற்கும் ஒத்துழைப்பு நல்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். அதை விடுத்து, இருக்கின்ற பிரச்சினைகளை அதிகப்படுத்துகின்ற வண்ணம், சிலர் மேற்கொள்ளும் நடவடிக்கைகளும், விடுக்கின்ற அறைகூவல்களும் மிகவும் தவறான முன்னோடிகளாக அமைந்துவிடும்.'' என்று அவர்களே இங்கே கூறியிருக்கிறார்கள். அந்தக் கருத்தைப் பின்பற்ற வேண்டும் – முன்னாள் முதலமைச்சருடைய கருத்தை, இந்நாள் முதலமைச்சராகிய நான் பின்பற்றி இதை உங்களுக்கு அர்ப்பணிக்கிறேன் என்று கூறி இந்தக் குடும்பங்களுக்காகச் செய்யப்படுகின்ற உதவிகள் அல்லாமல் – விசாரணை வருவாய்த்துறை அதிகாரி அளவிலே போதாது என்றார்கள். நானும் அதை ஏற்றுக் கொள்கிறேன். ஏனென்றால் எங்களைப் பார்த்து கேட்கின்ற உரிமை உங்களுக்கு இருக்கின்றது. குடந்தையில் மகாமகச் சம்பவம் நடந்தபோது டி.ஆர்.ஓ. விசாரணைதான் வைத்தார்கள். அதை நாங்கள் தி.மு.க.வினர் ஏற்றுக்கொள்ளவில்லை. இப்போதும் டி.ஆர்.ஓ. விசாரணை போதாது என்று நீங்கள் கூறுவதை நான் ஏற்றுக் கொள்கிறேன். அப்படி ஏற்றுக் கொண்டு ஒரு மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரியின் தலைமையில் இந்த விசாரணையை நடத்துவதற்கும் நல்ல முடிவுகளைக் காண்பதற்கும் அரசு நிச்சயமாக அறிவிப்பு செய்யும் என்று தெரிவித்து நீங்கள் அன்போடு குறிப்பிட்ட எல்லாவிதமான சிபாரிசுகளையும் இந்த அரசு பரிசீலித்து ஏற்றுக் கொள்கிறது என்று குறிப்பிட்டு இந்த அளவில் என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.

★ ★ ★



# நாம் ஏற்றுக்கொண்டிருக்கின்ற பணியை மக்களுக்காக நிறைவேற்ற வேண்டும்

– சென்னையில்
18.3.2007 அன்று நடைபெற்ற
உள்ளாட்சித் தலைவர்கள்
கருத்தரங்கில்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
**கலைஞர்** அவர்கள் ஆற்றிய
உரை

இன்று காலையிலிருந்து மிகச் சிறப்பாக, செம்மையாக, கட்டுப்பாடாக, ஆர்வத்தோடு நடைபெற்று வருகின்ற இந்தக் கருத்தரங்கத்தில் உங்கள் பலருடைய நல்ல கருத்துக்கள் எல்லாம் இடம் பெற்று, சில கருத்துக்கள் கோரிக்கை உருவம்பெற்று சில கருத்துக்கள் அரசினுடைய திட்டங்களாக உருப்பெற வேண்டும் என்கின்ற விருப்பத்தையும் பெற்று, அவைகளையெல்லாம் உடனடியாக இங்கே தீர்வு செய்கிற நிலைமை இல்லாமல் இன்னும் நான்கைந்து நாட்களில் தமிழக வரவு செலவு திட்டத்தை பேரவையிலே வைக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது என்பதை நீங்கள் அனைவரும் நன்கறிவீர்கள். அதனால் உள்ளாட்சித்துறை அமைச்சர் உங்களுடைய கோரிக்கைகளையெல்லாம் கேட்டுக் கொண்டிருக்கிறார். துறையைச் சார்ந்தவர்களும் நம்முடைய கோரிக்கைளை யெல்லாம் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். முதலமைச்சர் வந்தவுடன் அவைகளையெல்லாம் இங்கேயே நிறைவேற்றித் தருவார் என்று எண்ணி ஏமாற வேண்டாம் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.


ஏனென்றால் நான் இங்கே அவைகளை அறிவித்தால் நாளையதினம் கோட்டைக்குச் செல்ல முடியாது. அறிவித்ததை நிறைவேற்ற அங்கே போக முடியாது. பிறகு அறிவித்து என்ன பயன்? பட்ஜெட் வெளியாகின்ற நேரத்தில், பட்ஜெட் ரகசியங்களை வெளியிடக் கூடாது என்றிருக்கிறது. பட்ஜெட்டிலே நாம் வகுத்திருக்கின்ற திட்டங்களை வெளியிடக் கூடாது. என்னென்ன பொருட்களுக்கு என்னென்ன வரி போடப் போகிறோம், போடப் போகிறோமா இல்லையா என்ற விவரங்களையெல்லாம் வெளியிடக் கூடாது. இப்படி ரகசியங்களை வெளியிடக் கூடாது என்ற ஒரு தகுதியைப்

பெற்றிருக்கின்ற காரணத்தால், பட்ஜெட் ரகசியத்தை எப்படியாவது வெளியிட்டு விட வேண்டுமென்று ஒவ்வொரு பாராளுமன்றத்திலும், ஒவ்வொரு சட்டமன்றத்திலும் அது நாடானாலும், மாநிலமானாலும் அங்குள்ள எதிர்க்கட்சிகள் எப்படியாவது பட்ஜெட்டை, அது பத்து மணிக்கு வெளியாகிறது என்றால் 9 மணி அளவில் அந்த ரகசியத்தை வெளியிட்டு பத்திரிகைகளில் பிரசுரிக்கச் செய்து, அந்த அரசின் மீது நம்பிக்கையில்லா தீர்மானத்தைக் கொண்டு வர வேண்டுமென்று எண்ணுவார்கள். நீங்கள் எல்லாம் நல்லவர்கள். நீங்கள் எல்லாம் நேர்மையானவர்கள். நீங்கள் எல்லாம் ரகசியத்தைக் காப்பாற்றக் கூடியவர்கள். நான் அறியாதவன் அல்ல. இருந்தாலுங்கூட ஒருவருக்குத் தெரிந்தால் தான் ரகசியம். நான் சொல்லி உங்களுக்குத் தெரிந்தாலே அது ரகசியம் அல்ல. உங்களுக்குத் தெரிந்ததை மற்றவர்களுக்குச் சொல்ல வேண்டுமென்று நீங்கள் ஆசைப்படுவது தவறல்ல. அப்படி ஆசைப்படுவதால் நாம் எந்தவொரு கோரிக்கை நிறைவேற வேண்டும், எந்தவொரு திட்டம் இந்த மாநிலத்தில் நிறைவேற வேண்டுமென்று கருதுகிறோமோ, அதற்கு இடம் இல்லாமலே போய் விடும். எனவே தான் நான் இங்கே படித்துப் பார்த்தேன். இங்கே வழங்கப்பட்டுள்ள கோரிக்கைகள், எடுத்துச் சொல்லப்பட்ட கோரிக்கைகள், நல்ல யோசனைகள், நல்ல திட்டங்கள் இவைகளையெல்லாம் நிறைவேற்ற வேண்டுமென்று அழுத்தமாக உங்களால் கூறப்பட்ட எண்ணங்கள் இவைகள் எல்லாம் எழுத்து வடிவங்களாக என்னிடத்திலே நான் வந்ததும் தரப்பட்டது.

அவைகளையெல்லாம் படித்துப் பார்த்த போது, இவைகளில் ஒன்றிரண்டு அல்லது இரண்டு மூன்று சந்தேகத்திற்குரியதாக இருந்தாலும்கூட உங்களுடைய ஆசையை நிராசையாக ஆக்கக் கூடாது, உள்ளாட்சி மன்றங்கள் அது மாநகராட்சி மன்றமானாலும், நகராட்சி மன்றமானாலும், ஒன்றியமானாலும், அல்லது ஊராட்சி மன்றமானாலும், அங்கே இருக்கின்றவர்கள் எல்லாம் அந்த ஒவ்வொரு பகுதிக்கும் ஆட்சி செலுத்துகின்றவர்கள் தான். அதனால் தான் அதற்குப் பெயர் வைக்கும்போதே பஞ்சாயத்து என்று இருந்தாலும், ஒன்றியம் என்று இருந்தாலும் அதோடு "ஆட்சி" என்ற சொல்லை சேர்த்து வைத்திருக்கிறோம். ஆகவே உங்களுக்கும் எனக்கும் பெரிய வித்தியாசம் அல்ல. என் கையிலே இருப்பதும் ஆட்சி தான், உங்கள் கையிலே இருப்பதும் ஆட்சி தான்.

ஆகவே இந்தச் சம நிலை இங்கே நான் பேசுகின்ற நேரத்தில் மாத்திரமல்ல. எப்பொழுதும் இருக்க வேண்டும். இந்தச் சமநிலை, சம உள்ளம் என்ற அளவிலே இருக்க வேண்டும், இதற்கேன் "உள்ளாட்சி" என்று பெயர் வைத்திருக்கிறோம்? இது ஒரு மாநிலத்திற்குள்ளே அல்லது மாவட்டத்திற்குள்ளே இருக்கின்ற கிராமங்களில் நடைபெறுகின்ற ஆட்சி, வட்டங்களில் நடைபெறுகின்ற ஆட்சி, ஒன்றியங்களில் நடைபெறுகின்ற ஆட்சி நகரங்களில் நடைபெறுகின்ற ஆட்சி, மாநகரங்களில் நடைபெறுகின்ற ஆட்சி என்பதால் இதற்கு உள்ளாட்சி என்று பெயர் அல்ல, நம்முடைய உள்ளங்களால் நடத்தப்படுகின்ற ஆட்சி. அதனால்தான் இதற்கு உள்ளாட்சி என்று பெயர் என்பதை தயவு செய்து நீங்கள் மறந்து விடக் கூடாது. ஏனென்றால் நல்ல உள்ளம் இருந்தால் தான் நல்ல ஆட்சியை நடத்த முடியும். மக்களுக்காக நாம் பாடுபட வேண்டும். நாம் ஏற்றுக் கொண்டிருக்கின்ற பணியை நமக்காக அல்ல, மக்களுக்காக நிறைவேற்ற வேண்டும் என்கின்ற அந்த எண்ணம் வரவேண்டும். அதனால் தான் உள்ளத்திலிருந்து நல்ல எண்ணங்கள் வெளிப்பட்டு, அந்த எண்ணங்கள் மலர்ந்து, அந்த மலர்ச்சி நமது ஆட்சியாக மாறி, ஒவ்வொரு ஊருக்கும் அந்த ஆட்சியின் மூலமாக கிடைக்கின்ற நன்மைகள், நகரங்களுக்குக் கிடைக்கின்ற நன்மைகள், தெருவுக்குத் தெரு கிடைக்கின்ற நன்மைகள், வீட்டிற்கு வீடு கிடைக்கின்ற நன்மைகள் – இந்த நன்மைகள் தான் அடிப்படை ஒரு மாநிலத்தினுடைய அரசு கிராமங்களை நேரடியாக கவனிக்க முடியாது. ஆனால் நேரடியாக கவனிப்பதற்கேற்ற இணைப்புகளை வைத்துக் கொண்டிருக்க முடியும். அந்த இணைப்பு தான். அதிலே ஒரு பெரிய இணைப்பாக இருப்பதுதான் உள்ளாட்சித்துறை. அந்த இலாகா. அதனுடைய அமைச்சர். அடுத்தடுத்து இருக்கின்ற கிளை அமைப்புகள் தான் நீங்கள். அந்தக் கிளை அமைப்புகளின் தேவைகளை, அவர்களுடைய உணர்வுகளை ஒன்றுபடுத்தி அவைகளை நிறைவு செய்கின்ற அந்தப் பணியை ஒரு முதலமைச்சராக இருக்கின்ற நான் அல்லது உள்ளாட்சித்துறை அமைச்சர் பொறுப்பிலோ அல்லது நிதித்துறை பொறுப்பிலோ அல்லது கல்வித்துறை பொறுப்பிலோ அல்லது வேறு எந்தத் துறை பொறுப்பிலோ இருக்கின்ற அமைச்சர்கள் அவற்றை நேரடியாகக் கவனிக்க முடியாது என்பதால்தான் பல கிளைகள், பல விழுதுகள், ஸ்டாலின் குறிப்பிட்டதைப் போல் பல வேர்கள் தேவைப்படுகிறது. ஒரு ஆலமரத்திற்கு தேவைப்படுவதைப் போல. வேர் தன்னுடைய பணியை ஆற்றுகிறது, கிளை தன்னுடைய கடமையைச் செய்கிறது, அப்படி வேரும் கிளையும் கடமையை ஆற்ற, பணியை ஆற்ற மரம் செழிக்கிறது, மரம் செழிக்க செழிக்கத் தழைக்கிறது. தழைக்க தழைக்க காய்கனிகள் கிடைக்கிறது. கிடைக்க கிடைக்க பயிரிட்டவர்களுக்கு பயன் விளைகிறது. அந்த பயன் விளைவிக்கின்ற காரியத்தை நாம் சாதரணமாக நினைக்கக் கூடாது.

ஆகவே இன்றைக்கு தமிழகத்திலே நடந்து முடிந்திருக்கின்ற தேர்தலில் ஏறத்தாழ ஒரு இலட்சத்து முப்பதாயிரத்திற்கு மேற்பட்டவர்கள் பல பொறுப்புகளில்




தேர்வு செய்யப்பட்டு அமர்ந்திருக்கிறீர்கள். உங்கள் அத்தனை பேரையும் அழைக்க முடியாத காரணத்தால் அல்ல, அழைத்தால் இங்கே இடம் இல்லாத காரணத்தால் இப்போது இடம் இல்லாவிட்டால் விரைவில் வேறு ஊரிலாவது இடத்தைத் தயார் செய்து உங்கள் அனைவரையும் ஒருசேர பார்க்க வேண்டுமென்ற ஆசை எனக்கு இருக்கின்றது. அது நிச்சயமாக நிறைவேறும். ஏனென்றால் வேர்கள் கோபித்துக் கொண்டால் பிறகு அடி மரம் நிலைக்காது. ஆகவே வேர்களின் கோபத்திற்கு நீங்களும் சரி, நானும் சரி ஆளாகாமல் அவர்களுடைய ஆசையையும் விரைவிலே நிச்சயமாக பூர்த்தி செய்வோம்.

நீங்கள் கொடுத்திருக்கின்ற கோரிக்கைகளை யெல்லாம் நிறைவேற்றுவதற்கு கால தாமதம் ஆனாலும், உங்களையெல்லாம் விரைவில் ஒரு சேரப் பார்க்கின்ற அந்த இனிமையானக் காட்சியை நான் காணுவேன் என்பதை எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒரு ஊரில் – ஒரு நகரில் இது போன்ற மக்கள் தேர்ந்தெடுக்கின்ற பிரதிநிதிகள் பொறுப்பேற்கின்ற அமைப்புக்கள், ஆட்சிகள் உருவாவதற்கு குடியாட்சி முறையிலே தான் நிரம்ப இடம் இருக்கிறது. ஆனால் நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரையில் அண்ணா அவர்களும், நாங்களும் நீண்ட நாட்களாக எடுத்துக்காட்டி வருவதைப் போல முடியாட்சி இருந்த காலத்திலேயே இந்த சின்னஞ்சிறு கிராமங்களிலே குறுநில மன்னர்களுடைய ஆட்சி, அந்த குறுநில மன்னர்களுக்குக் கீழேயுள்ள குக்கிராமங்களிலே உள்ள இந்த ஊராட்சிகள் அப்போதே இருந்திருக்கின்றது. அந்த மக்களாட்சியை ஆங்காங்கு நிறுவுவதற்கு மக்களே வாக்களித்தார்கள். அப்படி மக்களே வாக்களித்தார்கள் என்பதை நம்முடைய சங்க இலக்கியங்கள் எடுத்துக்காட்டிக் கொண்டிருக்கின்றன. சங்க இலக்கியத்தில் – பலரும் சொல்லியிருப்பார் – கேட்டிருப்பீர்கள் – இருந்தாலும் நினைவுபடுத்திக் கொள்வதற்காகச் சொல்கிறேன். ஒரு புலவன் போர்க்களத்தில், போர் முடிந்த பிறகு, நடைபெற்ற கொடுமைகளைப் பார்த்துக் கொண்டே போய்க் கொண்டிருக்கிறான். புலவன் என்ற காரணத்தால் போருக்குச் செல்லவில்லை, போர் முடிந்த பிறகு தான் செல்கிறான். புலவர்களே அப்படித்தான் இருப்பார்கள். புலவர்கள் கோபித்துக் கொள்ளக் கூடாது. புலவர்கள் போர் நடப்பதைப் பற்றிச் சொல்வார்கள், போர் முடிந்த பிறகு நடந்ததைப் பற்றிச் சொல்வார்கள்.

அப்படியொரு புலவன் பாடுகிறான். அவன் காணுகின்ற போர்க்களத்தில் ஒரு கழுகு ஒரு போர் வீரனின் பிணத்தை வயிற்றைக் கிழித்து உள்ளே இருக்கின்ற குடலை சாப்பிடுகிறது. அதை புலவன் காணுகிறான். கவிதை தோன்றுகிறது. அந்தக் கழுகு வயிற்றைக் கிழித்து குடலை எடுத்துச் சாப்பிடுவது எப்படி இருக்கிறது என்றால், நம்முடைய "குடவோலை" முறையில் ஓலைகளை – வாக்கு சீட்டுக்களாகப் பயன்படுத்தி யாரை அந்த ஊரின் தலைவராகத் தேர்ந்தெடுக்கவேண்டும் என்ற கேள்விக்குப் பதில் எழுதி, அந்த ஓலைச் சுருள்களில் அவர்களுடைய

பெயர்களை எழுதி, குடத்திலே போட்டு விடுவார்கள். அந்தக் குடத்திலே இருக்கின்ற அந்த ஒலைகளை ஒருவர் எடுத்து ஊர் பெருந்தலைர்களிடம் கொடுப்பார். அதைப் பார்த்து இன்னாருடைய பெயர் வந்திருக்கிறது என்று அவர்கள் பெயர்களைப் படிப்பார்கள். அது போல, அப்படி அந்தக் குடத்திலேயிருந்து, அந்த ஒலைகளை உருவி உருவி எடுப்பதைப் போல அந்தக் கழுகு, போர்வீரன் வயிற்றிலிருந்து அவனுடைய குடலை உருவி உருவி எடுக்கின்றது என்று சொல்கிறான். குடலை உருவுகின்ற அந்தக் கோரக் காட்சியைக் கூட தமிழ்நாட்டிலே அன்றைக்கு இருந்த ஒரு கலாச்சாரப் பண்பாட்டோடு இணைத்த பெருமை தமிழ்ப் புலவனுக்கு உண்டு. அதை விட பெருமை அந்தக் காலத்திலேயே குடவோலை முறை மூலம் வாக்களிக்கின்ற முறை மூலம் பொறுப்புக்கு வர வேண்டியவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என்ற உன்னதமான நிலை இருந்தது என்பதற்கு இந்தப் புலவருடைய பாட்டு சான்றாகும் என்பதற்காக இதைச் சொன்னேன்.

இப்படி ஒரு பழம்பெருமை வாய்ந்தது நம்முடைய வரலாறு. நேற்றைக்குக் கூட நான் ஒரு நிகழ்ச்சிக்குச் சென்றேன். செல்லுகின்ற வழியில் உத்திரமேரூரைப் பார்த்தேன். என்னோடு வந்த நண்பர்கள் இதோ இந்த இடம் தான், இந்தக் கோவில்தான் என்றார்கள். என்ன வென்று கேட்டேன். அந்தக் கோவிலில் தான் குடவோலை முறை மூலமாக ஊர்த் தலைவரை, அல்லது பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கும் முறை இருந்ததை எழுதி வைத்திருக்கின்ற கல்வெட்டுகள் இங்கேதான் உள்ளன. இது பராந்தகச் சோழன் காலத்திலே நடைபெற்ற செயல். அதை கல்வெட்டாக ஆக்கியிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். பராந்தகச் சோழன் இருந்த காலம் எந்தக் காலம்? அந்தக் காலத்திலேயே தமிழகம் இந்த முறையைப் பின்பற்றியிருக்கிறது என்றால் உலகத்திலே இந்த ஒட்டு முறையை, வாக்களிக்கும் முறையை, அதன் மூலமாக தங்கள் ஊர்களுக்கு ஆட்சித் தலைவர்களைத் தேர்ந்தெடுக்கும் முறையை உலகத்திற்கே கற்றுக் கொடுத்த நாடு தமிழ்நாடு. தமிழர்கள் இலக்கியம் தமிழர்களுடைய வரலாறு, தமிழர்களுடைய பண்பாடு. அப்படிப்பட்ட அந்தப் பண்பாட்டை விளக்குகின்ற அந்த பாடலில் யாரை தேர்வு செய்ய வேண்டும் என்ற விதிமுறைகளும் இருக்கின்றன.

எப்படிப்பட்டவராக தேர்வு செய்யப்படுபவர்கள் இருக்க வேண்டும் என்ற விதிமுறைகளும் எழுதப்பட்டிருக்கின்றன. அவைகளையெல்லாம் நான் ஏற்கெனவே சில புத்தகங்களில் படித்திருக்கிறேன். ஒழுக்கம் உள்ளவனாக இருக்க வேண்டும், நாணயமுள்ளவனாக இருக்க வேண்டும், பிறர் பொருளை திருடுபவர்களாக இருக்கக் கூடாது. ஊராருக்காக ஒதுக்கப்பட்ட திரவியத்தை அபகரித்துக் கொள்பவராக இருக்கக் கூடாது. இப்படி அவ்வளவு இலக்கணங்களும், இவ்வளவு நற்செயலும் கொண்டவர்களாக இருந்தால், அவனைத் தான் தேர்ந்தெடுக்க வேண்டும். அப்படி இல்லாவிட்டால், அப்படி தேர்ந்தெடுக்கப்பட்டவரின் தேர்தல் செல்லாது என்கிற அளவிற்கு இந்தக் குடவோலை முறைத் தேர்வு அந்தக் காலத்திலே நடைபெற்றிருக்கின்றது.

இது குடவோலை முறைக்கு மாத்திரமல்ல. இப்போதும் கூட அதைத்தான் நாம் மனதிலே புதிய வைத்துக்கொள்ள வேண்டும். நாம் தேர்ந்தெடுக்கப் படுகிறோமோ இல்லையோ, நாம் யாரைத் தேர்ந்தெடுக் கிறோமோ, அவர்கள் எப்படிப்பட்டவர்களாக இருக்க வேண்டும் என்பதை எண்ணிப் பார்த்து, அதற்கேற்ப நாட்டை ஆளுகிறவர்களானாலும் சரி, அல்லது ஊரை ஆளுகிறவர்களானாலும் சரி, ஒரு கிராமத்தை, ஒரு தெருவை ஆளுகின்றவர்களானாலும் சரி அந்தத் தலைவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அப்படித் தேர்வு செய்யப்பட்டால் தான் நாம் விரும்புகின்ற நல்லொழுக்கத்தை, நாணயத்தை அந்த ஊருக்குச் செய்ய வேண்டிய நன்மைகளைச் செய்ய முடியும். இந்த ஊரை சீர்படுத்த வேண்டுமென்று மன்னிக்க வேண்டும், பொறுப்புக்கு வந்திருக்கின்றவர்கள், தலைவர்களாக வந்திருக்கின்றவர்கள் – மன்னிக்க வேண்டும் – நாங்களும் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கின்றவர்கள் தான், அதனால் நான் சொல்வது, எனக்கும் பொருந்தும் என்னுடைய அமைச்சர்களுக்கும் பொருந்தும், உங்களுக்கும் பொருந்தும் என்பதால் சொல்கிறேன்.

நிதி தேவை என்று கேட்கிறீர்கள், சரி. நாங்கள் நிதியைத் தருகிறோம் சரி. பெறுகிறீர்கள் சரி, நீங்கள் பெறுகின்ற நிதி மக்களுக்கு ஒவ்வொரு ஊருக்கும் சென்று நாங்கள் செலவழிக்க முடியாத காரணத்தால், நீங்கள் செலவழிக்க போகிறீர்கள் என்று நாங்கள் நம்புகிறோம் சரி, அந்த நம்பிக்கை நிலைக்க வேண்டுமா, வேண்டாமா? அது சரியாக இருக்க வேண்டுமா? வேண்டாமா? இதை நீங்கள்தான் சொல்ல வேண்டும். நீங்கள் தான் அந்தத் தீர்ப்பை அளிக்க வேண்டும்.

அது எனக்கும் பொருந்தும் என்று சொன்னேன், எனக்கும் பொருந்தும், ஸ்டாலினுக்கும் பொருந்தும், என் எதிரே அமர்ந்திருக்கின்ற அமைச்சர்களுக்கும் பொருந்தும், அத்தனை பேருக்கும் பொருந்தும். எனவே முதலில் உள்ளாட்சியில் ஆனாலும் சரி, அல்லது உலக ஆட்சியிலே வேண்டுமானாலும் சரி, வந்து அமருகிறவர்கள், உள்ளத் தூய்மை உள்ளவர்களாக இருக்க வேண்டும். அந்தத் தூய்மையை நாம் உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

அப்படிப்பட்ட தூய்மையாளர்களால் பொறுப்புக்கு வந்தவர்களால் நாடு வாழ முடியும், நகரங்கள் வாழ முடியும், ஊர்கள் வாழ முடியும். அந்த ஊர்களிலே உள்ள சாதாரண குடிமக்களை வாழ வைக்க முடியும். அப்படி வாழ வைக்கின்ற அந்தப் பணியைத் தான் கீழேயிருந்து மேல் வரை தொடருவதற்காகத் தான் ஊராட்சிகள், நகராட்சிகள் என்று பல பகுதிகளாகப் பிரித்து இந்த நாட்டை ஆளுகின்ற இலக்கணம் வகுக்கப்பட்டிருக்கின்றது.

நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரை பெருந்தலைர் காமராஜர் காலத்தில் இரண்டு அடுக்கு முறைதான் இருந்தது, அது சுலபமாகக் கூட இருந்தது. ஆனால் இப்போது பஞ்சாயத்து ராஜ் சட்டம் வந்த பிறகு, அதிலே சில மாற்றங்கள் ஏற்பட்டு, அப்போது இருந்த தி.மு.க. ஆட்சி கூட, அந்தப் பஞ்சாயத்து ராஜ் சட்டத்தை அப்படியே நிறைவேற்ற வேண்டாம், பெருந்தலைவர் காமராஜர் காலத்திலே இருந்த அந்த வழிமுறைப்படி ஈரடுக்குத் தான் இருக்க வேண்டும், மூன்று அடுக்குத் தேவையில்லை என்று கூடச் சொன்னோம். ஆனால் அது ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இப்போது மூன்றடுக்குத் தான் இருக்கிறது. நம்முடைய குறட்பா கூட ஈரடுக்கு தான். குறட்பாவாகத் தான் கிராம ஊராட்சிகள், உள்ளாட்சிகள் இருந்திட வேண்டும். அப்படிப்பட்ட ஒரு நிலைமை ஏற்படுவதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டும். முயற்சிப்போம், அதைப்பற்றிச் சிந்திப்போம் என்றுதான் இந்த நேரத்திலே சொல்ல முடியும். செயல்படுத்தி விட்டோம் என்று கூற முடியாது. காரணம், தொடக்கத்திலேயே சொல்லியிருக்கிறேன், எனவே இன்னும் நாம் நிறைவேற்ற இருக்கின்ற திட்டங்களுக்கு, நாம் வகுக்கவிருக்கின்ற பல செயல்களுக்கு நம்மை நாம் தயார்படுத்திக் கொள்வோம், மக்களையும் தயார்படுத்துவோம் என்று கூறி நீங்கள் இன்று காலையிலேயிருந்து வழங்கியுள்ள அருமையான கருத்துக்களை நம்முடைய அமைச்சர் அவர்களும், மற்றும் அதிகாரப் பெருமக்களும் ஏற்று, அவைகளைப் பற்றியெல்லாம் சிந்தித்து, நீங்களும் தொடர்ந்து உங்களுடைய ஆலோசனைகளைச் சொல்லி – இதிலே கட்சிகளுக்கு இடம் இல்லை, கட்சி வேறுபாடுகளுக்கு இடம் இல்லை – எல்லோரும் உள்ளாட்சி மன்றத் தலைவர்கள்தான் – எல்லோரும் நகர் மன்றத் தலைவர்கள்தான் – எல்லோரும் மேயர்கள்தான் – இவர் தி.மு.க. மேயர், அவர் அ.தி.மு.க மேயர், இவர் காங்கிரஸ் மேயர் என்றெல்லாம் வித்தியாசம் கிடையாது. எல்லோரும் ஊருக்கு உழைப்பவர்கள் என்ற முறையில் ஒன்றுபட்டு செயலாற்றுவோம், வாரீர், வாரீர் என்று அழைத்து விடைபெறுகிறேன்.

# சர்.பிட்டி. தியாகராயர்


## திராவிட இயக்கத்துக்கு புத்துயிர் அளித்த பூமான்



சர். தியாகராயர் தோன்றித் திராவிடப் பெருங்குடி மக்களுக்குத் தலைமை பூண்டு, அவர்களின் தன்னுணர்விற்கு விழிகோலி, அவர்களின் வாழ்வில் இருந்து வந்த அடிமைத்தனத்தை அகற்றப் பாடுபட்டுச் சமுதாயத்துறை, பொருளாதாரத்துறை, அரசியல்துறை ஆகியவற்றில் நல்லிடம் பெற்றிட உழைத்தார். நம்முடைய அடிப்படைக் கட்டடம் பலமாக இருக்க வேண்டும் என்றும் அவர் அல்லும் பகலும் பாடுபட்டார். இன்று நாம் வளர்சி பெற்றிருப்பதற்கு மூலகாரணம் யார்? நம் தியாகராயர்! திராவிட இயக்கத்துக்குப் புத்துயிர் அளித்த பூமான் அவர்! வாடிய பயிருக்கு வந்த மழைத்துளி! "நாமிருக்கும் நாடு நமதென்று அறிய வேண்டும். இங்கு நாம் அடிமைகளாக வாழ்வது அடாது" என்பதை அவர் உணர்ந்தார். நமது பண்டை பெருமைகளையும் அவரால் உணர முடிந்தது. வாடிய பயிருக்கு வந்த மழைத்துளிபோல, அலுத்த உடல்மீது வீசிய இனிய தென்றல் போல, கொல்லும் காசத்தைக் கருவறுக்கும் மருந்துபோல அன்று தேய்ந்து வந்த திராவிடருக்கு ஆறுதல் அளித்து, அவர்களின் புத்துயிர்களுக்குக் காரணமாகக் காட்சி தந்தார் நம் வீரர் தியாகராயர். அன்று தியாகராயர் திராவிடப் பெருங்குடி மக்கள் முன்னேற வேண்டுமென்று பாடுபட்டதன் பலனை இன்று காண்கிறோம்.

தியாகராயர் தம்முடைய சமூகத் தொண்டைத்தான் ஒரு பொருட்டாக மதித்தார். திராவிடச் சமூகத்தில் ஒரு பெரிய விழிப்புணர்சியை உண்டாக்கினார். அரசியலிலே நம்மவர்கள் முதலிடம் பெற வேண்டுமென்று அவர் விரும்பினார். தியாகராயர் போக போக்கியத்தை விட்டுத் தாமாகவே கல்லும் முள்ளும் காட்டாறும் நிரம்பிய பாதை வழியே செல்லத் தொடங்கினார். அவர் களத்திலே தூவிய விதை நன்றாக வளர்ந்திருக்கிறது. அவர் அன்று பறக்கவிட்ட சமுதாயப் புரட்சிக் கொடியின்கீழ் நின்றுதான் நாம் இன்று பணியாற்றி வருகிறோம்.

(1950, சூன் திங்கள் 30,
சென்னை, திருவல்லிக்கேணியில்
தியாகராயர் நினைவு நாள் கூட்டத்தில்
பேரறிஞர் அண்ணா ஆற்றிய உரையிலிருந்து)




# தமிழ்நாட்டில் உற்பத்தித் துறை வளர்ந்து வருகிறது

தமிழ்நாட்டில் பி.எம்.டபிள்யூ.வின் கவுரவம் மிக்க கார் தொழிற்சாலையை தொடங்கி வைப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்தியப் பொருளாதாரம் அதிவேகமாக வளர்ந்து வருகிறது என்பதையும், இந்த வளர்ச்சியில் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது என்பதையும் நீங்கள் அறிவீர்கள்.

மறைமலை நகரில் பி.எம்.டபிள்யு. கார் தொழிற்சாலையை தொடங்கி வைத்து மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் **மு.கருணாநிதி** அவர்கள் ஆற்றிய உரை (29.3.2007)

தமிழ்நாட்டில் உற்பத்தித்துறை வளர்ந்து வருகிறது. கடந்த காலாண்டில் இந்த வளர்ச்சி ஏறத்தாழ 14 சதவிகிதமாக இருந்தது. சென்னை அயல் நாட்டு நேரடி முதலீடுகளை மிகப் பெருமளவில் பெற்று வருகிறது. இவை அனைத்தும் தமிழக அரசின் தீர்மானமான, செயல் துடிப்புமிக்க கொள்கை களால் சாத்தியமாகிறது.




**புதிய தொழில் கொள்கை**

விரைவான தொழில் வளர்ச்சி அடைவதற்கு கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதில் நாங்கள் மிகவும் கவனம் செலுத்தி வருகிறோம். மாநில அரசு சென்னை விமான நிலைய விரிவாக்கப் பணிகளில் ஈடுபட்டுள்ளது.

இரண்டாவது க்ன்டெய்னர் டெர்மினல் ஒன்றை அமைப்பதில் சென்னை துறைமுகக் கழகம் ஈடுபட்டுள்ளது. மின்சாரத் துறையில், தேவையைப் பூர்த்தி செய்யும் அளவிற்கு உற்பத்தியை தமிழ்நாடு செய்து வருகிறது. வளர்ச்சியை தக்க வைக்கும் முயற்சியாக, தொழில் வளர்ச்சிக்கான சிறப்புக்குழு ஒன்றை அமைத்து அரசுக்கும் தொழிலுக்கும் இடையில் கருத்துப் பரிவர்த்தனை செய்யப்பட்டு வருகிறது. கடந்த மார்ச் 12ஆம் தேதியன்று நடைபெற்ற இந்தக் குழுவின் முதல் கூட்டத்தில் அதன் உறுப்பினர்களிடமிருந்து மதிப்பு வாய்ந்த ஆலோசனைகளை நாங்கள் பெற்றுள்ளோம் என்பதை தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த ஆலோசனைகளில் சிலவற்றை அமல்படுத்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. மேலும் விரைவில் ஒரு புதிய தொழில் கொள்கை அறிவிக்கப்படவுள்ளது.

**“தமிழ்நாட்டில் உற்பத்தித்துறை வளர்ந்து வருகிறது. கடந்த காலாண்டில் இந்த வளர்ச்சி ஏறத்தாழ 14 சதவிகிதமாக இருந்தது. சென்னை அயல்நாட்டு நேரடி முதலீடுகளை மிகப் பெருமளவில் பெற்று வருகிறது. இவை அனைத்தும் தமிழக அரசின் தீர்மானமான, செயல் துடிப்புமிக்க கொள்கைகளால் சாத்தியமாகிறது”.**

மோட்டார் தொழிற்சாலைகளுக்கு போட்டிக்குச் சாதகமான பல்வேறு அனுகூலங்களை வழங்குவதில் மோட்டார் வாகனத்துறையில் சென்னைப் பகுதி பாரம்பரியமாக வலுவான நிலையில் உள்ளது. நன்கு நிறுவப்பட்ட மோட்டார் உதிரிபாகங்கள் உற்பத்தி தளம், திறமைமிக்க தொழிலாளர்கள் பெருமளவில் கிடைத்தல், மோட்டார் மற்றும் உற்பத்தி பொறியியல் தேர்ச்சி, போட்டிகரமான கூலி விகிதங்கள், நவீன கன்டெய்னர் துறைமுகம், முதலீட்டாளர்களுக்கு தீர்மானகரமான ஒற்றைச் சாரளம், கவர்ச்சிகரமான ஊக்க சலுகைகள் மற்றும் அரசு விரைந்து நடவடிக்கை எடுத்தல் ஆகியவை எங்களது வலிமைகளில் சிலவாகும்.

**இந்தியாவின் டெட்ராய்ட்**

சென்னை “இந்தியாவின் டெட்ராய்ட்'' என்று அழைக்கப்படுகிறது. ஃபோர்டு, யுண்டாய், மிட்சுபிஷி, அசோக்லேலண்ட் மற்றும் டி.வி.எஸ். மோட்டார்ஸ் தவிர, பெரிய பல மோட்டார் மற்றும் மோட்டார் உதிரிபாகங்கள் உற்பத்தி நிறுவனங்கள் தமிழ்நாட்டில் அவற்றின் உற்பத்தி தளங்களைக் கொண்டுள்ளன. மிகப்பெரிய ஒருங்கிணைந்த மோட்டார் தொழிற்சாலைகளை ஊக்குவிக்கும் வகையில், அரசு சமீபத்தில் மிகப்பெரிய ஒருங்கிணைந்த மோட்டார் தொழிற்சாலைகள்




கொள்கையை அறிவித்துள்ளது. இந்தக் கொள்கையால் மேலும் பெரும் முதலீடுகளை ஈர்க்க முடியும் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம்.

அரசின் கொள்கை நடவடிக்கைகளைபடுத்து, பல்வேறு மோட்டார் தொழிற் திட்டங்கள் வந்து கொண்டிருக்கின்றன. ரூ.4,000 கோடி தொடக்க முதலீட்டுடன் சிப்காட் ஒரகடம் தொழில் பூங்காவில் ஒருங்கிணைந்த மோட்டார் தொழிற்சாலை ஒன்றை அமைக்க மகிந்தரா – ரெனால்ட் நிசான் ஒருங்கிணைந்த நிறுவனம் அரசுடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. ரூ.520 கோடி முதலீட்டுடன் அப்போலோ டயர்ஸ் நிறுவனம் ரேடியல் டயர் உற்பத்தி தொழிற்சாலையை நிறுவி வருகிறது. கெபாரோ குரூப் ரூ.750 கோடி முதலீட்டுடன் மோட்டார் உதிரிபாகங்கள் தொழிற்சாலையை அமைத்து வருகிறது. மத்திய அரசின் கனரகத் தொழில் அமைச்சகத்தின் கீழுள்ள NATRIP ஒரகடத்தில் உலகளாவிய மோட்டார் ஆராய்ச்சி மையம் மற்றும் சோதனை ஓடுகளம் ஆகியவற்றை அமைத்து வருகிறது.


கடந்த பத்து மாதங்களில், மொத்தம் ரூ.7,000 கோடி முதலீடும் , 96 ஆயிரம் பேருக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பும் வழங்கும் தொழிற்சாலைகளை தமிழ்நாட்டில் அமைக்க இந்திய மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுடன் அரசு எட்டு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளது.

**உதவிகளை அரசு அளிக்கும்**

தமிழ்நாட்டின் இந்த வெற்றிப்பாதையில் பி.எம்.டபிள்யூ.வும் பங்கேற்பது குறித்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். ஜெர்மனி நாட்டின் பி.எம்.டபிள்யூ. உலக அளவில் அதன் மிக உயர்ந்த தரங்களுக்கு பெயர் பெற்றது. பி.எம்.டபிள்யூ. இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனம் இங்கு ரூ.180 கோடி முதலீட்டுடன் ஆரம்பத்தில் ஆண்டுக்கு 1,700 கார்கள் உற்பத்தித் திறன் கொண்ட கார் இணைப்பு தொழிற்சாலையை நிறுவியுள்ளது. இந்த தொழிற்சாலைக்கு மாநில அரசு உதவிகளை அளித்துள்ளது.

இந்த தொழிற்சாலை பெரு வெற்றி பெறும் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். இங்கு பி.எம்.டபிள்யூ. வந்துள்ளது உலக மோட்டார் தொழில் வரைபடத்தில் தமிழ்நாட்டின் நிலைக்கு பெரும் உயர்வை அளிக்கும், பி.எம்.டபிள்யூ. நிருவாகத்தின் எதிர்கால முயற்சிகள் அனைத்திலும் வெற்றி கிட்ட வேண்டும் என்று விழைகிறேன்.

தேவையான அனைத்து உதவிகளையும், வசதிகளையும் அளிக்க தமிழ்நாடு அரசு தயாராக உள்ளது. பி.எம். டபிள்யூ கணிசமான விரிவாக்கத் திட்டங்களை அறிவித்து அதன் சென்னை தொழிற்சாலையை ஒரு ஒருங்கிணைந்த கார் உற்பத்தி தொழிற்சாலையாக மாற்றும் என்று நம்புகிறேன். ★



# புதுநெறி காட்டிய புரட்சிக் கவிஞர்

தமிழ்க் கவிதையுலகில் தனித்துவம் பெற்றவர் பாவேந்தர் பாரதிதாசன். இலக்கணம் பிறழா மரபுக் கவிதைகள் கோலோச்சிய 19ஆம் நூற்றாண்டில் பாரதிதாசன் பிறந்தார். 1891 ஆம் ஆண்டு ஏப்ரல் 29 அன்று புதுச்சேரியில் கனகசபை–இலக்குமி தம்பதியினருக்கு மகனாகப் பிறந்த இவருக்கு பெற்றோர்கள் இட்ட பெயர் சுப்புரத்தினம்.

இளம் வயதிலேயே பாடல் புனையும் ஆற்றல் பெற்ற இவர், தமிழ் இலக்கண இலக்கியங்களை கற்றுத்தேர்ந்து மாநிலத்திலேயே முதல் மாணவனாகத் தேர்வு பெற்றார். 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழ்க் கவிதைச் சூழலில் புதுமையைப் புகுத்திய சுப்ரமணிய பாரதியாரின் எளிய தமிழ் நடை சுப்புரத்தினத்தை ஈர்த்தது. அது முதல் பாரதிதாசன் என தனக்கு பெயர் சூட்டிக் கொண்டார். அவரைப் பின்பற்றியே பாரதிதாசன் கவிதைகளும் அமைந்திருந்தது. தெய்வப் பாடல்களையும், நாட்டு விடுதலைப் பாடல்களையும் எழுதி வந்த பாரதிதாசனின் பார்வை தந்தை பெரியாரைச் சந்தித்ததும் மாற்றமடைந்தது.

பெரியாரின் 'குடியரசு', 'பகுத்தறிவு' ஏடுகளில் சுயமரியாதைக் கருத்துக்கள் அடங்கிய பாடல்களையும் கட்டுரைகளையும் பாரதிதாசன் எழுதினார். குடும்பக் கட்டுப்பாடு குறித்து இந்தியாவிலேயே முதன் முதலில் பாடல் எழுதினார்.

காதலுக்கு வழிவைத்துக் கருப்பாதை சாத்தக்
கதவொன்று கண்டறிவோம். இதிலென்ன குற்றம்?

– என்பதே அந்தப் பாடல் வரிகள்.

தமிழின் இனிமை, மொழிவளம் பற்றி பல பாடல்களை பாரதிதாசன் எழுதியுள்ளார். தமிழே முதல் மாந்தன் பேசிய மொழி என்று பாவேந்தர் கூறுகிறார்.

ஆதிமனிதன் தமிழன்தான்
அவன் மொழிந்ததும் செந்தமிழ்த்தேன்
மூதறிஞர் ஒழுக்க நெறிகள்
முதலிற் கண்டதும் தமிழகந்தான்!
காதல் வாழ்வும் புகழ் வாழ்வும்
காட்டியதும் தமிழ்நான் மறைதான்
ஓதும் அந்தத் தமிழ்நான் மறை
உலகம் போற்றும் முத்தமிழ்தான்!

– என்பது பாவேந்தரின் பாடல்.

தமிழில் யாத்த பற்பல நூல்களும் மறைக்கப்பட்டு வேற்றுமொழி நூல் கருத்துகள் தமிழகத்தில் நுழைந்ததால் தமிழர் வாழ்விலும் தமிழிலும் அந்நியப் பண்பாடு ஊடுருவியது என்பது தமிழாய்ந்த அறிஞர் பலரின் கருத்தாகும். தழுவல் இலக்கியங்கள் தமிழின் தொன்மைப் பண்பாட்டை மறைத்தது கண்டு, தமிழின் சிறப்பாக

உலகம் போற்றும் பொதுமறையான திருக்குறளை உயர்த்திப் பாடினார் பாவேந்தர். வாழ்வியல் நூலான திருக்குறளை இயற்றிய திருவள்ளுவரைப் பற்றி,

வாழ வழி வகுத்தார் வள்ளுவனார் தமிழ்
மறை புகன்றார் நல்ல
முறை நவின்றார் நம்மனோர்
வாழ வழி வகுத்தார் வள்ளுவனார்.
– என்கின்றார்.

**யாத்திரை போகும் போது**

சீப்புக் கண்ணாடி ஆடை சிறுகத்தி கூந்தல் எண்ணெய்
சோப்புப் பாட்டரி விளக்குத் தூக்குக்கூஜா தாள் பென்சில்
தீப்பெட்டி கவிகை சால்வை செருப்புக் கோவணம் படுக்கை
காப்பிட்ட பெட்டி ரூபாய் கைக்கொள்க யாத்திரைக்கே.
– பாவேந்தர் பாரதிதாசன்

அழகியலைப் பாடாத கவிஞர் இல்லை. பாவேந்தரும் பல பாடல்கள் புனைந்துள்ளார். ஆனாலும் அவருக்கு மக்களின் துயரமே தம் கண் முன்னே நிற்கின்றது.

ஏடெடுத்தேன் கவி ஒன்று வரைந்திட
'என்னை எழு' தென்று சொன்னது வான்,

என்ற பாடலில் ஓடை, தாமரை, காடு, கழனி, கார்முகில், தென்றல், தோகை மயில், அன்னம், மாலைப்பொழுது என இயற்கை அழகு அத்தனையும் என்னை எழுது... என்னை எழுது என சொல்கிறதாம். ஆனால், பாவேந்தருக்கோ இவற்றையெல்லாம் விட மக்களே முன் நிற்கின்றனர்.

இன்னலிலே, தமிழ் நாட்டினிலேயுள்ள
என் தமிழ் மக்கள் துயின்றிருந்தார்.
அன்னதோர் காட்சி இரக்க முண்டாக்கியென்
ஆவியில் வந்து கலந்ததுவே !

– என்று எழுதுகிறார் பாவேந்தர். இயற்கையழகையெல்லாம் புறந்தள்ளிவிட்டு மக்கள் நலம் ஒன்றே அவரின் குறிக்கோளாய் அமைந்துள்ளது என்பதை இப்பாடல் மூலம் அறியமுடிகிறது.

சமூகக் கொடுமைகளை கண்டு கொதித்தெழுந்தவர் பாவேந்தர்.

பெண்–உரிமைக்குக் குரல் கொடுத்த பெரியாரின் கொள்கையில் திளைத்ததால் பெண் விடுதலைப் பாடல்கள் பலவும் எழுதியுள்ளார். குறிப்பாக அக்காலத்தில் நிலவிய கைம்பெண் துயரம் குறித்து பாரதிதாசன் எழுதியுள்ள பாடல்கள் பழமைச் சிந்தனையைக் குத்திக் கிழிக்கும் கூர்வாள் ஆகும்.

கைம்மை எனக்கூறி – அப்பெரும்
கையினிற் கூர்வேலால்
நம்மினப் பெண் குலத்தின் – இதய
நடுவிற் பாய்ச்சுகின்றோம்;
செம்மை நிலையறியோம் – பெண்களின்
சிந்தையை வாட்டுகின்றோம்;
இம்மை இன்பம் வேண்டல் – உயரின்
இயற்கை என்றறியோம்.

– என்று பாடி மனித வாழ்வில் இன்பம் என்னும் உணர்வு இயற்கையானது, அதற்குத் தடைபோட்டு பெண்ணினத்தை ஒடுக்கலாமா என கேள்வியெழுப்புகிறார்.

பொதுவுடைமை, பொது உரிமை, சமத்துவம், சகோதரத்துவம், தன்மானம், உலகப்பொதுமை, மடமை ஒழிப்பு, பகுத்தறிவு என பலவும் பாடிய பாவேந்தர் உயர்ந்த மனிதநேயர் ஆவார். அவர் தமிழ்த் தொண்டே தனது தலையாய தொண்டு என்கின்றார்.

நானோர் பாவேந் தன்என் பதனை
நானிலத் தமிழர் நன்றே அறிவர்

–என்று தன்னைப்பற்றி எழுதிய பாடலில் தாய்மொழித் தொண்டு தவறியதில்லை என தனது மொழிப்பற்றை உணர்த்துகிறார்.

மனித சமூகம் ஒன்றுபட்டு உயர்ந்தோங்கத் தேவையான பல்வேறு கருத்துக்களையும் எடுத்தியம்பி தனது படைப்புகள் மூலம் புதுநெறி காட்டியதால் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களைப் பின்பற்றி ஒரு கவிதைப் பரம்பரையே தோன்றியது. இப்பரம்பரைக் கவிஞர்களே இன்றும் தமிழ்க் கவிதையுலகில் கோலோச்சுகின்றனர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றி இருபதாம் நூற்றாண்டில் (1964 ஏப்ரல் 21) மறைந்த புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் படைப்புகள் தமிழுலகம் உள்ளவரை வாழும்; வருங்காலக் கவிஞர்களுக்கும் – வழிகாட்டும்.

– தி.பெரியார் சாக்ரடீசு

★ ★ ★




**புரட்சி வீரர்**

அநேக அரிய காரியங்களைச் செய்த ஒரு மாபெரும் பகுத்தறிவுவாதியும், ஆராய்ச்சி நிபுணரும், சீர்திருத்தப் புரட்சி வீரருமாவார் டாக்டர் அம்பேத்கர்.

டாக்டர் அம்பேத்கர் அவர்களுக்குச் சமமாக இந்தியாவில் யாரையும் சொல்ல முடியாது. நமது 'குடியரசு' ஏட்டில் என்னென்ன கருத்துகள் வருமோ, அவைகளை எல்லாம் அவர் பேசி இருக்கின்றார். நமக்கு ஏற்ற நண்பர் என்பதை எண்ணி அவரை நான் பாராட்டி வந்தேன்.

நமது குடியரசில் அவரைப் பற்றிப் பாராட்டி எழுதியதைப் பார்த்துத்தான் தாழ்த்தப்பட்டவர்களே அவரை உணர்ந்தார்கள்.

அம்பேத்கர் சிறப்பாக – தாழ்த்தப்பட்ட சமுதாயத்துக்குத் தலைவர் என்று சொல்லப்பட்டாலும், பகுத்தறிவுக்கு எடுத்துக்காட்டாக உள்ள ஒரு பேரறிஞராக விளங்கினார். எப்படிப்பட்டவரும் எடுத்துச் சொல்லப் பயப்படும்படியான – புரட்சிகரமான விஷயங்களை எல்லாம் வெகு சாதாரணத் தன்மையில் எடுத்துச் சொல்லும்படியான வீரராகவும் விளங்கினார்.

**– தந்தை பெரியார்.**

**அரசியலமைப்புச் சட்டத்தின் தந்தை**

"இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கியதில் டாக்டர் அம்பேத்கர் மிக முக்கியமான பங்கினை வகித்துள்ளார். அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்குவதில் அவரைவிட அதிக சிரத்தையும், அக்கறையும் எடுத்தவர் வேறு யாரும் கிடையாது"

**– பண்டித ஜவகர்லால் நேரு**

**போர்வீரன்**

"டாக்டர் அம்பேத்கர் அவர்கள் ஒரு போர் வீரனைப் போல் தம் வாழ்க்கையை அமைத்துக் கொண்டிருந்தார். மிகமிக ஒடுக்கியாளப்பட்டு வந்த மக்கள், தாங்கள் ஏன் அப்படி ஒடுக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதை எண்ணிப் பார்க்கவும் அச்சப்பட்ட காலத்தில், தாங்கள் ஒடுக்கப் படுவதற்கு யார் காரணம் என்பதைத் தட்டிக் கேட்கத் திராணியில்லாமல் இருந்த காலத்தில்... குனிந்து குனிந்து வாழ்ந்தவர்களை நிமிரச் செய்து... பேசாதவர்களைப் பேசவைத்துப் போராடச் செய்து வந்தார்.

**–பேரறிஞர் அண்ணா**



அண்ணல் அம்பேத்கர் அவர்களின் 117வது பிறந்தநாளையொட்டி, 14.4.2007 அன்று சென்னையில் அவரது திருவுருவச் சிலைக்கு மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் திரு.ஆற்காடு நா. வீராசாமி , மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின், மாண்புமிகு மத்திய அமைச்சர்கள் திரு.ஆ.ராசா மற்றும் திரு.எஸ்.ரகுபதி, மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி, மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் உ.மதிவாணன், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி. ஆ. தமிழரசி மாண்புமிகு சட்டப்பேரவை துணைத் தலைவர் வி.பி.துரைசாமி மற்றும் வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர் மா. சுப்பிரமணியன் ஆகியோர் மலரஞ்சலி செலுத்தினார்கள்.

# நாட்டார்மங்கலம், கீரிப்பட்டி மற்றும் பாப்பாபட்டி உள்ளாட்சித் தேர்தல்

# ஒரு வரலாற்று சாதனை



தமிழ்நாட்டில் உள்ளாட்சி அமைப்புகள் பழம்பெரும் வரலாற்றை உடையவை. காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள உத்திரமேரூர் கல்வெட்டுக் குறிப்புகளே இதற்குச் சான்றாகும்.

நாடு ஆங்கிலேயரின் பிடியிலிருந்து விடுதலையான பிறகு 1992ஆம் ஆண்டில் உள்ளாட்சி அமைப்பு முறையில் பல்வேறு மாற்றங்களை உள்ளடக்கி அரசியல் அமைப்புச் சட்டத்தில் 73ஆவது திருத்தச் சட்டம் இயற்றப்பட்டது. இதன் காரணமாக 22.04.1994 முதல் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 நடைமுறைக்கு வந்தது. இதன் மூலம் மூன்றடுக்கு உள்ளாட்சி கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இந்த உள்ளாட்சி அமைப்புகளுக்கான பதவிகள், சுழற்சி முறையில் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

மதுரை மாவட்டத்தில் உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள கீரிப்பட்டி ஊராட்சியிலும், செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள நாட்டார்மங்கலம் மற்றும் பாப்பாபட்டி ஊராட்சிகளிலும் ஊராட்சித் தலைவர் பதவி இடங்கள் ஆதிதிராவிடர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டதால் ஊராட்சித்தலைவர் மற்றும் வார்டு உறுப்பினர்களுக்கான பதவி இடங்களுக்கு தேர்தல்களின் வேட்புமனு தாக்கல் செய்யாமை/திரும்பப்பெற்றவை போன்ற காரணங்களினால் தேர்தல் நடத்தப்படாமல் மேற்கண்ட ஊராட்சிகளில் சிற்றூராட்சித் தலைவர் மற்றும் வார்டு உறுப்பினர்கள் பதவியிடங்கள் காலியாக இருந்தன. சமத்துவபுரம் தந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களின் அறிவுரையின்படி தேர்தலை மிகச் சிறப்பாக மதுரை மாவட்ட நிருவாகம் நடத்தி முடித்து ஒரு வரலாற்று சாதனையை நிகழ்த்தியது. செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் நாட்டார்மங்கலம் ஊராட்சி உள்ளது. இவ்வூர் மதுரையிலிருந்து உசிலம்பட்டி செல்லும் முதன்மைச்சாலையில் 28 கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது. இவ்வூராட்சியில் நாட்டார் மங்கலம், அய்யம்பட்டி, நாகலாபுரம், சக்கரைப்பட்டி ஆகிய சிறிய ஊர்கள் உள்ளன. இவ்வூராட்சியின் மக்கள் தொகை 2,271 ஆகும்.

அக்டோபர் 1996 இல் நடைபெற்ற ஊராட்சித் தேர்தலில் இவ்வூராட்சியின் தலைவர் பதவி ஆதிதிராவிடருக்கு ஒதுக்கப்பட்டது. மாவட்ட ஆட்சியரின் அறிவுரையினை ஏற்று, தேர்தல்களில் போட்டியிட்டு தலைவர் மற்றும் உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டு, இவ்வூராட்சி தொடர்ந்து ஐந்து ஆண்டுகள் பணியாற்றியது. அக்டோபர் 2001 ஊராட்சித் தலைவர் பதவி மீண்டும் 5 ஆண்டுகளுக்கு ஆதிதிராவிடர் களுக்கே ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்த நீட்டிப்பினை ஊரைச் சேர்ந்தவர்கள் எதிர்த்து முழுமையாகப் பங்கேற்க மறுத்தனர். கடந்த அக்டோபர் 2001 முதல் மற்றும் அதன் பின்னர் நடைபெற்ற இடைத்தேர்தல்களில் ஊராட்சித் தலைவர் மற்றும் வார்டு உறுப்பினர்கள் பதவிகளுக்கு வேட்பு மனு தாக்கல் செய்யப்படவில்லை.

கீரிப்பட்டி ஊராட்சி உசிலம்பட்டியிலிருந்து வடகிழக்கில் 7 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இவ்வூராட்சியில் கீரிப்பட்டியும், போலியம்பட்டியும் உள்ளன. இவ்வூராட்சியின் மக்கள் தொகை 1,717 ஆகும்.

கடந்த அக்டோபர் 1996இல் நடைபெற்ற ஊராட்சித் தேர்தலில் இவ்வூராட்சியின் தலைவர் பதவி ஆதிதிராவிடருக்கு ஒதுக்கப்பட்டது. இதனை ஊரைச் சேர்ந்தவர்கள் மறுத்தனர். அதனால் கடந்த அக்டோபர் 1996 முதல் ஊராட்சித் தேர்தல்களில் பங்கேற்காமல் இருந்து வந்தனர். கடந்த அக்டோபர் 2001 ஊராட்சித்

தேர்தலிலும் வேட்பு மனுக்கள் பெறப்படவில்லை. ஏப்ரல் 2002இல் நடைபெற்ற தேர்தலில் இவ்வூரைச் சேர்ந்த திரு.பெ.பூங்கொடி என்பவர் ஊராட்சித்தலைவர் வேட்பாளராக நிறுத்தப்பட்டார். உடனே ஊர் மக்களின் சார்பில் திரு.வை.கருத்தக்கண்ணன் என்பவர் தலைவர் தேர்தலுக்கு நிறுத்தப்பட்டார். தேர்தலில் திரு.வை.கருத்தக்கண்ணன் என்பவர் 341 வாக்குகள் பெற்று 18.04.2002இல் ஊராட்சித்தலைவராக பொறுப்பேற்று 20.04.2002இல் பதவியை வேண்டாம் என்று எழுதி கொடுத்தார்.

கடந்த அக்டோபர் 2002இல் நடைபெற்ற தேர்தலில் திரு.க .கட்டைராமன் மற்றும் திரு.க. மாயக்காளை ஆகிய இருவரும் ஊராட்சித் தலைவர் பதவிக்கு வேட்பு மனு அளித்தனர். வெளி ஆட்கள் கட்சியின் சார்பில் வேட்பளராக நிறுத்தப்படக்கூடும் என்று எதிர்பார்ப்பில் நின்றனர். பிறகு யாரும் நிற்காததால் 26.9.2002இல் தங்களின் வேட்பு மனுவைத் திரும்பப் பெற்றுக் கொண்டனர். கடந்த ஏப்ரல் 2003 நடைபெற்ற தேர்தலிலும் திருவாளர்கள் அ.குப்பன் மற்றும் திரு.க. காளியப்பன் வேட்பு மனுவை அளித்தனர். வெளி ஆட்கள் கட்சியின் சார்பில் மனு செய்யாததால் இவ்விருவரும் 27.3.2003 அன்று தங்கள் வேட்பு மனுக்களைத் திரும்பப் பெற்றுக் கொண்டனர்.

அக்டோபர் 2003இல் நடைபெற்றுள்ள தேர்தலின்போது மீண்டும் தேர்தல் நடத்துவதற்கான சாத்தியக் கூறுகளை ஆய்வு செய்யவும் கூட்டம் நடைபெற்றது. மேலும் மக்களை சந்திப்பதற்காக அமைச்சர்கள் நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய உயர்மட்டக்குழு அமைக்கப்பட்டது. இக்குழு மாவட்ட நிருவாகம் மற்றும் கீரிப்பட்டி, பாப்பாபட்டி மற்றும் நாட்டார்மங்கலம் ஊராட்சியைச் சேர்ந்த முதன்மையானவர்களுடன் கலந்துரையாடியது. பிறகு இக்குழு பொதுமக்களையும் சந்தித்து உரையாடியது. ஆனால் பலன் இல்லை.

பாப்பாபட்டி ஊராட்சி உசிலம்பட்டியிலிருந்து வடகிழக்கில் 10 கி.மீ. தொலைவில் உள்ளது. இவ்வூராட்சியில் பாப்பாபட்டி, பேயம்பட்டி, கறையாம்பட்டி மற்றும் பகாதேவன்பட்டி ஆகிய ஊர்கள் உள்ளன. இவ்வூராட்சியின் மக்கள்தொகை 2,429. கடந்த அக்டோபர் 1996இல் நடைபெற்ற ஊராட்சித் தலைவர் அட்டவணை வகுப்பினருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதனை ஊரைச் சேர்ந்தவர்கள் ஏற்றுக் கொள்ளாமல் இருந்ததால் பலமுறை தேர்தலில் பங்கேற்காமலும் அல்லது பங்கேற்று பதவியை திரும்ப ஒப்படைத்த நிகழ்வுகள் தொடர்ந்து நடந்து கொண்டே இருந்தன.

மேற்கண்ட மூன்று இடங்களிலும் 1996 முதல் 2005 முடிய 16 முறை தேர்தல்கள் நடத்தப்படும் எவரும் போட்டியிட முன்வராதநிலை அல்லது போட்டியிலிருந்து இறுதி நாளன்று மனுக்கள் திரும்பப்பெறும் நிலை அல்லது பதவியேற்றவுடனே பதவி விலகல் போன்றவை நடந்தன.

கீரிப்பட்டி, பாப்பாபட்டி, நாட்டார்மங்கலம் மற்றும் விருதுநகர் மாவட்டம் கொட்டக்கச்சியேந்தல் ஆகிய ஊராட்சிகளில் ஜனநாயக நடைமுறைகளை செயல்படுத்துவதிலும், தாழ்த்தப்பட்டோர் உரிய பொறுப்புகளுக்கு வரஇயலாத நிலையினையும் உணர்ந்து பெருவாரியாக மக்கள் கருத்தினையும் கருத்தில்கொண்டு எவ்வகையிலேயேனும் அந்த நான்கு இடங்களிலும் ஒதுக்கீட்டினை மாற்றாது செயலாக்க தமிழ்நாடு அரசு உறுதியான/உணர்வுபூர்வமான நடவடிக்கை எடுத்தது.

மேற்கண்ட மூன்று ஊராட்சிகளிலும் உள்ள அனைத்துத் தரப்பு மக்களுடனும் உரிய வகையில் முறையாகப்பேசி அவர்களை 2006 தேர்தல்களில் பங்குகொள்ள மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.உதயசந்திரன், இ.ஆ.ப. அவர்களால் மாவட்டத்தில் ஒத்த கருத்து உள்ளவர்களையும், சம்மதம் உள்ளவர்களையும் சேர்த்து தொடர்ச்சியான, உறுதியான முயற்சிகொண்டு அதன் விளைவாக ஊராட்சிகளில் உரிய வகையில் தேர்தல் நடத்தப்பெற்றது. தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு காவல்துறை மூலம் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது. "மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.உதயசந்திரன்,இ.ஆ.ப., விருதுநகர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஜவஹர், இ.ஆ.ப., தமக்கிருந்த அதிகாரத்தை வைத்தே சாதுர்யமாக, தெளிவான திட்டத்தை உருவாக்கி வெற்றி கண்டு இருக்கிறார்கள்" என தினமணி இதழ் "மீண்டும் தழைத்தோங்கிய ஜனநாயகம்" என்ற கட்டுரையில் குறிப்பிட்டது எடுத்துக்காட்டவேண்டியதாகும்.

தமிழக அரசு தொடர்ந்து இவ்வூராட்சி மக்களை ஊக்குவிக்க பல்வேறு திட்டங்களுக்கு ரூ. 95.49 இலட்சம் மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யவும், தனிநபர் மற்றும் சுய உதவிக்குழுவுக்கு கடன் மற்றும் மானிய உதவிகள் சுமார் ரூ.106.72 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கவும், மேலும் பல்வேறு திட்டங்களுக்கு ரூ.30 இலட்சம் வழங்கவும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 8.11.2006 அன்று கீரிப்பட்டி, பாப்பாபட்டி, நாட்டார் மங்கலம், கொட்டக்கச்சியேந்தல் ஊராட்சித் தலைவர் களும், ஊர்மக்களும் கலந்துகொண்ட சமத்துவப் பெருவிழா சென்னையில் சிறப்பாக நடைபெற்றது.

இந்த ஊராட்சிகளுக்கு 29.11.2006இல் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் நேரில் சென்று மக்களை சந்தித்து ஊக்கப்படுத்தினார். பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

– சிவ.சு. சரவணன்,
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர், மதுரை.

# கோ-ஆப்டெக்ஸ் நடத்திய தேசிய கைத்தறிக் கண்காட்சியில் ரூ.3.12 கோடிக்கு கைத்தறித் துணிகள் விற்பனை



மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு. என்கேகே.பி. ராஜா அவர்கள் கூறியுள்ளதாவது :

கைத்தறி இரகங்களின் சீர்மையை வாடிக்கையாளர்கள் அறியும் வகையிலும், அதனை மேலும் ஊக்குவிக்கும் வகையிலும், நாட்டின் முக்கிய நகரங்களில் தேசிய கைத்தறிக் கண் காட்சியினை மத்திய ஜவுளி அமைச்சகத்தைச் சார்ந்த கைத்தறி அபிவிருத்தி ஆணையம் ஏற்பாடு செய்து வருகிறது. 2004ஆம் ஆண்டிற்குப் பின் தேசிய கைத்தறித் கண்காட்சியை தமிழகத்தில் நடத்த அனுமதி வழங்கப்பட்டது. தேசிய கைத்தறி எக்ஸ்போ–2007 கண்காட்சியை கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் நடத்த ஆணையிடப்பட்டது.

தேசிய கைத்தறி எக்ஸ்போ–2007 கண்காட்சி சென்னையில் 15.3.2007 அன்று மாண்புமிகு தமிழக நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்களால் சிறப்பான முறையில் தொடங்கி வைக்கப்பட்டு 2.4.2007 வரை மிக எழுச்சியோடு நடைபெற்றது. இந்த தேசிய கைத்தறிக் கண்காட்சியில் அனைத்து மாநிலத்தின் கைத்தறித் துணிகள் ரூ.3.12 கோடிக்கு விற்பனை செய்யப்பட்டன.

கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் மூலம் தயார் செய்யப்பட்ட புதிய இரகத் துணிகளான ஆயத்த ஆடைகள் மற்றும் புதிய வகையான ஜீன்ஸ் துணிவகைகள் மாண்புமிகு மத்திய ஜவுளித்துறை இணை அமைச்சர் திரு. ஈ.வி.கே. எஸ்.இளங்கோவன் அவர்களால் 25.3.2007 அன்று இக்கண்காட்சியில் அறிமுகப்படுத்தப்பட்டது. 25.3.2007 அன்று புதையல் வேட்டை நடத்தப்பட்டு, அதில் வெற்றி பெற்றவர் களுக்கு மாண்புமிகு தமிழக செய்தித்துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி அவர்களால் பரிசுகள் வழங்கப்பட்டன.

இக்கண்காட்சியில் காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை உள்ள அனைத்து இரக கைத்தறித் துணிகள் விற்பனைக்கு வைக்கப்பட்டன. ஆந்திரா, அரியானா, புதுச்சேரி, ஒரிசா, ராஜஸ்தான், பஞ்சாப், குஜராத், மேற்கு வங்காளம், உத்திரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், ஜம்மு–காஷ்மீர் மற்றும் தமிழ்நாடு ஆகிய 12 மாநிலங்களின் கைத்தறித் துணிகள் அரங்குகளில் வைக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டன. மேலும், தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் உள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் தயார் செய்த பட்டு மற்றும் கைத்தறித் துணிகள் விற்பனை செய்யப்பட்டன.

கைத்தறிக் கண்காட்சியைப் பார்க்க வருகை தந்த பொதுமக்களுக்கு, மாலை 6.30 மணி முதல் இரவு 9.00 மணி வரை கண்காட்சித் திடலில் உள்ள அண்ணா கலை அரங்கில் நாள்தோறும் புகழ்பெற்ற கலைஞர்களின் இயல், இசை, நாடகத் தமிழ் மற்றும் வில்லிசை, மெல்லிசை நிகழ்ச்சிகளும் தமிழகம் மற்றும் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த கல்லூரி மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் கிராமியக் கலை நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன. பள்ளி மற்றும் கல்லூரி மாணவ மாணவியர்களுக்கான ஆடை அலங்காரப் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன.

இக்கண்காட்சியில் பல்வேறு மாநில அரங்குகளில் பணி செய்த 300 பணியாளர்கள் தங்குவதற்காக இட வசதி செய்து தரப்பட்டது. கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தைச் சார்ந்த சுமார் 100 பணியாளர்கள் சிறப்பாகப் பணியாற்றினார்கள். 15.3.2007 முதல் 2.4.2007 வரை நடைபெற்ற இக்கண்காட்சிக்கு சுமார் 3 இலட்சம் பொதுமக்கள் வருகைதந்து சிறப்பித்தனர்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களின் தலைமையில் இயங்கும் அரசு நடத்திய இந்த கைத்தறிக் கண்காட்சி தமிழகம் மற்றும் அனைத்து மாநிலத்தில் வாழ்கின்ற நெசவாளர்கள் பயன்பெறும் வகையில் அமைந்திருந்தது. ★



# மாநிலம் முழுவதும் ஒரே மாதிரியான புதிய வேகத்தடைகள்

**சா**லைகளில் செல்லும் மோட்டார் வாகனங்களின் வேகத்தைக் கட்டுப்படுத்தவும், அதே சமயம் பயணிக்கும் வாகனத்துக்கும், அதிர்வு தராமல் நிதானமான பயணத்தைத் தொடரும் வகையிலும் நவீன வேகத்தடைகளை தமிழ்நாடு அரசு நெடுஞ்சாலைத்துறை சோதனை முறையில் அமைத்துள்ளது.

சாலை விபத்துக்களை தவிர்க்கும் பொருட்டு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உத்தரவிட்டதையடுத்து நவீன வேகத்தடைகள் உருவாக்க முடிவு செய்யப்பட்டது. ஒவ்வொரு சாலையிலும் வெவ்வெறு வடிவங்களில் வேகத்தடைகள் அமைக்கப் பட்டு அதனால் ஏற்படும் தேவையற்ற குழுப்பங்களைத் தவிர்க்க மாநிலம் முழுவதும் ஒரே அளவிலான வேகத்தடைகள் அமைக்க நெடுஞ்சாலைத்துறை முடிவு செய்துள்ளது.

**புதிய வடிவமைப்பு**

புத்தம் புதிய வடிவமைப்பை கொண்டுள்ள இந்த வேகத் தடைகளின் உயரம், 25 மி.மீ. முதல் 40 மி.மீ. வரையில் இருந்து 100 மி.மீ வரை ஒரு சீராக உயர்ந்து – பிறகு, அதே சீராக குறைந்து விடுகிறது.

ஓட்டுனரை முன் கூட்டியே எச்சரிக்கும் விதமாக புதிய வேகத்தடைகள் வெள்ளை, கறுப்பு மற்றும் மஞ்சள் வர்ணம் பூசப்பட்டு காட்சி தருகின்றன. இவை இரவிலும் மிளிரும் தன்மை கொண்டதாகும். அத்துடன் தானாக மிளிரும் தன்மையுடைய பூனைக் கண் விளக்கும் பொருத்தப்பட்டுள்ளது. புதிய வடிவமைப்பு காரணமாக வேகமாக வரும் வாகனங்கள் நிதானமாக ஏற்றம் இறக்கம் பெறும், அதே சமயம் பயணிகள் அதிர்வு அடையும் அனுபவத்தை பெற்றிடமாட்டார்கள்.

**சோதனை முறையில் ஆரம்பம் :**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் திரு. வெள்ளக்கோவில் மு.பெ. சாமிநாதன் அவர்களின் வழி காட்டுதலின்படி கோவை, ஈரோடு ஆகிய மாவட்ட நெடுஞ்சாலைகளில் சோதனை முறையில் இந்த நவீன வேகத்தடைகள் அமைக்கப்பட்டு உள்ளன. முதற்கட்டமாக வெள்ளக்கோவிலில் வெள்ளோட்டம் பார்க்கப் பட்டு இத்திட்டம் வெற்றி பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்து நெடுஞ்சாலைகளிலும் பல்வேறு கட்டங்களில் இந்தப் புதிய நவீன வேகத்தடைகளை அமைக்க தமிழ்நாடு அரசு நெடுஞ்சாலைத்துறை திட்டமிட்டு வருகிறது. தொடக்கக்கட்டமாக மாநிலம் முழுவதும் ஆயிரம் வேகத்தடைகள் அமைக்கப் படவுள்ளன.


கோ-ஆப்டெக்ஸ்
விக்ரமாதித்தன்
வேதாளத்திற்கு சொல்லும் பதில்
நான் கேட்கிற 3 கேள்விகளுக்கு சரியான பதில் இல்லன்னா உன் தலை வெடிச்சிடும்.
கோ-ஆப்டெக்ஸ் பட்டுப் புடவைகளுக்கும் மற்ற கடைகளில் உள்ள பட்டுப் புடவைகளுக்கும் வித்தியாசம் என்ன?
கோ-ஆப்டெக்ஸ்ல இருக்கிற பட்டு சேலைகள் எல்லாமே 3 பட்டு இழைகள் சேர்த்து முறுக்கிய பட்டு நூலினால் நெய்யப்படுகிறது. ஆனால் மற்ற இடங்களில் ஒரே நூலில் நெய்யறாங்க. ஆதலால் கோ-ஆப்டெக்ஸில் வாங்குகிற பட்டுப் புடவைகள் தரமானதாகவும், நல்லாவும் உழைக்கும்.
கோ-ஆப்டெக்ஸில் துணி வாங்குவதால் யாருக்கு இலாபம்?
கோ-ஆப்டெக்ஸ்ல துணி வாங்கினா அந்தப்பணம் நேரடியா 2 இலட்சம் நெசவாளர் குடும்பங்களுக்கு போய் சேரும்.
கோ-ஆப்டெக்ஸில் துணிகளின் தரத்திற்கு என்ன உத்திரவாதம்?
கோ-ஆப்டெக்ஸ் துணிகளின் தரமே அதற்கு உத்திரவாதம். பட்டுக்கு சில்க் மார்க், கைத்தறி துணிகளுக்கு கைத்தறி மார்க் சான்றிதழ்கள் கிடைக்கப்பெற்ற முதல் நிறுவனம் கோ-ஆப்டெக்ஸ் தான்.
பதில் டக்கரா இருக்கு
சிறப்புத் தள்ளுபடி 30%
தலைமுறைகளாய் தொடரும் பந்தம் - கோ-ஆப்டெக்ஸ்

தமிழரசு

R.N.I. No.21446/70-Regn.No.TN/ARD/48/06-08
TN/PMG(CCR) WPP-518/06-08

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் தலைமையில்
உள்ளாட்சித் தலைவர்கள் கருத்தரங்கம்
சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்றது. (18.3.2007)



